Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
மார்ச் 24–30, 1996

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 146



நெத்தியடியான தகவல்

## வானத்தில் ஒரு இரகசியம்

## இலண்டனில் கேட்கும் பிரபாவின் குரல்

## ஊர்வசி விரட்டிய இயக்குநர்

## நடிகர்–நடிகையர் கிரிக்கெட் போட்டி

# முரசம்

## கிரிக்கெட் திருவிழா

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

கிரிகெட் திருவிழா
அனைவரையும் வளைத்து
தன்னை நோக்கி இழுத்துவைத்திருந்தது.

இன-மத-பால்-வயது
வித்தியாசமில்லாமல்
சகல தரப்பினரும் இரசித்தார்கள்.

தொலைக்காட்சிகளுக்கு
புதிய நிகழ்ச்சிகள் தயாரிக்கும்
சிரமமே இல்லாமல்
நடந்து முடிந்த போட்டிகளையும்
மறு ஒளிபரப்பு செய்ய முடிந்தது.

ஒரு காலத்தில்
ஆண்களை மட்டுமே கவர்ந்த
கிரிக்கெட்
இப்போது பெண்களையும்
தன்பக்கம் வசியப்படுத்திவிட்டது.

பாமரர்களையும் கவரும்
பணம் கொழிக்கும் விளையாட்டு,
நாடுகளுக்கிடையிலான
கௌரவப் போராக மாறுவதுதான்
மிகப் பெரிய சோகம்.

வெற்றி-தோல்வியை
ஏற்றுக்கொள்ளும் பக்குவம்
விளையாட்டிலிருந்துதான் ஆரம்பம்.
விளையாட்டுக்களின் நோக்கமே
அதுதானே!

எந்த நாட்டு அணியாக
இருந்தாலும்,
திறமையாக விளையாடினால்
பாராட்டும் பக்குவமும் வளர்வது,
நாடுகளுக்கிடையே மட்டுமல்ல,
மனிதர்களுக்கிடையேயும்
பரஸ்பர உறவுகள் வளர உதவும்!

தமது சொந்த விருப்பத்திலிருந்து
விஷயங்களை அணுகுவது,
அதற்கு மாறாக நிகழ்ச்சிகள்
செல்லும் போது
வெறுப்புக் கொள்ளவே இடமளிக்கும்!
விரக்தி வளரவே வழி செய்யும்!

விரும்பிய அணி வெல்ல வேண்டும்
என்று நினைப்பது இயல்புதான்.
அதற்காக மற்றொரு அணி
திறமையாக ஆடி ஜெயித்தால்

மனம் கோணக்கூடாது!

நமது மனங்களை
விரித்துக் கொள்ளவேண்டும்.
ஒரு வட்டத்திற்குள்
குறுக்கிவைத்துக் கொள்ளக்கூடாது.

இது விளையாட்டுக்கும் பொருந்தும்;
வாழ்க்கைக்கும் பொருந்தும்;
தீராத பிரச்சனைகளுக்கு
தீர்வு காணவும் உதவும்!

எனவே-திறமையாக ஆடி
உலகக் கிண்ணம் வென்றவர்களை
உளம் திறந்து பாராட்டுவோம்!

இம்முறை தோல்வி கண்டவர்கள்
அடுத்துவரும் போட்டிகளில்
வெற்றிகாண வாழ்த்துவோம்.

எல்லோரும் இன்புற்றிருக்கவே
விளையாட்டுக்கள்-யாருமே
துன்புற்றிருக்க வேண்டாம்!

நம்நாட்டு அரசியலும்
கிரிக்கெட் மாதிரித்தான்.

அரசியல் தீர்வு யோசனை
என்ற பந்தை
அடித்தாடுவதா அல்லது
மட்டைபோட்டுக் கொண்டிருப்பதா?
என்று யோசித்துக் கொண்டிருக்கிறது
பிரதான எதிர்க்கட்சி.

"பந்தே சரியில்லையே!
இதைவைத்து என்ன ஆட்டம்?"
என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்
இனவாதிகள்!

ஆட்டம் விரைவாக முடிந்து
இறுதி முடிவு தெரிந்தால்தான்
நல்லது என்பது
தமிழ் பேசும் மக்களது அபிப்பிராயம்!

ஆனால், விரைவாக ஆட்டத்தை
முடித்துவைக்க
ஆளும் தரப்பும் தயாராக இல்லை;
எதிர்த்தரப்பும் தயாராக இல்லை.

இது ஒருநாள் போட்டியல்ல;
நீண்டநாள் இழுக்கும்
'டெஸ்ட்' போட்டி!

முக்கியமான இருதரப்பிடமும்
உற்சாகம் தென்படவில்லையாதலால்
முடிவு ஏமாற்றமளிக்கலாம்
என்பது பார்வையாளரின் அபிப்பிராயம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்

### முக்காட்டின் முக்கியத்துவம்

தேவ சமூகத்துக்கு முன் வரும் ஒவ்வொரு பெண்ணும் தன் மயிரை மறைத்துக் கொள்ள முக்காடிட வேண்டும் என பரிசுத்த வேதாகமம் வலியுறுத்துகின்றது.

"ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்க தரிசனம் சொல்கிற போதாவது தன் தலையை மூடிக் கொள்ளாத எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்."

1 கொரி: 11:5

"ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின் மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்."

1 கொரி: 11:10

பரிசுத்த வேதாகமம் கூறும் இவ்வறிவுரை குடும்பப் பெண்கள் அனைவர்க்கும் பொருத்தமுள்ளதாகையால், இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சிந்தித்தல்; செயல்படல் சிறந்ததாகும்.

**ரூபராஜ் தேவதாசன்-கெங்கல்ல.**



### அலி(றழி) அவர்களின் அற்புத போதனைகள்

* உண்மையாகவே நாவு ஒரு காட்டு மிருகம். அதை அவிழ்த்து விட்டால் மிக ஆபத்துத்தான்.
* உனக்கு அதிர்ஷ்டகாலம் இருக்கும் வரைதான் உன்குறைகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும்.
* உங்களிடம் இல்லாத நற்குணங்கள் உங்களிடம் இருப்பதாகக் கூறி புகழும் ஒருவன், அடுத்த மூச்சில் உங்களிடம் இல்லாத குறைகளைக் கூறியும் உங்களைத்தூற்றுவான்.
* கால் இடறினால் காயம் ஏற்படும். வார்த்தை தவறினால் வம்புதான் விளையும்.
* கற்றவன் கண்களாலும் உள்ளத்தாலும் பார்ப்பான். முட்டாளோ கண்களால் மட்டுமே பார்ப்பான்.
* ஒருவன் எவ்வளவுதான் தனது இரகசியங்களை மறைத்து வைத்திருந்தாலும் அவனது நாவின் சுழற்சியாலும் முகத்தின் மாறுதலினாலும் அவை தெளிவாகி விடுகின்றன.
* சிந்தித்த பின் செயலாற்றுக; அதனால் யாவும் சிறப்பாக முடியும்.
* கோழையாய் இருப்பவனது வாழ்வில் என்றுமே இன்பம் காணமுடியாது.
* மனிதரில் எவன் தன்னை பெரியவன் என்று கருதுகிறானோ அவனே மிக கீழான மனிதனாவான்.

**ஆக்கம்:-வ.பிர்தௌஸ், கிண்ணியா-03.**

## கவிதைப் போட்டி இல-143

### —பரிசுக்குரிய கவிதை—



### கவனம் கண்ணம்மா

அமைதியிளம் தேவதையே கண்ணம்மா,
கிட்ட வருதல் வேண்டாம்!
கெட்ட குண்டெனவே உன்னையே
சுட்டு விடுவார்கள் கிளியே!
சந்தேக உலகமடி கிளியே!
அடியே கண்ணம்மா,
அடையாள அட்டையுண்டோ?

**எம். சுந்தரேசன், மின்சார நிலைய வீதி, திருமலை.**

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

#### அவள்–இவளோ...?

எனக்கொரு காதலி
இருக்கின்றாள்
அவள்
இவளைப் போலவே
இருக்கின்றாள்...
தனக்கெனப் பாதை
வகுக்காமல்
என்
கனவுப் பாதையில்
நடக்கின்றாள்...

**கொக்காகல-எஸ்.பிரபா.**

#### எந்த வனப் பூ?

நந்தவன பூக்களெல்லாம்
நாணித் தலைகுனிய
வெண் திரைக்குள் பூத்த மோகம்
எந்த வனப் பூவிதுவோ?

**செல்வி. இமெல்டா ஷர்மிலி, மட்டக்களப்பு.**

#### பறப்பு....!

இந்தப் பெ(வெ)ண் புறா
சிறகை விரிக்கிறது
இலங்கையை விட்டுப்
பறப்பதற்கு......

**சுபாவரன்- கண்டி.**

#### வந்துவிட்டாள்

சமாதானத் தேவதை
தரையிறங்கி வந்துவிட்டாள்
"தரித்திரம்" தந்த போரை
சாக்கடையில் தள்ளிவிட.....!

**வம்மிக்கேணி-பொன்வளவன், ஆரையம்பதி-2.**

#### ஈந்தனளோ?

வாசமுள்ள ரோசாவே
பாசம் நிறை பூங்குயிலே
ஆசையுடன் இதயமதை
நேசன் கை ஈந்தனையே..?

**எஸ்.எல். சறூக்-ஏறாவூர்.**

#### புரியாத வேகம்!

கருவிழியோ கதைபல சொல்லும்
காவியத் தென்றலும் கனிந்ததில் வீசும்!
உவமையும் உருகும் இவள் தேகத்தை
உற்றுப் பார்க்கையில் ஒரு தாகம்!
என் உள்ளத்திலும் புரியாத ஒரு வேகம்!

**ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-2.**

#### வரம் வேண்டும்.

இந்நானிலத்து கொடுமைகண்டு
வானிலே அவதரித்த
வரம் கொடுக்கும் தேவதையே!.
நின் ஏந்திய கரங்களுக்குள்
ஏராள விண்ணப்பங்கள்.....!
அனைத்திலுமே
"வேண்டும் தாயே சமாதானம்"
என்ற வேத(னை) ஓலங்கள்.

**செல்வி.எஸ்.வாணீஸ்வரி-அப்பர்கலஹா.**

#### இன்ப ஆட்சி

கருமுகிலிடை யினின்றும் வெளியுலாவந்த
கண்கவர் வண்ண மதி தானோ?
அரும்புகின்ற மலருக்குள் அடங்கி நின்ற
அன்றலர்ந்த சின்ன மலர்தானோ?
பருவமங்கை வதனம் பளபளத்து எட்டி
பார்க்கையிலே தோற்றுகின்ற காட்சி,
கருவாகி மனதில் கனிவாக நின்று
உருவாக்குதே இன்ப ஆட்சி!

**பசறையூர் மல்லிகா பத்மநாதன்.**

#### திருட்டு

தரையில் உலவும் வான்நிலவே!- என்
இதயம் கவர்ந்த தேன் இதழே
திரையை நீக்கிடு பைந்தமிழே- உன்
வதனம் கண்டிட எனதுள்ளமே
ப்ரியங்களுடன்.....,

**நிட்டம்புவ-கலாயுவன்.**

#### ஏன் புன்னகை?

காலங்கள் கருகிவிடும்
போர் தேசத்தில்
உனக்கு எதற்கு
மோனாலிசா புன்னகை?

**எம்.எம். ஸன்பர்-கிண்ணியா-06**

#### நிலாப்பெண்

முகில்வெள்ளம் மூடும்திரை
முகம் வெல்லும் மூன்றாம் பிறை.


**நீர்கொழும்பு- நிலா ஸ்நேகி.**

#### நீயுமா?

சமாதானப்
புறாதான்
எங்கள் தேசம்விட்டு
பறந்தது;
தேவி!
நீயுமா....?

**ஹஜேந்தினி மகேந்திரன், மட்டக்களப்பு.**

## கவிதைப் போட்டி இல-146



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.03.1996.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 146. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## வாசக(ர்) சாலை



**"தூள்பரத்தும் தொடர்கள்!"....**

அடிக்கரும்பாய் இனிக்கும் "தேன் கிண்ணம்" பகுதியில்; இடைக்கிடை மணியான "மரபுக்கவிதை"களையும் அன்புடன் அளிக்கும்.... "ப்ரிய முரசுக்கு", நன்றி கலந்த பாராட்டு!

வாராவாரம் வாசகர்களை வசீகரிக்க; மீண்டும் மகிழ்ச்சியிலாழ்த்த "அபிமான ஹீரோ! கார்லோஸின்" வாசவரவுக்கு; "பூச்செண்டுகளோடு" நிற்கிறோம்!.. கூடவே, "தூள்பரத்தும்" திகில் தொடர் "நீநீயா?"...வும் "தொடர்கதைப் ப்ரியர்களை" மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடிக்கின்றன!...

**முத்துமணி, பதுளை.**

எக்ஸ்ரே ரிப்போர்ட், ராஜதந்திரியின் அரசியல் அலசல் இரண்டும் முரசின் அரசியல் பார்வையில் இருகண்கள். நாரதர் தரும் தகவல்கள் பிரமாதம்.

**மா.பர்வின், குருநாகல்**

விகாரை வளாக ஆயுத விவகாரத்தை சில ஆங்கிலப் பத்திரிகைகள் குழப்பியுள்ளன. குருவைக் காப்பாற்றும் ஆவல்தான் காரணம். முரசு மட்டுமே உண்மைத்தகவலை வெளியிட்டது. பாராட்டுக்கள்.

**சி.புவனேந்திரன், கொழும்பு-10.**

காதிலை பூ கந்தசாமியின் அரசியல் குத்தல்கள் அபாரம். கூட்டணித் தலைவரின் கற்பனைப் பேட்டி அசத்தல். யாரந்த காதிலை பூ கந்தசாமி?

**என்.சசிரேகா, மட்டக்களப்பு.**

ராஜேந்திரகுமாரின் 'நீ நீயா' எளிமையான நடையில் துள்ளிச் செல்கிறது. கார்லோஸ் மீண்டும் ஆஜராக அனுமதித்த ரசிகனுக்கு நன்றி.

**எல்.என்.முனைவர், கல்முனை.**

கிரிக்கெட் செய்திகளை சுருக்கமாகவும் விளக்கமாகவும் தந்த முரசுக்கு ஸ்பெஷல் வாழ்த்துக்கள்

**எஸ்.வரதன். வி.தோமஸ், கொழும்பு-14.**

தினமுரசு வார மலரே! உன்னை சுவைக்காத நாளில்லை. லேடீஸ் ஸ்பெஷல் என் அபிமானப் பகுதியாகும். லேடீஸ் ஸ்பெஷல் பகுதியில் விளையாட்டு பகுதியை சேர்த்து இருப்பது எவ்விதத்திலும் பொருத்தமில்லை. எனவே பெண்களுக்காகவே ஒதுக்கப்பட்ட பகுதி பெண்களுக்காகவே இருக்க வேண்டும்!.

**நிஹாரா ஜுனைதீன், தெல்தோட்டை.**

அன்புமுரசே!

நீ வாராவாரம் அள்ளித்தரும் அத்தனை அம்சங்களும் ஜோர். குறிப்பாக நாரதரும், ஜயாத்துரையரும் என் உள்ளத்தை தொட்டு நிற்கிறார்கள். தன் காதலிக்காக காத்திருக்கும் காதலன் போல் ஒவ்வொரு வாரமும் வழி மேல் விழிவைத்துக் காத்திருப்பேன் உன் வரவுக்காக. உன் பணிதொடர என் வாழ்த்துக்கள்.

**பூ.இதயரெத்தினம், மட்டக்களப்பு.**

கார்லோசை பாராட்டுவதா-"புத்திக்காக" ரசிகனை பாராட்டுவதா -"நடைக்காக" தினமுரசை பாராட்டுவதா-"கதையை தருவதற்காக?"

**சுபாவரன், கண்டி.**

காதுல பூ கந்தசாமியாரே! இரசிகனை கண்டு பிடிக்க ஒரு 'க்ளு' கொடுங்களேன்!

**எஸ்.பத்மா, உமாஜினி, நவ்சாத், கொழும்பு-10.**

அன்பான முரசே,

விறுவிறுப்பூட்டும், சுறுசுறுப்பூட்டும் ராஜேந்திரரின் நீ...!நீயா..! கதைத் தொடர் பெ(B)ஸ்ட், அத்தோடு தேன் கிண்ணம், வாரம் ஒரு நாடு போன்றவையும் சூப்பர்.

**செல்வி:- சாந்தினி இராமன், மொனறாகலை.**

உள்ளத்தை 'டச்' செனத் தொடும் சின்னஞ்-சிறுகதைகளுக்கென உரிய இடம் தரும் முரசுக்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள்...!

**எம். ஆர்.மொஹமட், ரிஸ்வான், வல்கம, மல்வானை.**

ஆயுதக் கப்பல் விவகாரத்தில் முரசும் இந்தியாவை குற்றம் சாட்டிவிட்டதே. எக்ஸ்ரே ரிப்போர்ட் தகவலில் இந்தியா இலங்கைக்கு உதவியதைக் காட்டியிருந்தீரே!.

**பா.தெய்வேந்திரன்-கொழும்பு-06.**

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:**

* ஏ. அமானுல்லாஹ், புத்தளம்.
* மு.சந்திரமதி, கொழும்பு-13.
* ஏ.சி.எம். முஸம்மில், கம்பளை.
* சந்திரசேகரன் தமிழ்ச்செல்வி, திருக்கோணமலை.
* சி. சுமதி, தெஹிவத்தை, பதுளை.
* கே. அன்ஸார், கெகிறாவ.
* கே.வி.எம். குமுதினி, புத்தளம்.
* பூபாலபிள்ளை லிங்கன், கல்முனை.
* எம்.எஸ். முகம்மது லாபீர், புல்மோட்டை-01.
* ஏ. ஸதாம் அஸீஸ், மாவதுபொலை.
* செல்வி ஏ. ஜெயராணி, மதுகம.
* ரி. சசிகலா, சாம்பல்தீவு.
* இ. இஸ்ஸத்துல் இம்றான், மூதூர்.
* எம்.எம். முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.
* எஸ்.ரி. ரமீஸ், அக்கரைப்பற்று-06.
* ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள்மடம்.
* வி. விமலதாசன், மட்/முறக்கொட்டாஞ்சேனை.
* ஐ.எல். றஸாக் அமினுதீன், அக்கரைப்பற்று-06.
* பாத்திமா சிபானா சபீக், கல்ஹின்ன.
* புஸ்பா ஜெயகாந்தன், மட்/நாவற்குடா.
* எம். அமிர்தராஜா, மஸ்கெலியா.
* எஸ். ஜெயசுப்பிரமணியம், தலவாக்கலை.
* எம். சிவகுமார், காலி.
* ஏ.எஸ்.மாலன், வவுனியா.
* எம்.எஸ். ரம்ஸியா, பதுளை.
* மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.
* எம்.ஏ.எம். மிஸ்வர், பாணந்துறை.
* கண்ணன், கொழும்பு-13.
* தம்பிஜயா ரவிக்குமார், மட்டக்களப்பு.
* சிவா-சிவானந்தம், வல்வெட்டித்துறை.

டியர் நாரதர்! எக்ஸ்ரே ரிப்போர்ட் மூலம் இன்றைய காலச்சூழலில் கணிப்புக்களை வெகு சிறப்பாக தருவதற்கு பாராட்டுக்கள். பக்கம் சாராமை என்பதுதான் உங்கள் பலம் என்று நம்பலாம்.

**ஏ.காயத்திரி, நேரியகுளம், வவுனியா.**

# மன்னாரில் நடந்த கடற் போர்
## புலிகள் விரித்த வலையில் மூன்று படகுகள்

மன்னார் கடலில் 15.03.96 அன்று கடற்புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நட்த்தினார்கள்.

'ஹொரிசோன்' ஆயுதக் கப்பல்மீது முல்லைக் கடலில் வைத்து மேற்கொள்ளப் பட்ட தாக்குதலுக்கு கடற்புலிகள் பதிலடி கொடுக்கலாம் என்று கடந்தவார முரசில் எக்ஸ்ரே ரிப்போட்டில் குறிப்பிடப்பட்டிருந் தது தெரிந்ததே.

ஹொரிசோன் தாக்குதலுக்கு பதிலடி யாகவே மன்னார் கடல் தாக்குதல் கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15.03.96 அன்று காலைமுதல் மன்னார் கடலில் கடற்புலிகளது படகுகள் ஓடித் திரிந்தன. எங்கோ விநியோக நடவடிக்கை யில் ஈடுபடுவது போல போக்குக் காட்டிக் கொண்டு திரிந்தன.

தமது நடமாட்டம் தொடர்பாக கடற்படை யினருக்கு மீனவர்கள் மூலம் செய்தி எட்டலாம் என்று தெரிந்தே கடற்புலிகள் அவ்வாறு போக்குக்காட்டிக்கொண்டிருந்தனர்.

எதிர்பார்த்ததுபோலவே கடற்படை யினருக்கு தகவல் போனதாகத் தெரிகிறது. கடற்புலிகளது படகுகள் தாக்குதல் ஒன்றுக் காக வலை விரித்திருப்பது கடற்படை யினருக்குத் தெரியாது. கடற்புலிப் படகுகள் விநியோகத்தில் ஈடுபட்டு ஓடித்திரிவதாக கருதியே கடற்படையினர் அவற்றைத் தாக்கு வதற்கு சென்றனர்.

கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் முன்பாக தென்பட்ட ஒரு கடற்புலிப் படகு தப்பி ஓடுவதுபோல பாவனை காட்டிக் கொண்டு சென்றது. அதனைத் துரத்திச் சென்ற கடற்படைப் படகுகள் கடற்புலிகளது வியூகத்தில் சிக்கிக் கொண்டன. நாற்புறமும் சுற்றிவளைத்த கடற்புலிகள் ஒலிகன் ரக பீரங்கிகளால் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பின் படி, கடற்படையினரின் மூன்று அதிவேகப் பீரங்கிப் படகுகள் தாக்கப்பட்டன. பத்துக்கு மேற்பட்ட கடற்படையினர் இறந்துள்ளனர். பீரங்கிப் படகுகளில் இருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முதலாவது பீரங்கிப் படகு கடற் புலிகளின் தாக்குதலில் நீரில் மூழ்கடிக்கப் பட்டது. அடுத்தபடகு தாக்குதலால் சேதமடைந்தது. மூன்றாவது அதிவேக பீரங்கிப் படகு சேதம் எதுவும் இன்றி புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இத்தாக்குதலின்போது கடற்புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 50 ஆட்டிலறி ஏவுகருவிகள்–சில இலட்சம் ஏவுகணைகள்!
## இறுதி யுத்தத்திற்கு தேவை என்று புலிகள் தெரிவிப்பு
## கொள்வனவு செய்ய உதவுமாறு வெளிநாடுகளில் பிரசாரம்

**50 ஆட்டிலறி ஏவுகருவிகளும், அதற்குரிய சில இலட்சம் எறிகணைகளும் தமது இயக்கத்தின் கையில் கிடைத்துவிட்டால் அது தமிழீழம் மலருவதற்கு ஒப்பானது என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.**

### பணத்தேவை

யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது தமக்கு ஏற்பட்ட தோல்விக்கு ஆட்டிலறி பீரங்கிகள் இல்லாததுதான் பிரதான காரணம் என்று புலிகள் தெரிவித்துவருகின்றனர்.

கனடாவில் இருந்து வெளியாகும் புலிகள் அமைப்பினரின் 'உலகத் தமிழர்' பத்திரிகையில் ஆட்டிலறி ஏவுகருவிகளின் தேவை தொடர்பாகவும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அதற்கு உதவி செய்ய வேண்டும் என்றும் கூறப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

"எறிகணைகள், ரவைகள், குண்டுகள், ஆயுதங்கள் என்பவற்றை வெளிநாடுகளில் பணம் கொடுத்தே பெறமுடியும்.

இந்தத் தேவைக்கான பெருந்தொகைப் பணத்தை உலகம் பூராவும் வசிக்கும் தமிழீழத் தமிழர்கள்தான் வழங்கமுடியும்.

வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் மனது வைத்தால் இந்தப் பணத்தேவை ஒரு சிறிய விடயமாகிவிடும்.

வெளிநாடுகளில் எமது இளைஞர்கள் புகைத்தலுக்கும், குடிவகைகளுக்கும் மாதம் ஒன்றுக்கு செலவிடும் பணத்தை போராட்டத் திற்கு வழங்கவேண்டும். அவ்வாறு வழங் கினால் படைக்கல சக்திப் பற்றாக்குறை தீர்ந்துவிடும்.

### 50 நாடுகளில்

உலகில் தமிழர்கள் வசிக்கின்ற 50 நாடுகளில் விடுதலைப் புலிகளின் அலுவல கங்கள் இயங்குகின்றன. அங்கெல்லாம் கணிசமான தமிழர்கள் வசிக்கின்றனர்.

இவர்கள் தாம் வசிக்கும் நாடுகளின் சார்பில்-நாட்டிற்கு ஒரு ஆட்டிலறி ஏவுகருவி என்ற வீதத்தில் கொள்வனவு செய்து, அல்லது அதற்குரிய பணத்தை வழங்கி, தமிழர் படையின் படைக்கல சக்திப் பலத்தை உயர்த்த முடியும்.

50 ஆட்டிலறி ஏவுகருவிகளும், சில இலட்சம் எறிகணைகளும் ஒரு சில மாதங்களில் தமிழர் படைக்கு வந்து சேரு மானால், தமிழீழம் மலர்ந்ததுக்கு ஒப்பான மகிழ்ச்சியை எமது மக்கள் அடைவர்.

ஆளுக்கொரு எறிகணை; நாட்டுக்கொரு ஆட்டிலறி ஏவுகருவி வாங்குவதற்கு உதவு வது வெளிநாட்டில் வாழும் எமது சோதரர் களுக்கு கடினமான காரியமா?" இவ்வாறு உலகத் தமிழர் பத்திரிகையில் வெளியாகி யுள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது. 'தமிழீழத்திலிருந்து ஒரு குரல்' என்ற தலைப்போடு அந்த வேண்டுகோள் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

### வீடியோ படம்

சூரியக்கதிர் இராணுவ நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோ படங்களும் புலிகளால் வெளிநாடு களில் காண்பிக்கப்படுகின்றன.

படைத்தரப்பினர் கனரக ஆயுதங்கள் மற்றும் டாங்கிகளை உபயோகித்துத்தான் முன்னேறினார்கள். அதனால்தான் தமக்கு பின்னடைவு ஏற்பட்டது என்பதை அந்த வீடியோ படங்கள் மூலமாக புலிகள் விளக்கி வருகின்றனர்.

படையினர் பின்னால் வர முன்னால் டாங்கிகள் அரணாக நின்று குண்டுகளைப் பொழியும் காட்சிகள் வீடியோ படங்களில் பதிவாகியுள்ளன.

தமக்கும் அவ்வாறான பலம் தேவை என்று எடுத்துக்காட்டுவதே புலிகளின் நோக்கம்.

# "இனப்பிரச்சனைக்கு சமஷ்டி தீர்வு உதவாது
## தமிழீழமே முடிந்த முடிவு" என்கிறது 'ஈழநாதம்'

இனப்பிரச்சனைக்கு சமஷ்டி தீர்வு தேவை என்று தமிழ் கட்சிகள் கூறிவரு கின்றன. கிளிநொச்சியில் இருந்து வெளி யாகும் புலிகளின் தினசரியான 'ஈழநாதம்' சமஷ்டித் தீர்வு சரிப்பட்டுவராது என்று குறிப்பிட்டுள்ளது.

'ஈழநாதம்' பத்திரிகையில் சமஷ்டித் தீர்வு தொடர்பாக பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

"சமஷ்டி அமைப்பென்பது அங்கத்துவ மக்கள் இடையே வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒரு ஒற்றுமையைக் குறிக்கும். சமஷ்டி அமைப்புக்காக பல வருடங்களாகப் போராடிய எஸ்.ஜே.வி. செல்வநாயகமே அதனைக் கைவிட்டார்.

அவருடைய காலத்திற்கு பின்னர் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடை யேயான அடிப்படை வித்தியாசங்கள் பல வெளிப்படையாக தோற்றம் பெற்றன. ஒரு சமஷ்டி அமைப்பின்கீழ் பொது நோக்கங் களுக்காக சுமுகமாக இயங்குவதற்கு இரு பகுதியினராலும் முடியாத நிலை உருவாகி யுள்ளது.

சமஷ்டி அமைப்பின் கீழ் பாதுகாப்பு மத்திய அரசை சார்ந்த விடயம். முப்படை களையும் மத்திய அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். இதற்கு ஆதரவு வழங்குவது தற்கொலைக்கு சமமான விடயமாகும்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டதால் ஏற்கெனவே தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதிலி ருந்து விடுபடுவதற்கான எமது முயற்சி, சமஷ்டி அரசியலமைப்பு வில்லங்கத்திற்குள் எமது வருங்கால சந்ததியை மாட்டிவிடுவ தாக அமையக்கூடாது.

இன ஒழிப்பு நடவடிக்கைகளும், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை ஏற்றுக் கொள்ளாத போக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு தனிநாடு தேவை என்பதை உறுதிப் படுத்தியுள்ளன.

தமிழ் மக்களின் பொருளாதார மீட்சி அரசியல் சுதந்திரத்தை அடைவதில்தான் தங்கியுள்ளது. தமிழீழம்தான் தமிழர்களைப் பொறுத்தவரை முடிந்த முடிபாகும்," என்று தெரிவித்துள்ளது ஈழநாதம்.

## பெண் அமைச்சர் மீது சந்தேகம்?

உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி வந்த இலங்கை அணி வீரர்களுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா தேநீர் விருந்தளித்து கௌரவித்தார்.

18.03.96 அன்று மாலையில் இந்த தேநீர் விருந்து நடைபெற்றதால், அன்று மாலை நடைபெற்ற அரசாங்க எம்.பிக்கள் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொள்ள முடியவில்லை.

இதேவேளை அரசாங்க எம்.பிக்கள் கூட்டத்திலும், அமைச்சரவைக் கூட்டத்திலும் நடைபெறும் விடயங்கள் பத்திரிகைகளுக்கு கசிவது தொடர்பாக பெண் அமைச்சர் ஒருவர்மீதும், அவரது குழுவினர் மீதும் மேலிடத்திற்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாம்.

குறிப்பிட்ட பெண் அமைச்சர், எதிர்க்கட்சி தலைவருக்கும் பொதுஜன முன்னணி உள் விவகாரங்களைத் தெரியப்படுத்துவதாக சந்தேகம் எழுந்துள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தின் அரசியல் தீர்வு சட்ட நகலை பாராளுமன்ற தெரிவுக்குழு வில் கடுமையாக எதிர்ப்பதற்கு லலித் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

## பொலித்தீன் பையில் புத்தகங்கள்

பாடசாலை மாணவர்கள் தமது புத்தகங்களை பொலித்தீன் பைகள் போன்ற வற்றில்தான் கொண்டுவர வேண்டும் என்று கொழும்பில் உள்ள பாடசாலைகளில் கூறப் பட்டுள்ளது.

தலைநகரில் உள்ள தமிழ் பாடசாலை ஒன்றில், பொலித்தீன் பையில் புத்தகங்களை கொண்டு செல்லாத மாணவிகள் தண்டிக்கப் பட்டனர்.

பாடசாலையில் கூறப்பட்ட பொலித்தீன் பை ஒன்று ரூபா 200 வரை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. அந்தப் பை ஒரு வாரம் கூட தாக்குப் பிடிக்குமா என்பது சந்தேகமே! இந்நிலையில் பண வசதியற்ற பெற்றோர்களால் தொடர்ந்து குறிப்பிட்ட பையை வாங்கிக் கொடுக்க முடியுமா என்பது சந்தேகம்தான். அதனைப் புரிந்துகொள்ளாமல் தண்டனை வழங்கும் ஆசிரியர்கள் குறித்து பெற்றோர்கள் பலர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தலைநகரில் உள்ள சில பிரபல சிங்களப் பாடசாலை மாணவர்கள் தடித்த துணிப் பைகளில் வழக்கம் போலவே புத்தகங்களைக் கொண்டு செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

## பதின்மூன்றுபேர் பலி

மன்னார் கடலில் கடற்புலிகளின் தாக்குதலை அடுத்து மன்னார் நாச்சிக் குடாவில் நடந்த விமானக் குண்டுவீச்சில் 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 60 பொதுமக்கள் படுகாயமடைந்ததாகவும் புலிகளின் குரல் வானொலியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குடிசைகள் பல எரிந்துள்ளதாகவும், மரங்கள் பல அழிந்துள்ளதாகவும் புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது.

"புலிகளுடன் மோதமுடியாத நிலையில் மக்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது" என்று புலிகளின் குரல் குற்றம்சாட்டி யுள்ளது.

## வேலை நிறுத்தும் கைவிடப்படும்?

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கோரி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேலை நிறுத்தம் செய்யவுள்ளதாக அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித் துள்ளார். ஏப்ரல் மாத இறுதியில் வேலை நிறுத்தம் நடக்கலாம் என்றும் கூறியிருக் கிறார்.

ஆனாலும், அதற்கிடையே இ.தொ.காவை அழைத்து ஜனாதிபதி சந்திரிக்கா பேச்சு நடத்துவார் என்றும் அதனைத் தொடர்ந்து வேலை நிறுத்தத் திட்டத்தை அமைச்சர் தொண்டமான் கைவிடலாம் என்றும் கூறப் படுகிறது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கவே வேலை நிறுத்த அறிவித்தலை அமைச்சர் தொண்ட மான் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## புலிகள் மறுப்பு

11.03.96 அன்று மட்டக்களப்பு வெல்லாவெளி பகுதியில் படையினர்மீது புலிகள் நடத்திய தாக்குதல் பாதுகாப்புப் படையினரின் பிரசாரங்களுக்கு பலத்த அடி யாகும் என்று புலிகளது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இரு கடற்புலி முகாம்களை தாக்கியழித்ததாகவும் 200 புலிகள்வரை கொல்லப்பட்டதாகவும் வெளியான செய்தியை புலிகள் மறுத்துள்ளனர். அச்செய்தி வெளியா கிய சில மணி நேரத்தில் வெல்லாவெளியில் தமது அணியினர் தாக்குதல் நடத்தினர் என்று புலிகளின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

புலிகள் நடமாடுவதாக செய்தி அனுப்பி படையினரை முகாமுக்கு வெளியே வரவைத் துத்தான் வெல்லாவெளியில் புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிகிறது.

## வானொலிப் பெட்டியுடன் சோதனை நிலைகளில்!

(ஏறாவூர் நிருபர்)

உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதி நாள் ஆட்ட நிகழ்ச்சியை கண்டும், கேட்டும் களிப்பதில் மட்டக்களப்பு நகரமக்களும் கிராமப்புற மக்களும் தங்கள் தொலைக் காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி களுடன் முடங்கிப் போனதால் மட்டுநகர் சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

சிறுவர் தொடக்கம் வயோதிபர்வரை ஆண்களும் பெண்களுமாக கிரிக்கெட் பற்றிய கதைகளைக் கதைப்பதிலும் வெற்றி சம்பந்த மாக பந்தயம் பிடித்துக்கொள்வதிலும் உணர்ச்சி வசப்பட்டுக் காணப்பட்டனர். சகல வானொலிப் பெட்டிகளும், தொலைக் காட்சிப் பெட்டிகளும் முழுச் சத்தத்துடன் திறந்து விடப் பட்டிருந்ததால் நகர் பேரிரைச் சலாக இருந்தது.

சோதனைச் சாவடிகளிலுள்ள படையின ரும் வானொலிப் பெட்டியுடன்-சோதனை செய்யப்படுவதற்குப் பயணிகள் இன்றி நிம்மதியாக நின்று ஆட்ட நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி யீட்டினால் மறுநாள் விடுமுறை கிடைக்கு மென்பதால் அரச உத்தியோகத்தர்கள் குசியாக இருந்தார்கள். விடுமுறை விடப் படாத மையால் ஏமாற்றம் அடைந்தனர்.

## யுவதிகளிடம் புலிகள் விசாரணை

மட்டக்களப்பிலிருந்து படுவான்கரைப் பகுதிக்கான வாகன போக்குவரத்து தடை செய்யப்பட்டிருப்பதால் அங்கிருந்து மட்டு நகருக்கு வரவேண்டிய பொதுமக்கள் 6 மணித்தியாலங்களுக்கு மேல் கால் நடையாகவே போக்குவரத்துச் செய்ய வேண்டியுள்ளது.

இதேவேளை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வந்தாறு மூலையிலிருந்து புலிகளால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட யுவதிகளிற் சிலர் விடுவிக்கப்பட்டிருப்ப தாகவும் மேலும் சிலர் இன்னமும் விசாரிக்கப் படுவதாகவும் தெரிய வருகிறது. வந்தாறு மூலையில் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து படையினருக்குத் தகவல்கள் வழங்கி னார்கள் என்பதையொட்டியே விசார ணைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப் படுகிறது. விசாரணை செய்யப்படுபவர்களில் அரச ஊழியர்களும் அடங்குவர்.

# இரவு நேரத்தில் யுவதிகள் கடத்தல்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொம்மாதுறை, சித்தாண்டி, சந்திவெளிப் பகுதிகளில் மாலையாகியதும் மக்கள் மரண பயத்தினால் சோபை இழந்துவிடுகின்றனர். சமீப நாட்களாக இனம் தெரியாத ஒரு குழுவினர் வீடுகளுக்கு வந்து பெண்களை அழைத்துச் சென்று அவர்களைப் படாதபாடு படுத்திவிட்டு காலையில் அனுப்பிவிடுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். இதனால் பெண்பிள்ளைகளும் அவர்களின் பெற் றோரும் கதிகலங்கிப் போயுள்ளார்கள். இதே போன்று இப்பகுதிகளில் அதிகமான திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் படைத்தரப்பினரதும், புலிகளினதும் கவனத்திற்குத் தெரியப்படுத்தி யுள்ளார்கள், என்று அறியமுடிகிறது. சமீபத் தில் இவ்விதம் அழைத்துச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட யுவதி ஒருவருக்கு இந்த மர்மக் கோஷ்டியினர் ஒரு ரீசேட் (T-SHIRT) கொடுத்திருந்ததாகவும் அவரது கண்களைக் கட்டி பற்றைகள் நிறைந்த பகுதிக்கு கொண்டு சென்றதாகவும் அவரது உறவினரொருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியி லிருந்து மட்டக்களப்புக்கு வரும் பொது மக்களை சுமைதாங்கியடியிலுள்ள தமிழ் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தோர் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதாகவும் படுவான்கரை வாசிகள் தெரிவிக்கிறார்கள். இதே போன்று அடிக்கடி படுவான்கரையிலிருந்து மட்டு நகர் வந்து போகும் பொதுமக்களைப் புலிகளும் சந்தேகக் கண்கொண்டு பார்ப் பதாகவும், அத்துடன் மட்டுநகரிலிருந்து அடிக்கடி படுவான்கரைப் பகுதிக்குப் போய் வருவோர் மீது படையினரும் படையினருடன் இணைந்து செயற்படும் வேறு இயக்கங்களும் சந்தேகம் கொள்வதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கரையாக்கன்தீவுப் பகுதியில் உள்ள ஒரு நடுத்தர வசதி படைத்த விவசாயி ஒருவர், புலிகள் தொடர்ந்து அவரிடம் வரி கேட்டுக் கொண்டிருந்ததால் மனமுடைந்து சில நாட்களுக்கு முன்னர் கழுத்தில் சுருக் கிட்டு மரத்தில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டார் என்று அவ்வூர் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

## சத்தம் கேட்டால் மக்கள் ஓட்டம்

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் ஹெலிகொப்டர் மற்றும் விமானப் பறப்புச் சத்தங்கள் கேட்டால் பாடசாலை மாணவர் களும் பொதுமக்களும் பதறி அடித்துக் கொண்டு பதுங்கி ஓடுகின்றனர். ஷெல் வீச்சு, குண்டுத் தாக்குதல்கள் நிகழலாம் என்ற பீதியே இதற்குக் காரணமாகும். அத்துடன் ஒரு தடவை விமான அல்லது ஹெலி பறப்புச் சத்தம் கேட்டால் வாகரைப் பகுதிப் பாடசாலை மாணவர்கள் இரண்டு மூன்று தினங்களுக்கு பாடசாலைகளுக்கு வருவதில்லை என்பதையும் அறிய முடி கிறது. ஏற்கனவே இப்பகுதிகளில் பாழாய்ப் போயுள்ள கல்வி நிலை இதன் பின்னர் இன்னமும் பாதிக்கப்படும் என்று நம்பப் படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வியில் மிகமிகப் பின்தங்கிய பகுதி வாகரை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சென்ற 12.03.96 அன்று வாகரை அம்பந்தனாவெளியில் ஷெல் ஒன்று விழுந்த தில் 40 வயதுப்பெண்ணொருவர் தலை சிதறி ஸ்தலத்திலேயே மரணமானார்.

கடந்த 11.03.96 அன்று வெல்லா வெளியில் விஷேட அதிரடிப்படையினருடன் நடந்த மோதலில் தமது தரப்பில் எவரும் கொல்லப்படவில்லை என்று அறிவித்துள்ள புலிகள், அத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட சில ஆயுதங்களின் பெயர்களை வாகரையில் வெளியிட்டுள்ளனர். இம்மோதலில் 24 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர் என்று படையினர் தரப்பில் அறிவிக்கப் பட்டுள்ளது..

# ஒரு மருத்துவ விடுதியின் இரு வேறு பக்கங்கள்

## பாதிக்கப்பட்டவரின் மனக் குமுறல்

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை திட்ட வட்டமாகக் குறிப்பிட்டுச் சொல்வதாயின் 1996 பெப்ரவரி 11ம்திகதி.

மட்டக்களப்பு மாநகரின் முக்கியத்துவம் வாய்ந்த பொது மருத்துவமனை அது.

ஞாயிற்றுக்கிழமை என்பதால் நோயாளிகள் தொகை குறைவாகவே காணப்பட்டாலும், ஒரேயொரு பெண் மருத்துவர் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

வெளிநோயாளர்கள் பகுதியையும் கவனித்து, வார்டுகளுக்கு அனுமதி பெற வரும் நோயாளிகளையும் கவனித்து, பாதுகாப்புப்படை உத்தியோகத்தர்களின் அவசர சிகிச்சைக்கான ஆயத்தங்களையும் கவனித்து இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தார். மு.ப. 10.00 மணிக்கே நிறைவேற வேண்டிய அவரது கடமை நீண்டு கொண்டே 10.20 ஐயும் தாண்டியே முடிவடைந்தது.

வைத்தியருக்கு ஒரு 'சபாஷ்' போட்டுக் கொள்ளலாம்! அடுத்து வந்ததே ஒரு மிகப் பெரிய தலையிடி.

நீண்ட வரிசைகளில் நின்று பரிசோதித்த நோயாளிகள், மருந்து கலக்கும் அறையின் திறந்த இரு ஜன்னல்களின் முன் இரு வரிசைகளில் கால்கடுக்க நின்று அவதியுற்றது தான் கண்டிக்கப்படவேண்டிய விடயம்.

இரண்டு பெண் மருந்துக்கலவையாளர்கள் தமது அறையில் மிகவும் அமைதியாக ஆறுதலாக- வெகு நிதானமாக (சற்று அழுத்தம் கொடுத்து வாசிக்கவும்) ஒரு நோயாளிக்கு மருந்து கொடுத்து முடிந்ததும், குறைந்தது 5 நிமிடமாவது உட்புறத்தால் வரும் தெரிந்தவர்களுடன் பேசிச் சிரித்து அவர்களைக் கவனித்துவிட்டு, ரெலிபோன் வருகையில்- அதையும் எடுத்து ஆறுதலாக கதைத்து விடை கொடுத்து நோயாளிகளின் பொறுமையை அளவு கடந்து சோதித்து புரிந்துணர்வின்றிச் செயற்பட்டுக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் நோயாளிகள் சினமுற்று வெளிப்படையாகவே அவர்களைக் கடிந்து கொள்வதையும் காண முடிந்தது.

நோயாளரில் ஒரு வயோதிப மாது, தான் எருவில் கிராமத்திலிருந்து கஷ்டப்பட்டு வேன் ஒன்றில் வந்ததாகவும், ஞாயிற்றுக்கிழமையில் பஸ் போக்குவரத்து மிகக் குறைவாக இருப்பதாகவும் மிகவும் மன வேதனையுடன் பிரஸ்தாபித்தார். நான்கு இளம் தாய்மார், கதறும் குழந்தைகளுடன் காத்திருந்தார்கள்.

இத்தகையோரின் அசிரத்தைப் போக்கினால் அவதிப்படுவோர் எண்ணிக்கை சொல்லுந்தரமன்று.

'ஓவர் டைம்' எடுப்பதற்காகவே இந்த இழுத்தடிப்பென்று சிலர் முணுமுணுத்ததையும் கேட்க முடிந்தது. (ஒருவேளை அப்படியும் இருக்குமோ, என்னவோ?)

வைத்தியசாலை நிர்வாகம் இதை இனியாவது கண்காணித்து இப்படிப்பட்டவர்களைக் கண்டிக்க வேண்டுமென முரசு மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

**கே.எஸ்.மயில்வாகனம், ஆரையம்பதி.**

# அரச வானொலியில் மூடநம்பிக்கை!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியறிக்கையில் மூட நம்பிக்கை பிரசாரமும் செய்யப்பட்டுவருகிறது.

11.03.95 மாலை ஒலிபரப்பான செய்தியறிக்கையில், "இந்திய அணியை தனது மந்திரசக்தியால் வெற்றிபெறவைப்பேன்" என்று ஒரு மந்திரவாதி கூறியதாக தெரிவிக்கப்பட்டது.

ஒரு வேளை இந்திய அணி திறமையாக விளையாடி வெற்றி பெற்றிருந்தால் என்னாகியிருக்கும்? மந்திரவாதியின் சக்திதான் என்று ஒரு பகுதி மக்களாவது நினைத்திருப்பார்கள் அல்லவா? முயற்சிகள், விளையாட்டு வீரர்களின் திறமைகள் எல்லாவற்றையும் பகுத்தறிவுக்கு புறம்பாக சிறுமைப்படுத்துவதாக அமைந்திருக்குமே!

முன்னர் யாழ்ப்பாணத்தில் படையினர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபோது, அரச பிரசார சாதனங்கள் "பிரபாகரனுக்கு காலம் சரியில்லை" என்று யாரோ ஜோசியர்கள் சொன்னதாக செய்தி வெளியிட்டன.

ஜோசியத்தை நம்புவதும், மந்திரவாதிகளை நம்புவதும் அவரவர் தனிப்பட்ட விவகாரம். அரச பிரச்சார சாதனங்களில் உள்ள சிலர் தமது நம்பிக்கைகளை பொது மக்கள் மத்தியில் பரப்புவதற்கு முற்படுவது தவறான செயலாகும்.

# அமைச்சு கவனிக்குமா?

சாய்ந்தமருது மாவட்ட வைத்திய சாலை இவ்வூர் பகுதி மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய அண்மையிலுள்ள பல ஊர் மக்களுக்கும் அளப்பரிய வைத்தியசேவை வழங்கி வருகிறது. இங்கு பல சேவைகள் நடைபெறுகின்றன. ஆனால் இவ் வைத்தியசாலையில் உள்ள அம்புலன்ஸ் வண்டி ஒரு வருடமாக பழுதாகிய நிலையில்-அதன் உதிரிப் பாகங்கள் இல்லாத நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. வைத்தியசாலை செயற்குழு பல நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும் ஒன்றும் பிரயோசனம் அளிக்கவில்லை. இதனால் கடுமையான நோயாளர்களை அம்பாறைக்கோ, மட்டக்களப்புக்கோ எடுத்துச் செல்வதற்கு முடியாதுள்ளது.

சுகாதார அமைச்சு இதனை கவனத்தில் எடுத்து ஆவன செய்யுமா?

**எம்.எம்.முகம்மது ஸாகீர், சாய்ந்தமருது.**

# வெற்றிக்களிப்பும் இனவாதமும்

## இலங்கையின் வெற்றியா? இனத்தின் வெற்றியா?

**13.3.96** அன்று கல்கத்தா ஈடன் கார்டனில் இலங்கை- இந்திய அணிகள் மத்தியில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

இந்திய அணி பந்து வீச்சிலும், பந்து தடுப்பிலும் திறமையாக பிரகாசித்தது. பின்னர் துடுப்பாட்டத்தில் கோட்டைவிட்டது. இலங்கை அணியின் உறுதியும், திறமையும் பிரமிக்கத்தக்கதாக இருந்தது.

போட்டியைக் குழப்பும் விதமாக இந்திய இரசிகர்கள் நடந்து கொண்ட முறை அநாகரிகமானது. சகிப்புத்தன்மை இல்லாதது.

மறுநாளே இந்தியாவின் பிரபல பத்திரிகைகள் தமது நாட்டு இரசிகர்களின் காடைத்தனத்தை கடுமையாகச் சாடியிருந்தன.

'ஈடன் கார்டனில் இந்தியாவின் புகழ் வீழ்ந்தது.' என்று வெகு காட்டமான விமர்சனங்களும் இந்தியாவில் எழுந்தன.

இந்திய மத்திய நிதியமைச்சர் கூட தமது நாட்டு இரசிகர்களின் வெறித்தனத்தை விளாசியிருந்தார்.

ஆனால், நமது நாட்டில் நடந்த அநாகரிகத்தை மதிப்புக்குரிய சிங்களத் தலைவர்களோ, தென்னிலங்கையின் சிங்கள- ஆங்கில பத்திரிகைகளோ கண்டு கொள்ளவில்லை.

இந்திய அணியை இலங்கை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதும் தலைநகர் முதல் நாடு முழுவதும் பட்டாசுகள் முழங்கின.

வெற்றியை கொண்டாடத்தான் வேண்டும். அதில் ஒரு தவறும் கிடையாது.

ஆனால், தமிழர்களது வீடுகளுக்கு அருகில் பல இடங்களில் வெடிகள் கொளுத்திப் போடப்பட்டுள்ளன.

மலையகத்தில் பல பகுதிகளில் தமிழ் மக்கள் கிண்டல் செய்யப்பட்டிருக்கிறார்கள். கண்டியில் தமிழர்களின் கடைகள்மீது கல்வீச்சு நடந்திருக்கிறது.

இனவாதம் கொண்ட சக்திகளின் காடைத்தனத்தை தென்னிலங்கையின் சிங்கள- ஆங்கிலப்பத்திரிகைகள் கண்டு கொள்ளவேயில்லை.

பிறிதொரு நாட்டு அணிமீது வெறுப்புக்காட்டிய தனது நாட்டு இரசிகர்களை இந்திய பத்திரிகைகள் கிழிகிழியென்று கிழித்திருக்கின்றன.

இலங்கை அணியின் வெற்றியை ஒரு தனி இனத்தின் வெற்றியாகக் கருதி காடைத்தனத்தில் ஈடுபட்ட இங்குள்ள இனவாதிகளை சிங்கள பத்திரிகைகள் கண்டிக்கவேயில்லை.

விளையாட்டுத்துறை அமைச்சரோ, அல்லது சிங்கள அரசியல் தலைவர்களோ வாய் திறக்கவேயில்லை.

ஐக்கிய இலங்கை, பிரிக்க முடியாத நாடு என்றெல்லாம் பேசினால் மட்டும் போதாது.

இந்தநாடு சகல இனங்களுக்கும் சொந்தமானது என்று உணர்த்தக்கூடிய செயற்பாடுகள் வேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாடு சொந்தமல்ல; இந்தியாதான் அவர்களின் நாடு என்று இனவாதிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் இந்திய அணியில் தமிழ் பேசுவோர் எவரும் கிடையாது. இலங்கை அணியில் முத்தையா முரளிதரன் இருக்கிறார்; முக்கிய பாத்திரம் வகிக்கிறார்.

இனவாதிகளின் காடைத்தனம் முரளிதரனின் நாட்டுப்பற்றையும் உதாசீனம் செய்துவிட்டது.

இலங்கை ஒரே நாடு என்ற உணர்வோடு பாடுபட்டு உழைத்த தமிழ் பேசுவோர் பலருக்கு கடந்தகாலத்திலும் இனவாதிகள் கொடுத்த பரிசு உதாசீனப்படுத்தல்தான்.

நாடு பிரிந்து போய்விடக்கூடாதே என்பதற்காக தீர்வு யோசனைகளில் எவ்வகையான சட்ட வாக்கிய பதங்களை சேர்க்கலாம் என்று ஆராய்கிறார்கள்.

தேவையானது பதங்கள் அல்ல, சகல இனமக்களையும் அணைத்துச் செல்லும் பக்குவம்தான் தேவை. அது இல்லாதபோது நாடு பிரிவதை அந்த ஆண்டவனாலும் தடுக்க முடியாது.

உணர்வுரீதியாக இருநாடுகளாக பிரிந்திருக்கும் எண்ணத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்தினாலே போதும். ஐக்கியம் தானாக வளரும்.

**பா. வசீகரன், கண்டி.**


**BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்**

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:........................

விலாசம்:........................

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR. P.O. BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL: 434770



## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

மன நிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

மார்ச் **17** முதல் **28** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 ஏப்ரல் **3 ,4** Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி ஓட்டமாவடியிலும், ஏப்ரல் **7, 8, 9** கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

வெளி நாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.



நாடுவிட்டு நாடு சென்று தொழில் நாடுவோரின்
நம்பிக்கை மிக்க முகவர் நிலையமான

## TRANS GULF (PVT) LTD.

வழங்கும்

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்**

**சவூதி அரேபியாவில்**

ஜித்தா, தாயிப், மக்கா, மதீனா, ரியாத், தமாம்
போன்ற நகரப் பகுதிகளில் பாதுகாப்பான இடங்களில்
உடனடி வேலைவாய்ப்புகள் உண்டு.

* முஸ்லிம் பணிப்பெண்கள்
* முஸ்லிம் அல்லாத பணிப்பெண்கள்
* வீட்டுச் சாரதிகள் (முஸ்லிம்/முஸ்லிம் அல்லாதவர்)
* சாரதி/பணிப்பெண் சோடி (Couples) (முஸ்லிம்/முஸ்லிம் அல்லாதவர்)

**இலவசம்**

- உணவு. தங்குமிடம்
- வைத்திய வசதி
- சவூதி போக, வர விமான டிக்கட்
- இலங்கை அரசாங்க கட்டணம்
- கொழும்பில் மருத்துவக் கட்டணம்
- கொழும்பில் விமான நிலையக் கட்டணம்

முஸ்லிம் பணிப்பெண்களுக்கு செல்லுமுன் 3 மாத சம்பளம் முற்பணம்

இவற்றுடன்

* கொழும்பிலிருந்து சவூதியில் வேலை செய்யுமிடத்துக்கு நேரடி விமானப்பயணம். (முன்பு போல் பஹ்ரைன் போகத்தேவையில்லை.)
* சவூதியில் வேலை செய்யும் வீட்டின் விலாசம், டெலிபோன் நம்பர், போவதற்கு முன் இங்கேயே கொடுக்கப்படும்.

**நிம்மதியான பயணத்துக்கு இவைகள் உறுதுணைகளாகலாம்.**

**டுபாய், அபுதாபி, பஹ்ரைன், ஓமான், கட்டார், ஜோர்தான், லெபனான், குவைட், சிங்கப்பூர்**

முதலான நாடுகளில்

* முஸ்லிம் பணிப்பெண்கள்
* முஸ்லிம் அல்லாத பணிப்பெண்கள்
* கல்ப்/குவைட் லைசன்ஸ் சாரதிகள்

* பாஸ்போர்ட் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
* பாஸ்போர்ட் இல்லாதவர்களுக்கு பாஸ்போர்ட் எடுப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
* **நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.**

தயவு செய்து தொடர்புகொள்ளவும்:

TGL

**ட்ரான்ஸ் கல்ப் (பிரைவெட்) லிமிடட்**

இல. 65, முதலாம் மாடி,
ஹொஸ்பிடல் வீதி,
கோட்டை, கொழும்பு 1.
(ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில்)
போன்: 541076, 329258, 335624

**சப் ஏஜன்ட்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.**

அரச அங்கீகார இலக்கம். 742 AL No. 742 / Advt / 02 / 96


**விளம்பரப் பகுதி**


**வெளிவந்துவிட்டது...**

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7. இதழ் 8
கல்வி மஞ்சரி O/L
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

**BRIGHT BOOK CENTRE**
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770



## 1996 - BRIGHT ன் ஆண்டு 5புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி பயிற்சி

வெற்றிப்படிகளை எட்டிப் பிடிக்கும் **BRIGHT** மாணவர்களுக்கு சிறந்த கல்வியும், கூடிய புள்ளியும் பெற்றுக் கொடுத்து வெற்றிக்கனியை தமது துணை நூலாக கொண்டு பயிற்சி செய்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் மிகக் கூடிய புள்ளி பெற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னணியில் உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் பாடசாலை அதிபர்களும், மாணவர்களின் பெற்றாரும் அறியத்தந்து உள்ளனர்.

எனவே **1996** ஆண்டில் திறமை சித்தி பெற விரும்பும் அனைவரும் பாவிக்க வேண்டியது வெற்றிக்கனிக்களஞ்சியம், **250/=**, மாதிரி வினாவிடை **100/=**, பொது விவேகம் பாடநூல் **75/=** பொது விவேகம் செயல்நூல் **60/=**, ஆண்டு 5 **BRIGHT** ன் பாஷைப்பயிற்சி **30/=** இதனோடு மாதாந்தம் வெற்றிக்கனி இதழ் **50/=** இவற்றினை பெற விரும்புவோர் தபாலட்டையில் எழுதி அனுப்பினால் **V.P.P** யில் அனுப்பி வைக்கப்படும்.

1995 ஆண்டு எம்மிடம் கல்வி பயின்று சித்தியடைந்த மாணவ / மாணவியர் **BRIGHT** ன் வெகுமதிப்பரிசை பெற்றுக் கொள்பவரின் விபரம் வருமாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | L. தஷாந்தன் - திருகோணேஸ்வர இந்துக்கல்லூரி- | 174 | 12. | G. கார்த்தீபன் - கொழும்பு இந்துக்கல்லூரி- | 169 |
| 13. | R. ஹேமஜெயாரியா - வெலிமட மு.ம.வி- | 167 | 14. | T. தனேசன் - மட்/புனித மிக்கேல் கல்லூரி- | 164 |
| 15. | R. சத்திய கீர்த்தி - நீர/விஜயரட்ணம் இ.க- | 155 | 16. | S. சுஜித்தா - திரு/ஸ்ரீசண்முகஇந்துக்மகளிர- | 148 |
| 17. | N. பிரசாந்த் - திரு/கோணேஸ் இந்துக்கல்லூரி- | 145 | 18. | S. அபிராமி கொழும்புஇராமநாதன் இந்துமகளிர- | 156 |
| 19. | B. இளவரசி - திரு/மெதடீஸ்மகளிர் வித்தியாலயம் | 143 | 20. | R. பாத்திமாஹரசனா - அல்முபாரக் மல்வானை- | 142 |
| 21. | S. சியானந்தன் - கல்முனை கார்மேல்பாத்திக- | 141 | 22. | A.R.M. Nihaz- மடுல் போவM.M.V ஹேவ- | 140 |
| 23. | M.N. நுஸ்தா - அல்/அஸ்ரக் ம.வி- அம்பசோட | 139 | 24. | P. தீபா - மகாஜனக்கல்லூரி- மட்டக்களப்பு- | 138 |
| 25. | M.U. பாத்திமாரிஹானா - ஹேனுப்பிட்டிய மு.வி- | 139 | 26. | M.S. மஹீஸா - கிண்ணியா ம. வித்தியாலயம்- | 137 |
| 27. | M. இம்தியாஸ் - பெரிய கிண்ணியா அ.மு- | 132 | 28. | C.J. லியோஅந்தனி-மாதம்பிட்டி சென்அந்தனி- | 132 |
| 29. | S. மாதுமை - றோமன்கத்தோலிக்க வத்தளை- | 132 | 30. | A.I.M. மிஸ்ஹல் - அல்முபாரக்.வி மல்வானை | 131 |

**தொடர்ந்து மாணவ விபரம் தினகரனிலும் / தினமுரசிலும் வெளிவரும் எமது முன்னோடிப் பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.**

BRIGHT BOOK CENTRE

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S- 27, FIRST FLOOR, P.O.BOX - 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO - 11 T.P. 434770

"இருக்கிறது?" என்பதாகவே இருந்தது.

கட்சிகளிடம் அஸ்கிரிய பௌத்த பீடத்தலைவர் கேட்ட கேள்வியை

அலசுவது - இராஜதந்திரி

சற்றலைட் தொலைபேசியோடு இணைக்கப்பட்ட ஃபக்ஸ் மற்றும் கம்பியூட்டர்.

# வானத்தில் ஒரு இரகசியம்

## நாரதர்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**வ**ன்னியில் மிகப் பாதுகாப்பான இடத்திலிருந்து புலிகளின் தலைமை இயங்கிக் கொண்டிருக்கிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் தற்போது எங்கிருக்கிறார்?

வன்னியில் என்று பொதுவாகத் தெரியும். வன்னியில் எங்கே இருக்கிறார் என்பதுதான் நம்நாட்டில் விலை உயர்ந்த கேள்வி.

இலங்கை ஜனாதிபதி எங்கே இருக்கிறார். எங்கெல்லாம் செல்லுகிறார். எப்போது அலரி மாளிகைக்கு திரும்பி வருகிறார் என்பதெல்லாம் வன்னியில் இருக்கும் பிரபாகரனுக்கு உடனுக்குடன் தெரிந்துவிடுகிறது.

ஆனால், கொழும்பில் அலரிமாளிகையில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு பிரபாகரன் வன்னியில்தான் இருக்கிறாரா என்பது கூட உறுதிசெய்யமுடியாத தகவல்தான்.

வன்னியில் இருந்துகொண்டு உலகின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் பிரபாகரனால் உடனுக்குடன் தொடர்பு கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணத்தில் படைகள் நிலைகொண்டுள்ளன. அங்கு நடைபெறும் சம்பவங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு வந்து சேர்வதற்கு முன்னரே, வன்னியில் உள்ள புலிகளது தலைமைச் செயலகத்திற்கு சென்றுவிடுகின்றன.

புலிகளது தலைமைச் செயலகம் சுறுசுறுப்பாக செயற்படுகிறது.

கிடைக்கும் தகவல்களும், செய்திகளும் இரு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன.

இயக்கத்தின் உள்ளே மட்டும் பரிமாறப் படவேண்டிய தகவல்கள் முதல் பிரிவு.

பிரசாரத்திற்காக பயன்படுத்த வேண்டிய தகவல்கள் இரண்டாவது பிரிவு.

இரண்டாவது பிரிவு தகவல்களை புலிகளின் அரசியல் பிரிவினர் அறிக்கையாக தயார் செய்து தருகின்றனர்.

அந்த அறிக்கை மறுநிமிடமே இலண்டனிலுள்ள புலிகளது சர்வதேச செயலகத்தில் இருக்கிறது.

புலிகளது துரிதமான செய்திப் பரிமாற்றம் அரசையும், பாதுகாப்பு வட்டாரங்களையும் அதிர்ச்சியடையச் செய்கின்றன.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு வடக்கு-கிழக்கு நிலவரம் பற்றிய தகவல்கள் தாமதமாகத்தான்



சென்றடைகின்றன.

அதற்கு முன்னரே புலிகளது பிரசாரம் எங்கும் சென்றுவிடுகிறது. அதனை மறுத்துப் பேசுவதற்கு அல்லது, எதிர் பிரசாரம் செய்வதற்கு இலங்கைத் தூதரகங்களால் முடியாமல் போகிறது.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடபகுதியில் என்ன நடைபெறுகிறது என்று அறிய வேண்டுமானால் தமது தகவல்களையே செய்தியாளர்கள் நம்பியிருக்கவேண்டும் என்று அரசாங்கம் நினைக்கிறது.

படை அதிகாரிகள் சொல்லுவதுதான் வடபகுதி நிலவரம் என்று எடுத்துக் கொள்ளுங்கள் என்பது போலத்தான் அரசாங்கம் நடந்து கொள்கிறது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை தொடர்பாக என்றாலும் சரி, அதன்பின்னர் இன்றுவரையும் சரி, படைத்தரப்புப், அரச பிரசார சாதனங்களும்தான் நிலவரம் தொடர்பாக விளக்கம் தந்து கொண்டிருக்கின்றன. தாமே எடுத்து வந்த புகைப்படங்களை பத்திரிகைகளுக்கு படைத்தரப்புத்தான் விநியோகம் செய்கிறது.

கடந்த வருடம் ஜூலை மாதத்தில் படைத்தரப்பினர் 'முன்னேறிப்பாய்தல்' நடவடிக்கையில் ஈடுபட்டனர். அந்த நடவடிக்கை தொடர்பான விபரிப்புக்கள் யாவும் படைத்தரப்பால்தான் வெளியிடப் பட்டன. பின்னர் 'முன்னேறிப்பாய்தல்' தோல்வி கண்டபோதும் கூட தாம் பின்வாங்கவில்லை என்று படைத் தரப்பு சொல்லிக் கொண்டிருந்தது.

அதனால், சுதந்திரமான பத்திரிகையாளர்கள் எவரையும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லாமல் இருந்தனர்.

பின்னர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போதும், அதன் பின்னரும்கூட பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்ல படைத்தரப்பு முன்வரவில்லை.

சந்திர மண்டலத்திற்கு சகலரும் சென்று வரத் தொடங்கிவிட்டால், சந்திரமண்டலத்தைப் பற்றிய ஆச்சரியம் அகன்றுவிடும். அங்கே என்ன நடக்கிறது, என்ன இருக்கிறது என்றும் தெரிந்துவிடும்.

அதுபோலத்தான் யாழ்ப்பாணத்திற்கும் பத்திரிகையாளர்கள் ஒரு முறை சென்று, நிலைமையை அவதானித்து திரும்பினால் சூரியக்கதிர் நடவடிக்கை தொடர்பான மிகைப் படுத்தல்கள் வெளியே தெரிந்துவிடும்.

அதனால்தான் அரசாங்கம் யாழ்ப்பாணத்தை செய்தியாளர்கள் செல்ல முடியாத பகுதியாக வைத்திருக்கிறது. 'செய்தியாளர்களின் பாதுகாப்புக் கருதியே' தடை விதிக்கப்படுவதாக கூறப்படுவது புத்திசாலித்தனமான நியாயப் படுத்தல் மட்டும்தான்.

உலகில் பயங்கரமான போர்கள் நடைபெறும் பகுதிகளுக்கெல்லாம் பத்திரிகையாளர்கள் செல்கின்றனர். ஏவுகணைகள் உட்பட நவீனரக ஆயுதங்கள் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த வளைகுடாப் போர் முனைகளில்கூட பத்திரிகையாளர்கள் புகுந்து செய்திகளை சேகரித்தனர்.

இராணுவ நடவடிக்கைகள் ஓய்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில்கூட வடபகுதிக்கு பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்ல அரசாங்கம் தயாராக இல்லை.

உடைந்து கிடக்கும் வீடுகளை திருத்திவிட்டு, சூரியக்கதிரின்போது ஏற்பட்ட அனர்த்தங்கள், சேதங்கள் என்பவற்றை பூசி மெழுகிய பின்னர் பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்ல அரசாங்கம் நினைப்பதாகத் தெரிகிறது.

உண்மையில் வடக்கு-கிழக்கு நிலவரம் பற்றி அரியமுடியாதளவுக்கு இரும்புத்திரையை அரசாங்கம் தொங்கவிட்டுள்ளது.

செய்திகளுக்கும், செய்தியாளர்களுக்கும் மட்டுமல்ல, வடபகுதியில் இருந்து வரும் பயணிகளுக்கும் இப்போது தடை போடப்படுகிறது.

அதன் மூலம் புலிகளை தலைநகருக்குள் ஊடுருவாமல் தடுக்கலாம் என்பது பாதுகாப்பு தரப்பின் நிலைப்பாடு.

செய்திகள், மற்றும் செய்தியாளர்களை தடுப்பது மூலமாக வடக்கில் புலிகளது நடவடிக்கைகள், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்பவற்றின் விளைவுகளை மறைப்பது.

வடக்கிலிருந்து வரும் பொதுமக்களை வவுனியாவில் வைத்து வடிகட்டுவது மூலம் தலைநகரில் புலிகளது நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது. என்பவைதான் அரசாங்கத்தின் நோக்கம்.

சுருக்கமாகச் சொன்னால் புலிகளையும், புலிகள் இயக்கத்தின் குரலையும் வெளியே வராமல் செய்து, ஒரு குறுகிய வட்டத்துக்குள் புலிகளைத் தள்ளி மூச்சுமுட்டச் செய்யலாம் என்று அரசாங்கம் நினைக்கிறது.

அனால், அரசாங்கத்தின் நினைப்பை புலிகள் தவறாக்கி வருகிறார்கள்.

வன்னியிலிருந்து பிரபா பிறப்பிக்கும் கட்டளைகளோடு புறப்படும் புலிகள் தலைநகருக்கு வந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

வவுனியாவில் சாதாரண மக்கள் கெடுபிடிகளை அனுபவிக்கும் போதும்கூட, பாதுகாப்பு கெடுபிடிகளையும் மீறி வவுனியா வழியாக புலிகள் கொழும்பு வரமுடிகிறது.

கொழும்பில் புலிகளது நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டதாக இனம்காணப்பட்ட புலிகளில் பலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள்தான்.

அவ்வளவு ஏன், ஒரு உயர் பொலிஸ் அதிகாரியின் சிபாரிசு கடிதத்துடன்தான் கொலன்னாவ எரிபொருள் குதம் மீதான தாக்குதலில் பங்குகொண்டு பலியான ஒரு புலி கொழும்பில் சுதந்திரமாக நடமாடித் திரிந்தார்.

பாதுகாப்பு தரப்பின் பலவீனங்களை கண்டறிந்து, ஓட்டைகளால் நுழையக்கூடிய சகல வசதிகளும் புலிகளிடம் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது பணம்.

எனவே-வவுனியா தடைமுகாம் வடிகட்டல்களால் புலிகளை தலை நகருக்குள் ஊடுருவாமல் தடுக்க முடியும் என்பது தப்பான கணக்குத்தான்.

மாறாக, வவுனியா கெடுபிடிகள் வடபகுதியில் உள்ள தமிழ் மக்களை தாங்கள் பிறிதொரு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற நினைப்பைத்தான் ஏற்படுத்தி வருகின்றன. இது, பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதைதான்.

அதுபோல, வடபகுதி செய்திகள், மற்றும் புலிகளது வெளியுலகத் தொடர்புகளை தடுக்கும் விடயத்திலும் அரசாங்கம் படுதோல்வி கண்டுள்ளது.

நவீன காலத்தில் வளர்ச்சியடைந்துள்ள தொழில் நுட்பத்தை தகவல் தொடர்பு விஷயத்தில் புலிகள் பெற்றுள்ளார்கள்.

தகவல் தொடர்பு விடயத்தில் இரண்டு வழிகள் மூலமாக புலிகள் தமது தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒன்று அதற்கு வானொலித் தொலைத் தொடர்பு கருவி (Communication Base Set) மற்றும் வோக்கி டோக்கிகள் மூலமான தொடர்பு. இதனை புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தான் செய்ய முடியும்.

கொழும்பில் ஒரு வானொலி தொடர்பு கருவியை வைத்திருந்து, ஏனைய இடங்களுக்கு தொடர்பு கொண்டு பேசினால் மாட்டிக்கொள்ள நேரிடும். எங்கிருந்து தொடர்புகள் செல்கின்றன என்று கண்டறியும் கருவிகள் பாதுகாப்பு தரப்பிடம் உள்ளன.

அதுமட்டுமல்ல, வானொலி தொடர்பு சாதனம் மூலமாக உரையாட முடியும், அல்லது சங்கேத ஒலிக்குறிப்புக்கள் மூலம் செய்திகளை பரிமாற முடியும். வன்னியிலிருந்து மட்டக்களப்புக்கு வானொலி தொடர்பு சாதனம் மூலமாக பிரபாவின் உத்தரவு பறந்துவிடும்.

அதுபோல வடக்கு-கிழக்கில் தமது கட்டுப்பாடில் உள்ள பகுதிகளில் வானொலித் தொடர்பு கருவியை வைத்து புலிகள் தமது தலைமையோடு பேசிக்கொள்ள முடியும்.

இதில் உள்ள குறைபாடு யாதெனில் புலிகள் எந்த அலைவரிசை மூலமாக தொடர்பு கொள்கிறார்கள் என்று கண்டறிந்து, பாதுகாப்பு தரப்பு ஒட்டுக் கேட்க முடியும்.

இரண்டாவது வழி, கம்பியில்லாத தொலைபேசி. இது அதிகம் பணச் செலவுக்குரிய வழி.

யாழ்ப்பாணத்திற்கு, அல்லது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு தொலைபேசித்தொடர்பு வசதியில்லையே, பின்னர் எப்படி தொலைபேசி வழியாக தொடர்பு கொள்வது பகுதிகளுக்கு என்று கேட்கலாம்.

இருக்கவே இருக்கிறது அதி நவீன தொலைபேசி வசதி. இந்த தொலைபேசி இயங்குவதை அரசாங்கத்தால் தடுக்க முடியாது. கண்டுபிடிக்கவும் முடியாது.

சற்றலைற் என்று சொல்லப்படும் செய்மதிப் பரிவர்த்தனை மூலம் உலகெங்கும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி தற்போது வெளிநாடுகளில் பாவனைக்கு வந்துவிட்டது. சற்றலைற் தொலைபேசி என்று பொதுவாக அழைக்கின்றனர்.

இலண்டன், அவுஸ்ரேலியாவின் தலைநகரான சிட்னி போன்ற இடங்களில் தலைமையகங்களை ஏற்படுத்தி சற்றலைற் தொலைபேசி நிலையங்கள் இயங்குகின்றன.

ஒரு சூட்கேஸ் போன்ற வடிவமைப்பில் சற்றலைற் தொலைபேசி இருக்கும். எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடியும். விமானத்தில் கப்பலில் எடுத்துச் செல்லலாம். சைக்கிள் மூலம் உலகம் சுற்ற ஆசையிருந்தால், சைக்கிளிலும் எடுத்துச் செல்லலாம்.

பற்றரியிலும், மின்சாரத்திலும் இயங்கக் கூடியது. ஜெனரேட்டர் உபயத்திலும் இயங்கும்.

பக்ஸ் வசதி, கம்யூட்டர் வசதி போன்றவையும் சற்றலைற் தொலைபேசியுடன் இணைந்தே இருக்கின்றன.

கோடீஸ்வர வர்த்தகர்களுக்காகவே உருவாக்கப்பட்டதுதான் சற்றலைற் தொலைபேசி தொடர்பு, சாதாரணமானவர்கள் நெருங்கவே முடியாது. விலை அப்படி. அதுதவிர ஒவ்வொரு தொலைபேசி அழைப்புக்கும் பல ஆயிரங்கள் செலவாகும்.

ஒரு சற்றலைற் தொலைபேசியின் விலை 9 இலட்சம் ரூபாய். (அண்டெனாவுடன்). ஒவ்வொரு அழைப்புக்கும் ஒரு நிமிஷத்திற்கு ஆகும் செலவு 270 ரூபாய்.

சற்றலைற் தொலைபேசியின் பரிவர்த்தனை நிலையம் இலண்டனில் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், வன்னியிலிருந்து கொழும்புக்கு ஒரு போன் எடுக்க வேண்டுமானால், இலண்டன் பரிவர்த்தனை நிலையம் சென்றுதான் தொடர்பு வரும். ஆகவே, கட்டணம் பல மடங்கு அதிகமாகும்.

சற்றைலைற் தொலைபேசி மூலம் சாதாரண தொலைபேசி இலக்கங்களுக்கும் தொடர்பு கொள்ளலாம். பிரபாகரன் விரும்பினால் ஜனாதிபதியின் தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ள முடியும்.

கொழும்பிலும், வன்னியிலும் இரண்டு சற்றைலைற் தொலைபேசிகள் இருக்குமானால் மிக இரகசியமாக பேசிக்கொள்ள முடியும். யாரும் ஒட்டுக் கேட்கவும் முடியாது. பிரபாகரன் தனது உத்தரவை கொழும்பில் உள்ள பொறுப்பாளருக்கு உடனுக்குடன் தெரிவிக்கலாம்

கொழும்பில் உள்ள புலிகளிடம் சற்றலைற் தொலைபேசி இருக்கிறதா என்று தெரியவில்லை.

ஆனால், வன்னியில் பிரபாகரனிடம் சற்றலைற் தொலைபேசி இருக்கிறது.

வெளிநாடுகளில் உள்ள இயக்க முக்கியஸ்தர்களில் சிலரோடு மட்டுமே பிரபா நேரடியாக தொடர்பு கொள்கிறார்.

பிரபா அடிக்கடி தொடர்பு கொள்ளும் ஒருவர் பத்மநாதன். அவர்தான் அதி நவீன சற்றலைற் தொலைபேசியை வாங்கி பிரபாவுக்கு அனுப்பியவர். வெற்றிகரமாக வந்து திரும்பிய ஆயுதக் கப்பல் ஒன்றில்தான் சற்றலைற் தொலைபேசியும் பிரபாவுக்கு வந்து சேர்ந்தது.

கிட்டத்தட்ட கடந்த இரண்டு வருடங்களாக பிரபாவிடம் சற்றலைற் தொலைபேசி இருக்கிறது. முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து பேசினார். இப்போது வன்னியிலிருந்தது பேசுகிறார்.

புலிகளது அரசியல்பிரிவு அறிக்கைகள் சற்றலைற் தொலைபேசியின் 'பக்ஸ்' மூலமாக பறக்கின்றன.

அதுமட்டுமல்ல, 'இன்டநெட்' எனப்படும் கம்பியூட்டர் மூலமான செய்திச் சேவையில் வெளியாகும் செய்திகளையும், சற்றலைற் தொலைபேசி கம்யூட்டர் மூலமாக பிரபா பெற்றுக்கொள்கிறார்.

கிளிநொச்சியில் வெளியாகும் ஈழநாதம் பத்திரிகையின் முக்கியமான செய்திகள், கட்டுரைகள் என்பன 'பக்ஸ்' மூலமாக புலிகளது வெளிநாட்டுக் கிளைகளுக்கு உடனுக்குடன் அப்படியே அனுப்பிவைக்கப் படுகின்றன.

வடபகுதியில் நடைபெறும் விமானக் குண்டுவீச்சுக்களில் பலியானவர்களது பெயர் விபரங்களை உடனடியாகவே இலண்டனிலுள்ள புலிகளது செயலகம் வெளியிட்டு விடுகிறது.

ஆக, செய்தி தொடர்பு விடயத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் புலிகளது குரலையோ, கருத்தையோ வெளியுலகுக்கு செல்லாமல் தடுக்க முடியவில்லை. நவீன தொழில் நுட்ப வசதிகள் செய்தித் தொடர்பில் உள்ள தடைகளை இல்லாதொழித்து விடுகின்றன.

சற்றலைற் தொலைபேசி வசதியை வைத்து புலிகள் லாபகரமான ஒரு காரியமும் செய்கிறார்கள்.

வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் உள்ள ஒருவருக்கு வெளிநாட்டில் இருக்கும் உறவினர் பணம் அனுப்ப விரும்புகிறாரா? அந்த பணத்தை புலிகளது வெளிநாட்டுக் கிளையில் கொடுக்க வேண்டியதுதான். கொடுத்த மறுநிமிடமே சற்றலைற் தொலைபேசி மூலம் வன்னிக்கு தகவல் வந்துவிடும். பணம் இங்கு கொடுக்கப்பட்டுவிடும். கமிஷனாக ஒரு தொகை பெறப்படும்.

பலர் இவ்வாறு பணம் அனுப்புகிறார்கள். இதில் ஒரு சங்கடம், தமக்கு எவ்வளவு தொகை பணம் வருகிறது என்று புலிகளுக்கு தெரிந்தால் நிதி கேட்கும் போது மறுக்க முடியாதே என்று ஊரில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள். அதனால் வெளிநாடுகளில் உள்ளவர்களில் ஒரு பகுதியினர் புலிகள் மூலமாக பணம் அனுப்ப தயங்குகின்றனர்.

### 'சற்றலைட்' தொலைபேசியின் சிறப்பு அம்சங்கள்

1. எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.
2. மின்சாரம் இல்லாவிட்டாலும் பற்றரியில் இயக்கலாம்.
3. இடம்விட்டு இடம் நகரும் ஆட்களுக்கு வசதியானது.
4. அதி உயர் தொனியில் குரல் தெளிவாக கேட்கும்.
5. காலநிலை சீர்கேடுகள் அதிகம் பாதிக்காது.
6. பக்ஸ் மற்றும் கம்பியூட்டர் இணைந்திருக்கிறது.
7. இரகசிய தூரத் தொடர்புகளுக்கு உத்தரவாதம்.

# அதிரடி அய்யாத்துரை



**இ**ந்தியா எண்டால் தமிழர்களது நாடு எண்ட அபிப்பிராயம் இப்பவும் சிங்கள மக்களில் ஒரு சாரரிடம் இருக்குதுங்கோ. அதுதான் இந்தியாவை இலங்கை கிரிக்கெட்டில் வென்றவுடன் தமிழ் சனத்தை சிலர் கேலிசெய்தவையாக்கும். பிரபாகர் எண்டு ஒரு இந்திய கிரிக்கெட் வீரர் இருக்கிறார். அவரை ரெண்டு எழுத்து இயக்கத் தலைவரின் உறவினர் எண்டு நினைச்சுப் போட்டினமோ?! இந்தியாவை தோற்கடிச்சது எப்படி எண்டு ஒரு சிங்கள நண்பர் தமிழ் நண்பரைக் கேட்டாராம். அதுக்கு தமிழ் நண்பர் கேட்ட பதில் கேள்வி என்ன தெரியுமோ? இந்தியாவுக்கு அடிக்கலாம் எண்டு காட்டினது யார் தெரியுமோ? எண்டு கேட்டாராம். பதில் உங்களுக்குத் தெரியும்தானே!

**வெ**டி கொளுத்தவேண்டாம் எண்டு வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அறிவிச்சதுதான் பிழையாய் போச்சு. வெடி வாங்க மறந்துபோய் இருந்த ஆட்களும் ஓடிப்போய் வாங்கிக் கொண்டுபோய் வைச்சிருந்தவையாம். இறுதிப்போட்டி தினத்தன்று நம்நாட்டில் அமோக விற்பனையான மூன்று பொருட்கள் என்ன தெரியுமோ? பக்கெட் பக்கெட்டாக பட்டாசு மற்றும் சிகரெட், போத்தல் போத்தலாக உற்சாகபானம்.

**பா**கிஸ்தானை தோற்கடிச்சா முஸ்லீம்களை பார்த்து "அடி எப்படி?" எண்டு கேட்கிறது. இந்தியாவை தோற்கடிச்சா, தமிழ் ஆட்களைப்பார்த்து "அடி எப்படி?" எண்டு கேட்கிறது. அப்படி கேட்கிற ஆட்களிடம் ஒரு கேள்வி, ஐக்கிய இலங்கை எண்டால் அர்த்தம் என்னங்கோ? முக்கி முக்கி முரளிதரன் பந்து வீச, அவர் பிறந்த மண்ணிலேயே தமிழ் கடைகளுக்கு கல்லெறி. எறிஞ்சவையைவிட அவையைக் கண்டு பிடிச்சு தண்டிக்கத் தாமதித்த காலவல்துறையைத் தான் கண்டிக்க வேணும்.

**அ**ந்தக்காலத்திலை எங்களுக்கு எம்.ஜி.ஆர்-சிவாஜி, பின்னர் இளம் தலைமுறைக்கு கமல், ரஜினி, ஆனால் இந்தக்காலத்திலை எங்கட நாட்டு இளம் பிள்ளைகளுக்கு டெண்டுல்கர் பைத்தியம். பொம்பிளைப் பிள்ளைகள்கூட டெண்டுல்கர் தம்பியைப் பற்றித்தான் டிஷ்கஷன் பண்ணுகினம். பம்பலப்பிட்டி பக்கமாக சென்று கொண்டிருந்தேன். பாடசாலை மாணவிகள் கூட்டத்தின் மத்தியில் டெண்டுல்கரின் பெயர் அடிபட்டுக்கொண்டிருந்தது காதிலை விழுந்தது.

**வெ**குஜன சபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. உறுப்பினர்கள் எண்ணிக்கை சபைக்குள் குறைவாக இருந்தது. சபையின் உணவு விடுதியில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி. உறுப்பினர்கள் எல்லாம் கிரிக்கெட் பார்த்துக்கொண்டு நின்றவையாம். போகிற போக்கைப் பார்த்தால் ரணதுங்கா அடுத்த தேர்தலில் குதிக்கலாம். அமோக ஆதரவு கிடைக்கும்போலக் கிடக்கு.

**ஜோ**சியர்கள், மந்திரவாதிகள், வித்தை காட்டும் சாமியார்கள் யாவருமே தாங்கள் அனைத்தும் அறிந்தவர்கள் எண்டு சொல்லுறது வழக்கம். யாருமே ஏன்பாருங்கோ உலகக் கிண்ணம் யாருக்கு எண்டு ஞானக்கண், மற்றும் கிரகநிலைகளை வைத்து கண்டறிந்சு சொல்லேல்லை? இப்படியான நேரங்களில் எண்டாலும் அவையின் ஞானக்கண் பற்றி விளங்கிக் கொள்லாமல்லோ!

**த**னிப்பட்டரீதியில் பேசும்போது அதிகார மட்டத்தில் உள்ள பலர் காவிக்காரர்கள்மீது பிடிப்பில்லாமல்தான் பேசுகிறார்களாம். வெளியில் சொல்லதான் தயக்கமாம். வருங்காலப் புள்ளடிகளை பாதிக்கக்கூடும் என்று நினைக்கிறார்களாக்கும்.

**த**மிழ் செய்தி வாசிப்பாளர்கள் நாளொரு வண்ணம், பொழுதொரு மேனியுமாக அழகாக இருந்தாலும், வாசிப்பு மட்டும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைதான். உலகக் கிண்ண இறுதிப் போட்டியன்று ரூபவாகினியில் செய்தி வாசித்தவர் பாகிஸ்தான் இலங்கைக்கும், அவுஸ்ரேலியாவுக்கும் போட்டி எண்டு புதுநாடு உருவாக்கிப் போட்டாருங்கோ. இது ஒரு பானை சோறுக்கு ஒருசோறு பதம்மாதிரித்தான்.

**ரெ**ண்டு எழுத்து தலைவர் கிழக்கின் காலனை அழைத்திருக்கிறார். கிழக்கிலுள்ள ரெண்டு எழுத்துக்காரர்களுக்கு காலனுடன் உள்ள கசப்பும்சேர்ந்துதான் தலைவருக்கு புகாராகப் போயிருக்குதாம்.

ஒரு குட்டிக் கவிதை. மூன்றே வரிகள்.

**சுதந்திரம்**

விரல்களே இல்லாத
நமக்கு கிடைத்த
வைர மோதிரம்.

(ராஜசேகர்)

ஒரு மருத்துவ வி

இரு வேறு பக்க

பாதிக்கப்பட்டவரின் ம

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை திட்ட வட்டமாகக் குறிப்பிட்டுச் சொல்வதாயின் 1996 பெப்ரவரி 11ம்திகதி.

மட்டக்களப்பு மாநகரின் முக்கியத்துவம் வாய்ந்த பொது மருத்துவமனை அது.

கொள்ளலாம்! அடுத்து வந்ததே ஒரு மிகப் பெரிய தலையிடி.

நீண்ட வரிசைகளில் நின்று பரிசோதித்த நோயாளிகள், மருந்து கலக்கும் அறையின் திறந்த இரு ஜன்னல்களின் முன் இரு

## அற்புதன் எழுதுவது

# நிதி திரட்ட நடந்த வரிவிதிப்புக்கள்!




# 'துக்ளக்'கின் விமர்சனமும் 'சோ'வுக்கு குள்ளநரிப் பட்டமும்

### இரண்டு உரிமை கோரல்கள்

மன்னார் கடலில் அகதிகள் சென்ற படகை வழிமறித்து கைது செய்த கடற்படையினரில் எட்டுப்பேரும், இரண்டு இராணுவத்தினரும் தாக்குதலில் பலியானது பற்றி சென்றவாரம் விபரித்திருந்தேன்.

அகதிகளோடு படகில் சென்ற தயாபரனும், சுதனும்தான் இராணுவத்தினரின் துப்பாக்கியைப் பறித்தெடுத்து தாக்குதல் நடத்தினார்கள். இருவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள். பின்னர் விலகிக்கொண்டு அகதிகள் சென்ற படகில் தமிழ்நாட்டுக்கு சென்று கொண்டிருந்தவர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

கடல் நடுவே தாக்குதல் நடந்து முடிந்தவுடன் படகு அகதிகளோடு மீண்டும் மன்னார் எருக்கலம்பிட்டிக்கு திரும்பி விட்டது.

தாக்கப்பட்ட கடற்படைப் படகு தப்பிச் சென்றதால் கடற்படையினரின் ஏனைய படகுகள் துரத்திவரக்கூடும் என்று கருதியே அகதிகள் படகு கரைக்குத் திரும்பியது.

கடலில் தாக்குதல் நடத்தப்பட்ட செய்தி மன்னாரில் புலிகளுக்கு எட்டி விட்டது.

அப்போது புலிகளது மன்னார் பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்தவர் சாஜகான்.

கடலில் தாக்குதல் நடத்துவதாக இருந்தால் தமது இயக்கத்தினர்தான் தாக்குதல் நடத்தியிருக்கவேண்டும் என்று நினைத்துவிட்டார் சாஜகான்

உடனே, வானொலி தொடர்புக்கருவி மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்த கிட்டுவுக்கும், தமிழ்நாட்டுக்கும் செய்தி அனுப்பினார்.

செய்தி கிடைத்ததும் யாழ்ப்பாண பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டார்கள் யாழ் மாவட்ட புலிகள்.

'கடலில் வெற்றிகரமான தாக்குதல்; பத்துப் படையினர் பலி; விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரத் தாக்குதல்' என்று செய்தி வந்தது.

இதற்கிடையே மன்னார் கடற்கரையில் இறங்கிய தயாபரனும், சுதனும் அங்குள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரிடம் சென்றடைந்தனர்.

கடலில் நடைபெற்ற தாக்குதல் செய்தி கிடைத்தவுடன் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்தும் தலைமன்னாரிலிருந்தும் புறப்பட்ட இராணுவத்தினர் கடற்கரைப் பகுதிகளிலும், காட்டுப் பகுதிகளிலும் சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

கடற்படையினர் பீரங்கிப் படகுகளில் வந்து கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தி தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தினார்கள். 'ஹெலி'யிலும் தேடுதல் நடந்தது.

அதனால் பாதுகாப்புக்காக தயாபரனும், சுதனும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிடம் செல்லவேண்டியிருந்தது.

### புலிகள் உதவி

காட்டுப்பகுதி வழியாக இருவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம் நோக்கிச் சென்றபோது அவர்களைப் புலிகள் கண்டுவிட்டனர். புலிகளின் உதவியோடுதான் இருவரும் பத்திரமாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாமுக்கு சென்றனர்.

முகாமில் தமது தாக்குதல் தொடர்பாக கூறினார்கள் இருவரும்.

வெற்றிகரமான தாக்குதல் அல்லவா? உடனே யாழ்ப்பாணத்திற்கும், சென்னைக்கும் தகவல் அனுப்பியது ஈ.பி.ஆர்.எல்.எஃப். மன்னார் பிரிவு.

சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரதிநிதியாக அப்போது இருந்தவர் கேதீஸ்வரன். அவர் உடனடியாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தார்;

"மன்னார் கடலில் கடற்படையினர் மீது எமது இயக்கமே தாக்குதல் நடத்தியது."

ஒரே சம்பவத்துக்கு இரண்டு இயக்கங்கள் உரிமை கோரியது இது இரண்டாவது தடவை.

அதற்கு முன்னர் மட்டக்களப்பு சிறையுடைப்புக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பும், புளொட் அமைப்பும் உரிமை கோரிப் பிரச்சனைப்பட்டன.

மன்னார் கடலில் தாம் தாக்குதல் நடத்தவில்லை என்பதை பின்னர் தெரிந்து கொண்டதால் புலிகள் அமைப்பினர் அதனை ஒரு பிரச்சனையாக வளர்க்கவில்லை.

முதன் முதலில் கடலில் வைத்து கடற்படையினர் மீது நடத்தப்பட்ட பாரிய தாக்குதல் அதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வரி அறவீடு

யாழ்-மாவட்டத்தில் நிதி திரட்டும் விடயத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். புலிகள் ஆகிய இரண்டு அமைப்புக்களுக்கும் இடையில்தான் கடும் போட்டி.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் யாழ் மாவட்டத்தில் நிதித் திரட்டலுக்கான திட்டங்களை தீட்டி செயற்படுத்தும் பொறுப்பை டேவிற்சனிடமும், ரமேஷிடமும் ஒப்படைத்து விட்டு தமிழகம் சென்றிருந்தார் டக்ளஸ் தேவானந்தா.

திறம்பட திட்டமிட்டு நிதி திரட்டலுக்கான பல வழிகளை கையாண்டார் டேவிற்சன்.

கொழும்பிலிருந்து யாழ்பாணத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்யப்படும் சவர்க்கார வகைகள், ஷம்பு வகைகள் போன்றவற்றுக்கு விற்பனை வரி, இறக்குமதி வரி போன்றவை விதிக்கப்பட்டன.

யாழ் மாவட்டத்தில் அப்போதுதான் ஏராளமான மினி சினிமாக்கள் உருவாகிக் கொண்டிருந்தன.

மினி சினிமாக்களை நடத்துவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிடம் அனுமதிப் பத்திரம் பெறவேண்டும். அதற்கு கட்டணம் உண்டு.

மினி சினிமா அரங்குகள் எப்படி இருக்க வேண்டும் என்று விதிமுறைகள் தயாரித்துக் கொடுத்திருந்தார் டேவிற்சன். அதன்படி நடப்பவர்களுக்கு மட்டுமே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

காணி உறுதிகள் எழுதுவோர், நொத்தாரிசுகள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோரை அழைத்தும் அவர்கள் அறவிடும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட வீதம் கேட்கப் பட்டது.

வியாபாரிகள் சிலர் தாம் விற்பனை செய்யும் பொருட்களுக்கு 'பில்' போடாமல் இருந்து விடுவார்கள். அப்படிச் செய்தால் வரி கட்டத் தேவையில்லையல்லவா?

'பில்' போடாத முதலாளிகளை கண்டு பிடித்து தண்டம் அறவிடப்பட்டது.

தண்டப் பண அளவு வர்த்தகர்களின் வசதியைக் கணக்கிட்டே தீர்மானிக்கப்பட்டது.

சில வர்த்தகர்களிடம் ஒரு இலட்சம் ரூபாய் வரை தண்டம் அறவிடப்பட்டது. அதே சமயம் சில வர்த்தகர்களிடம் பத்தாயிரம் ரூபாவும் தண்டமாக அறவிடப்பட்டது.

அனுமதிப்பத்திரம் எடுக்காமல் மினி சினிமா நடத்தியவர்களிடமும் தண்டம் அறவிடப்பட்டது.

ஆங்கிலப் படங்கள் காண்பிப்பவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் தணிக்கைக் குழுவிடம் காண்பித்து அனுமதி பெற்றே திரையிடலாம் என்பது கண்டிப்பான உத்தரவு.

அந்த உத்தரவு மினி சினிமா உரிமையாளர்களுக்கு பிடிக்கவில்லை.

"இப்படி யெல்லாம் உத்தரவுகள் போட்டால் நாம் மினி சினிமாவையே மூடிவிட வேண்டியதான்" என்றார்கள்.

"தாராளமாக மூடலாம். அதற்கு எமது அனுமதி தேவையில்லை" என்று சொல்லப் பட்டதும், வேறு வழியின்றி தணிக்கை விதிகளுக்கு கட்டுப்பட்டனர் மினி சினிமா உரிமையாளர்கள்.

மினி சினிமாக்களில் புலிகளும் நிதி கோரினார்கள். புலிகளின் யாழ் மாவட்ட நிதிப் பொறுப்பாளராக அப்போதிருந்தவர் மதன் (86 இன் மத்தியில்).

"மினி சினிமாவில் இரண்டு இயக்கங்கள் ஏட்டிக்குப் போட்டியாக பணம் கேட்டால் நன்றாக இருக்காது; நாம்தான் முன்பிருந்தே மினி சினிமா விடயத்தை கையாண்டு வருகிறோம்." என்று திலீபனை சந்தித்துக் கூறினார் டேவிற்சன்.

திலீபன் புலிகள் சார்பாக சொன்ன ஒரே ஒரு வார்த்தை- "இனிமேல் எம்மவர்கள் அதில் தலையிடமாட்டார்கள்!"

அதன்பின்னர் பிரச்சனை இருக்கவில்லை. ஏனைய இயக்கங்களுக்கும் புலிகளுக்கும் இருந்த வேறுபாடு அதுதான்.

### இயக்கப் போக்குகள்

ரெலோ போன்ற இயக்கங்களிடம் பிரச்சனையை யாருடன் பேசித் தீர்ப்பது என்று தெரியாது. காரணம் எல்லோருமே தலைவர்கள் மாதிரித்தான் தம்மைக் கருதிக் கொண்டிருப்பார்கள்.

புலிகள் இயக்கத்திலும் யாழ் மாவட்டத் தலைமைக்கும் வன்னித் தலைமைக்கும் இடையே பிரச்சனை இருக்கத்தான் செய்தது.

ஆனால், யாழ் மாவட்டத்தில் கிட்டு சொன்னால் இயக்கம் முழுவதும் கேட்கும். வன்னியில் மாத்தையா சொன்னால் அங்கு இயக்கம் கட்டுப்படும். இருவருமே பிரபாவின் உத்தரவுக்கு கட்டுப்பட்டே தீரவேண்டும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிலும் அதே போன்ற நிலைதான் ஆரம்பத்தில் இருந்தது. 86ம் ஆண்டு மத்திய பகுதிவரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் போக்கு வித்தியாசமானதாகத்தான் இருந்தது.

இயக்கத்தின் விமர்சனக் கூட்டங்களில் தீப்பொறிகள் பறக்கும். அந்தளவுக்கு காரசாரமான விவாதம் நடக்கும். கூட்டம் முடிந்த பின்னர் வெளியே பேசும்போது பிரச்சனை இருப்பதாகவே காட்டிக் கொள்ளமாட்டார்கள்.

86 இல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் இயக்கமே இரண்டாகப்போகும் கட்டத்திற்கு உள்பிரச்சனை தீவிரமடைந்திருந்தது.

ஆனால், வெளியே பிரச்சனையின் சாயல்கூட தெரியாதளவுக்கு நடந்து கொண்டனர்.

பின்னர் படிப்படியாக அந்த நிலை மாறிக்கொண்டிருந்தது.

### சரணாலயம்

1986 இன் மத்திய பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் உள்ள அரசடி வீதியில் சரணாலாயம் ஒன்றை அமைத்தனர் புலிகள்.

'பண்டிதர் சரணாலயம்' என்று அதற்கு பெயரிடப்பட்டது.

குழந்தைகளுக்கான பொழுது போக்குக்காக உருவாக்கப்பட்டதே 'பண்டிதர் சரணாலயம்'.



யாழ்ப்பாணத்தில் பிரபலமாக இருந்தது சுப்பிரமணியம் பூங்கா.

யாழ் பொலிஸ் நிலையம், கோட்டை இராணுவ முகாம் என்பவற்றுக்கு அருகில் இருந்தமையால் அங்கு யாரும் செல்வதில்லை.

அதனால் சுப்பிரமணியம் பூங்கா பற்றைக்காடாக மாறியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் வேறு பெரிய பூங்காக்கள் இல்லாத நிலையில் புலிகள் உருவாக்கிய பண்டிதர் சரணாலயம் குழந்தைகளுக்குரிய பொழுதுபோக்கு இடமாக மாறியது.

புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்த சிவகுமாரின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது 'உறுதியின் உறைவிடம்.'

தற்போது உள்ள மாவிரர் நினைவாலயங்களுக்கு முன்னோடியாக இருந்தது உறுதியின் உறைவிடம்தான்.

மறைந்த புலிகள் இயக்க போராளிகளது படங்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கும்.

உறுதியின் உறைவிடம் உருவாக காரணமாக இருந்த சிவகுமார் தற்போது கனடாவில் இருக்கிறார்.

புலிகள் இயக்கம் தொடர்பாக கனடா உளவுத்துறைக்கு தகவல் கொடுத்து வந்ததாக சமீபத்தில் குற்றம் சாட்டப்பட்ட சிவகுமார் தான் அவர்.

### அவர்கள் அங்கே

1986 இல் புலிகள் இயக்கத்தில் யாழ் மாவட்டத்தில் கிட்டுவோடு சேர்ந்து தீவிரமாக செயற்பட்டவர்களில் மதன், ஊத்தைரவி, மயூரன், ரஹீம் என்னும் கனகரத்தினம், சுக்ளா ஆகியோர் முக்கியமானவர்கள்.

ரெலோ இயக்கம் மீதான நடவடிக்கையிலும் முன்னின்று செயற்பட்டவர்கள் அவர்கள்தான்.

இவர்கள் தொடர்பாக முக்கியமாக குறிப்பிட்டு கூறுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

இவர்கள் அனைவருமே தற்போது வெளிநாடுகளில் இருக்கிறார்கள். சுக்ளா மட்டும் புலிகளது ஃபிரான்ஸ் கிளையில் செயற்படுகிறார். ஏனையோர் முற்றாக ஒதுங்கியிருக்கிறார்கள்.



சோ

கிட்டுவின் மொழி பெயர்ப்பாளராகவும் இருந்தவர் ரஹீம். ராஜீவ் காந்தி கொலை நடந்த சமயத்தில் ஒற்றைக்கண் சிவராசன் தொடர்பாக தகவல்களை வெளிப்படுத்தி இந்திய உளவுப் பிரிவுக்கு உதவியவர் ரஹீம்தான்.

புலிகள் இயக்கத்தின் தீவுப்பகுதி பொறுப்பாளராக இருந்தவர் அம்மான். முதலில் அவர் கிட்டுவின் விசுவாசியாக இருந்தவர். பின்னர் கிட்டுவுடன் பிரச்சனை ஏற்பட்டது.

ஒருநாள் அம்மானை அழைத்துக் கேட்டார் கிட்டு. "நான் உன்னை மண்டையில் போடவா? அல்லது நீயே குப்பி கடிக்கிறாயா?" அம்மான் குப்பியைக் கடித்து இறந்துபோனார்.

புலிகள் அமைப்பில் அரியாலை-குருநகர் பகுதிகளுக்கு பொறுப்பாக இருந்தவர் பீட்டர். நெடுங்குளம் சந்தியில் நாவற்குழி இராணுவத்தினருக்கு கண்ணி வெடி வைத்ததில் பங்கு கொண்டவர்.

அரியாலை சரஸ்வதி நூலகத்திற்கு பின்னால்தான் பீட்டரின் வீடு இருக்கிறது.

காதல் விவகாரம் ஒன்றில் சிக்கினார் பீட்டர். இயக்கத்தைவிட காதலுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டார்.

ஒருநாள் சயனைட் குப்பி கடித்து இறந்துகிடந்தார் பீட்டர்.

### 'துக்ளக்'மீது பாய்ச்சல்

தமிழ்நாட்டில் வெளிவரும் ஆனந்த விகடன் நிறுவனத்தின் சஞ்சிகைகளில் ஒன்றாக இருந்தது 'துக்ளக்.'

ரெலோ இயக்கத் தலைவர் சிறி சபாரத்தினம் புலிகளால் கொல்லப் பட்டதை கடுமையாகக் கண்டித்திருந்தது துக்ளக்.

"பிரபாகரன் ஒரு சர்வாதிகாரியாக விரும்புகிறார்" என்று விமர்சித்திருந்தார் துக்ளக் ஆசிரியர் சோ.

அதைவிட துக்ளக் சோ எழுதியிருந்த மற்றொரு விடயம்தான் தமிழ்நாட்டில் இருந்த ஈழப்போராளிகள் இயக்கங்களின் ஆதரவாளர்களை கொதிப்படையச் செய்திருந்தது.

### சோ-சாடல்

அப்படி என்ன எழுதியிருந்தார் சோ? அது இதுதான்:

"பொலீசிடம் சிக்குகிறவர்கள் சித்திர வதை செய்யப்படுவார்கள். (அந்த வேதனை தாங்கமாட்டாமல்) காட்டிக் கொடுப்பவர்கள் தங்கள் கூட்டத்தினால் கொலை செய்யப்படுவார்கள்.

கள்ளக் கடத்தல், மற்றும் மாஃபியா கூட்டங்களில் கூட இந்தப்பழக்கம் உண்டு என்பது உலகறிந்த விஷயம்."

16.6.86 இல் 'இன்றைய நிலவரம் இதுதான்' என்ற தலைப்பில் சோ எழுதிய ஏழு பக்கக் கட்டுரையில்தான் அப்படி எழுதியிருந்தார்.

"இலங்கையில் தனி ஈழம் என்ற ஒன்று உருவாகியே தீரவேண்டுமானால், அது ஒரு ஜனநாயக ஆட்சியாகவே இருக்க வேண்டும். பிரபாகரனின் பாஸிச ஆட்சியாக இருக்கக்கூடாது" என்றும் சோ எழுதியிருந்தார்.

பெரும் சர்ச்சையை கிளப்பியது இக்கட்டுரை.

புலிகளையும், பிரபாகரனையும் சோ சாடியதால் ஏனைய போராளி இயக்கங்களை சோ மதித்தார் என்று அர்த்தமல்ல.

சோவுக்கு பிடிக்காத விஷயங்களில் கம்யூனிசம், பிரிவினை, பெண் விடுதலை, ஆயுதப் போராட்டம் என்று பல விஷயங்கள் அடக்கம்.

ஆர்.எஸ்.எஸ்.என்னும் இந்து தீவிரவாத அமைப்பின் தீவிர விசுவாசி சோ. அவரது சொந்தப்பெயர் இராமசுவாமி.

சோவின் கட்டுரைக்குப் பதில் எழுதினார் சாலை இளந்திரையன். பேராசிரியரான சாலை இளந்திரையன் தமிழ் நாட்டுக்காரர். ஈழப்போராளிகள் இயக்கங்களுக்கு ஆதரவானவர்.

### சோவுக்கு பதில்

'சோ ஒரு குள்ளநரி' என்று வர்ணித்தார் சாலை இளந்திரையன். அவர் எழுதியது இது;

"தமிழ் ஈழத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக உள்ள பிரபாகரனையும், அவருடைய புலிப்படையையும் கொச்சைப்படுத்தி தமிழர் மத்தியில் அவர்களை செல்வாக்கு இழக்கச் செய்வதே பிற்போக்குச் சக்திகளது திட்டம்.

பிரபாகரனின் படை தன்னேரில்லாத விடுதலைப் படையாக உருவாகிவிட்டது என்பதை தமிழர்களைவிட தமிழரின் எதிரிகள் நன்கு புரிந்து கொண்டுவிட்டனர்.

போர் முகத்திலே நிற்கும் படையின் தலைவன் சர்வாதிகாரியாகத்தான் செயற்படவேண்டும். இல்லாவிட்டால் எந்தப் படையையும் அவன் நடத்த முடியாது.

இந்திய இராணுவம் இலங்கையில் தலையிட வேண்டும் என்பவர்களை பிரபாகரன் தனக்கு எதிரானவர்களாகக் கருதுகிறாராம். ஏனெனில் இந்திய இராணுவம் தலையிட்டால், ஈழம் ஒரு சனநாயக நாடாக அமையுமாம். பிரபாகரனின் சர்வாதிகாரத்துக்கு இந்திய இராணுவம் உதவாதாம். துக்ளக்காரர் சொல்கிறார் இப்படி.

அரசியல் அரிச்சுவடி தெரியாத இந்த துக்ளக்கை என்ன சொல்வது? எந்த விடுதலைப் போரும் அந்த நாட்டு குடிமக்களாலேயே நடத்தப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புவது சுதந்திர சோசலிச தமிழீழம். இந்தியா போன்ற ஒரு காலனியத்தின் கரடு முரடான குட்டி உள்ளே நுழைந்தால், ஈழத்து மக்கட் சோலையே சிதைந்துவிடும். பங்களாதேஷில் அதுதான் நடந்தது.

கிழக்கு பாகிஸ்தானுக்கு விடுதலை பெற்றுத்தரச் சென்ற இந்திய இராணுவம் மக்களைக் கொள்ளையடித்தது. மாதரைக் கற்பழித்தது. மக்களின் சுதந்திர வேட்கையை பூட்ஸ் காலால் மிதித்துக் கொச்சைப் படுத்தியது.

பலம்வாய்ந்த ஒரு இராணுவத்தின் தயவை நாடினால் ஏற்படக்கூடிய இந்த தீய விளைவைக் கருதியே, இந்திய இராணுவம் அங்கே வரவேண்டாம் என்று விடுதலைப்புலிகள் கூறுகிறார்கள்."

என்று எழுதியிருந்தார் சாலை இளந்திரையன். (தொடர்ந்து வரும்)

## அலசுவது - இராஜதந்திரி

# அரசியல் தீர்வில் அகற்றப்படவேண்டிய மாயை!

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் கடந்தவாரம் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் சர்வதேச பயங்கரவாதத்தைக் கண்டிக்கும் உச்சி மகாநாடொன்றில் பங்குபற்றியிருந்தார்.

இஸ்ரேலில் தொடர்ச்சியாக இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களினால் கடந்த சில வாரங்களில் சுமார் அறுபது பேர்வரை கொல்லப்பட்டனர்.

ஹமாஸ் இயக்கத்தினரே இத்தாக்குதல்களுக்குப் பொறுப்பாளிகளாக இருந்தனர். இஸ்ரேலிய-பாலஸ்தீன சமரச நடவடிக்கைகளில் அதிருப்தியுற்றவர்களாக ஹமாஸ் தீவிரவாதிகள் இருக்கின்றனர்.

இதேவேளை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட்டுக் கொடுத்து வருவது தொடர்பாக ஆத்திரம் கொண்ட இஸ்ரேலியர்களும் மூர்க்கமாகவே இருக்கின்றனர்.

அவர்களில் ஒருவராலேயே கடந்த ஆண்டு இஸ்ரேலிய பிரதமர் யிட்ஷாக் ராபினும் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

எனவே சமரச முயற்சி, அமைதி நடவடிக்கைகள் என்று இறங்கும்போது கெடுபிடியான சவால்களையே எதிர் நோக்க வேண்டியுள்ளது.

சமரசம், சமாதானம் என்று இறங்கும்போது இத்தகைய மூர்க்கமான கெடுபிடிகள் ஏன் தோன்றவேண்டும்? என்ற கேள்வி எழலாம்.

ஆழமான வடுக்களையும் சொல்லோணாத் துயரங்களையும், எண்ணிலடங்காத இழப்புக்களையும் ஏற்படுத்திவிட்டு சமரசம், சமாதானம் என்று இறங்கும்போது, நேரடியாகவே பாதிப்புக்கள், இழப்புக்களுக்கு உட்பட்டவர்கள் தமது மனக்கொதிப்பை வெளியிடவே செய்வர்.

இதன் காரணமாகவே சமாதான முயற்சிகளுக்கு எதிராக அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுவிடுகின்றன. அந்த அச்சுறுத்தல்கள் பாரதூரமானவையாகவும் வெடித்துவிடுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை கூட இத்தகைய நிலையே காணப்படுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் எல்.ரி.ரி.ஈ.யினருடனான சமாதான முயற்சிகளை மிகுந்த ஆர்வத்துடன் ஆரம்பித்தது.

ஆனால் நாளடைவில் அந்த ஆரம்ப முயற்சியில் தேக்க நிலை காணப்பட்டு தற்போது தீர்வு முயற்சிகள் என்பது மந்த கதியிலேயே இடம் பெறுவதைக் காணமுடிகின்றது.

அதுதவிர ஆயுதப் போராட்ட அமைப்பான எல்.ரி.ரி.ஈ.யுடன் சமரச முயற்சி என்பது அறவே இடம் பெறாதிருக்கின்றது.

கடந்தவாரம் அரசியலமைப்பு, நீதித்துறை அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம், எல்.ரி.ரி.ஈ.இயக்கம் இலங்கையில் தடை செய்யப்படுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது பேராசிரியர் பீரிஸ், "பிரிட்டனில் வட அயர்லாந்தின் தீவிரவாத அமைப்பான ஐரிஷ் குடியரசு இராணுவம் (IRA) கடந்த 25 வருடங்களாகத் தடை செய்யப்படவில்லை.எனவே எல்.ரி.ரி.ஈ. மீதான தடைகுறித்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவுகளை எடுத்து விடமுடியாது" என்று கூறியிருந்தார்.


பேராசிரியர் பீரிஸின் இக்கருத்து எல்.ரி.ரி.ஈ. குறித்து அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதாகவே இருக்கின்றது.

வட அயர்லாந்தின் ஐரிஷ் குடியரசு இராணுவம், ஐரிஷ் கத்தோலிக்க மக்களின் உரிமைகளுக்காக போராடிவருகின்றது. இந்த அமைப்பு கடந்த 25 வருடகாலமாக தனது நிலைப் பாட்டைப் பறைசாற்றும் விதத்தில் விரிவான தாக்குதல் நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றது.

இத்தாக்குதல்கள் சில சமயங்களில் மோசமானவையாகவும், சில வேளைகளில் சிறியளவிலும் இருக்கின்றன.

பிரிட்டிஷ் மாகாராணியாரின் நெருங்கிய உறவுக்காரரான மவுன்ட்பேட்டன் பிரபுவை குண்டு வைத்துக் கொன்றது முதல் லண்டனில் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு முன்பாக குதிரைப் படையொன்றையே துவம்சம் செய்தது உட்பட பாரிய தாக்குதல்களை ஐ.ஆர்.எ. அமைப்பு நடத்தியுள்ளது.

இருந்தபோதிலும் ஐ.ஆர்.எ. அமைப்பு பிரிட்டிஷ் அரசினால் தடை



> **எல்.ரி.ரி.ஈ. அமைப்பை தடை செய்யாது விட்டால்மட்டும் போதாது! அதனுடன் அரசியல் பேச்சுக்களையும் தாமதிக்காது முன்னெடுக்க வேண்டும்!**

செய்யப்படவில்லை. அண்மையில் கூட ஐ.ஆர்.எ, பிரிட்டிஷ் அரசுடனான தனது 17 மாதகால போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டு மீண்டும் மோதலில் குதித்தது.

ஆனால் பிரிட்டிஷ் அரசு ஐ.ஆர்.எ. அமைப்பை நிராகரிக்கவோ அல்லது தடைசெய்யவோ இல்லை. மாறாக அந்த இயக்கம் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளில் குதிக்க வேண்டுமென்றே பிரிட்டிஷார் எதிர்பார்க்கின்றனர்.

எனவே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எல்.ரி.ரி.ஈ. தொடர்பாகத் தெரிவித்திருப்பது, ஐ.ஆர்.எ. மீது பிரிட்டிஷ் அரசு கொண்டுள்ள கண்ணோட்டத்தைத் தழுவியது போன்றே காணப்படுகின்றது.

இருந்தபோதிலும், நடைமுறைக்குச் சாத்தியமான முறையில் இலங்கை அரசு எவ்வளவு தூரம் பிரிட்டிஷ் அரசு போல நடந்து கொள்கின்றதென்பதே கேள்வியாக இருக்கின்றது.

ஐ.ஆர்.எ. அமைப்புடன் ஓர் அரசியல் இணக்கப்பாட்டை எட்டிவிட வேண்டுமென்ற காரணத்தினாலேயே அந்த அமைப்பை பிரிட்டிஷ் அரசு தடை செய்யவில்லை.

இதுதவிர ஐ.ஆர்.எ. அமைப்பை முழு அளவில் ஒரு தீவிரவாத அமைப்பாகக் கணித்து அதனுடன் பேச்சுக்களுக்குச் செல்லாதுவிடின், அந்த அமைப்பு, தொடர்ந்து பிரிட்டிஷ் அரசுக்கு நெருக்கடிகளையே கொடுத்தவண்ணம் இருக்கும்.

எனவே எல்.ரி.ரி.ஈ.விடயத்திலும் பொது ஜனஐக்கிய முன்னணி அரசு பிரிட்டிஷ் அரசு போன்று நடந்து கொள்ளவேண்டுமானால் எல்.ரி.ரி.ஈ.யினருடனான அரசியல் நடவடிக்கைகளில் போதுமானளவு அக்கறை காட்டப்படவேண்டும்.

கடந்த காலங்களில் எல்.ரி.ரி.ஈ. அமைப்புடன் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நடவடிக்கைகள் முறிவடைந்ததுடன் எவ்வித ஆரோக்கியமான முடிவுகளும் எட்டப்படவில்லை.

இக்கடந்தகால நடவடிக்கைகளில் பல ஐ.தே.க. ஆட்சியாளர்களினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்த பின்னர் ஒரு சில சந்திப்புக்களையே எல்.ரி.ரி.ஈ.யினருடன் நடத்தியிருந்தனர். ஆனால் அச்சந்திப்புக்கள் உரிய வகையில் உத்வேகம் பெறுமுன்னரே ஒரு சிலமாதங்களில் இரு தரப்பினருக்குமிடையே மோதல்கள் தோன்றின.

எனவே எல்.ரி.ரி.ஈ.யினருக்கும், ஆட்சியாளருக்குமிடையிலான மோதல் நிலை தொடர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்திலேயே ஏனைய அரசியல் கட்சிகளுடன் அரசு பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமான தீர்வு முயற்சிகளை ஆரம்பித்துள்ளது.

இத்தகைய தன்மை கடந்த ஐ.தே.க. ஆட்சியிலும் காணப்பட்டது. எல்.ரி.ரி.ஈ.யினருடனான மோதல்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மறுபுறம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இறுதியாக ஐ.தே.க. அரசின் எல்.ரி.ரி.ஈ.மீதான இராணுவ நடவடிக்கையும் வெற்றிபெறவில்லை. ஏனைய அரசியல் கட்சிகளுடனான பாராளுமன்றத் தெரிவுக்குழு செயற்பாடுகளும் வெற்றிதரவில்லை.

அன்றைய பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும், இன்றைய தெரிவுக்குழுவுக்குமிடையேயுள்ள வித்தியாசம் என்னவெனில், அன்று ஒரு தீர்வுத்திட்டத்தை நோக்கி அரசியல் கட்சிகள் யோசனைகளை முன்வைத்தன.

ஆனால் தற்போது அரசாங்கத்தினால் ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டு, அத்தீர்வுத்திட்டத்திலுள்ள குறைநிறைகள் ஆராயப்பட்டு முழுமையான ஒரு தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எப்படி இருந்தபோதிலும் அரசியல் தீர்வு என்ற ரீதியில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருப்பது வரவேற்கக் கூடியதாக காணப்பட்டாலும், அந்நடவடிக்கைகள் மேலும் அர்த்தமுள்ளதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் இருப்பதற்கு மேலும் பல அணுகுமுறைகள் எடுக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இருவாரங்களுக்கு முன்னர் ஐந்து தமிழ் அரசியல் கட்சிகள் 'கண்டியாத்திரை' யொன்றை மேற்கொண்டிருந்தன.

இக்கட்சிகள் கண்டியிலுள்ள அஸ்கிரிய பீடத்தின் தலைவரைச் சந்தித்து வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தன.

ஆனால் அஸ்கிரியத்தலைவர் அத்தமிழ் கட்சிகளிடம் கேட்ட கேள்வி, "தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது?" என்பதாகவே இருந்தது.

இக் 'கற்றுக்குட்டி'த்தனமான கேள்வி அஸ்கிரிய மகாநாயக்க தேரருக்கு அரசியல் அறிவு பூஜ்யம் என்பதை எடுத்துக் காட்டியதோடு, தமிழர்களுக்கென்று வழங்கப்படும் எந்தவொரு தீர்வும், சிங்களவர்களுக்கு எதிரானது என்ற மாயையில் அவர் வாழ்ந்து வருவதையுமே புலப்படுத்துவதாக விளங்கியிருந்தது.

எனவே பூஜிக்கக் கூடியவர் என்ற தரத்திலுள்ள அஸ்கிரியத்தலைவர் முதற்கொண்டு சாதாரண சிங்களக்குடிமகன் வரை பரவிப் பீடித்துள்ள இந்த மாயையே, இலங்கையின் இனப்பிரச்சனைத்தீர்வுக்கு எதிரான ஒரு சாபக் கேடாக இருந்து வருகின்றது.

சுதந்திர இலங்கையில் காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் இந்த மாயையை நன்கு வியாபிக்க வைத்ததுடன் அதில் அரசியல் நடத்துவதிலுமே காலங்கழித்து வந்தனர்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளிடம் அஸ்கிரிய பௌத்த பீடத்தலைவர் கேட்ட கேள்வியை நோக்குகையில், அவரது அறியாமை குறித்துப் பரிதாபங்கொள்ள முடிகிறதே தவிர, வேறெதனையும் காணமுடியவில்லை.

எனவே இத்தகைய அறியாமையைக் கொண்டுள்ளவர்கள் உஷாராக இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு எத்தகைய தொரு நேர்த்தியான தீர்வையும் முன்வைக்க முடியாதென்பதனை ஆட்சியாளர்கள் தெளிவாக உணரவேண்டும்.

நாடு துண்டாடப்படுவதை அனுமதிக்க முடியாதெனவும் தென்னிலங்கையில் உள்ளவர்கள் கூச்சல் போடுகின்றனர்.

ஆனால் வடக்கு-கிழக்குப் பிரதேசம் ஏறத்தாழ முழு நாட்டிலிருந்தும் துண்டாடப்பட்ட ஒரு சூழ்நிலையிலுள்ளதையே இக் கூச்சல் பேர்வழிகள் உணரவேண்டும்.

ஐக்கிய இலங்கை, ஒருமைப்பாடு என்றெல்லாம் வார்த்தை ஜாலங்களை அள்ளி வீசலாம்.

ஆனால் தனது உரிமைகளுக்காகப் போராடும் ஓர் இனத்தின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்திலேயே அந்த இனம் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றைக் கருத்தில் கொள்ளும்.


இந்திய உபகண்டத்தின் கிரிக்கெட் உற்சவத்தில் கடந்த ஒரு மாதகாலமாக மூழ்கியிருந்த இலங்கையர்கள் மீண்டும் அரசியல் அரங்கில் தமது கவனத்தைத் திருப்புவர்.

நேர்த்தியான பந்தயம் இந்த அரங்கில் இடம் பெறுவது அவசியமாகின்றது. ●

---

## திரும்பிச் செல்ல விரும்பினால்....
## புலிகளின் யோசனை!

**யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருமாறு அழைக்கிறது அரசாங்கம். திரும்பிச் செல்ல வேண்டாம் என்கிறார்கள் புலிகள் அமைப்பினர். அப்படி திரும்பிச் செல்வதாக இருந்தால் தாக்குதலுக்குச் செல்லுங்கள் என்கிறது ஒரு கவிதை. இது புலிகளின் 'ஈழநாதம்' பத்திரிகையில் வெளியானது. (சில பகுதிகள் முரசின் சுய தணிக்கை)**



*சொத்து சுகத்தை விட்டு சொந்தமனையைவிட்டு*
*அகப்பட்டதை மட்டும் அள்ளி எடுத்துக்கொண்டு*
*"உயிர் தப்பினாற் போதும் உழைக்கலாம் பின்" என்று*
*ஓடி ஓடி வந்ததை உள்ளம் மறக்குமா?*

*கைக்குழந்தை இடுப்பினிலும் கடும்பாரம் தலையினிலும்*
*நட்ட நடுநிசியினிலே நடந்து வந்த வேளையிலே*
*பட்ட துயரங்கள் நெஞ்சம் மறக்குமோ?*

*மெத்தையிலே படுத்து நித்திரை செய்த பலர்*
*மேனியிலே சிறுகற்கள் மிக ஆழமாய் உறுத்த*
*மெல்லிய துணியை விரித்து மேகம் பார்த்துப் படுத்தனர்.*

*"சுத்த சைவம்; பிறர் பார்க்க உணவுண்ணோம்" என்ற பலர்*
*சுற்றிவர மக்கள் பார்த்திருக்க சோற்றை அள்ளி உண்டனர்.*

*இத்தனை துன்பங்களும் எதனால் வந்தன?*
*எவரால் வந்தன? விடை எமக்கு தெரியும்.*

*"உணவு இலவசம், உடைகள் இலவசம்,*
*உடைத்த விடுகள் உடனடியாக கட்டித்தரப்படும்.*
*பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கிறோம்;*
*இடம் பெயர்ந்து சென்ற என் இனிய தமிழ்மக்களே!*
*எதுவித பயமுமின்றி இல்லங்களுக்கு திரும்புங்கள்."*
*அக்காத்தை சந்திரிகா அறைகூவல் விடுக்கின்றா*
*எத்தனை அன்பு எம்மீது அவவுக்கு!*

*கருணையுடன் எம்மை அழைப்பவர்க்கு*
*கையுறை கொண்டு செல்ல வேண்டாமா?*
*தலையிலும், கரங்களிலும் பரிசுகள் சுமந்து செல்வோம்*
*வேங்கைகளிடம் கேட்டால் வெடிகுண்டுகள் தருவார்கள்;*
*வாங்கிக்கொண்டு செல்வோம் வாருங்கள் வேகமாய்!*

*வெடிகுண்டுகளை மறைத்துக் கொண்டு*
*வெள்ளைக் கொடிபிடித்து செல்வோம் வாருங்கள்!"* ●

## இதுவரை


ஐரோப்பிய நாடுகளில் சிறைகளில் இருந்த பாலஸ்தீனப் போராளிகளை மீட்பதற்காக கார்லோஸ் குழுவினர் விமானக்கடத்தலில் ஈடுபட்டனர்.

இஸ்ரேலியர்கள் உட்பட 230 பயணிகள் கொண்ட விமானம் நடுவானில் வைத்து கடத்தப்பட்டது. உகண்டா விமான நிலையமான என்டபேயில் தரையிறக்கப்பட்டது. உகண்டா அதிபர் இடி அமீன் கார்லோஸை தனது மாளிகைக்கு வரவேற்று உபசரிக்கிறான்.

அதேநேரம் இஸ்ரேலிய அரசாங்கம் பயணிகளை மீட்கும் திட்டத்தோடு ஒரு குழுவை என்டபேக்கு அனுப்பிவைக்கிறது.

இனி..

# ஒப்பரேஷன் என்டபே



விருந்து முடிந்ததும் கார்லோஸையும், மற்றும் வாடிஹாட்டாட், அன்ரன் பௌலியர் ஆகியோரையும் தனது மாளிகையிலேயே தங்கி ஓய்வெடுக்கச் சொன்னான் இடி அமீன்.

மூவருக்கும் தனித்தனி அறை கொடுக்கப்பட்டது.

கார்லோஸை தனியாக அழைத்த இடி அமீன்; "பல விஷயங்களில் நீயும் நானும் ஒரே ஜாதி" என்றான்.

கார்லோசுக்கு அர்த்தம் பிடிபட வில்லை. புருவம் உயர்த்தினான்.

"புகழை ரசிப்பது, பெண்களை அனுபவிப்பது, எதிரிகளை நசிப்பது என்று பல விஷயங்கள்" என்று விளக்கம் தந்தான் இடி அமீன். இடி அமீனின் சிரிப்பில் ஒரு அரக்கத்தனம் தெரிவதாக கார்லோஸ் நினைத்துக் கொண்டான். இடி அமீன் சொன்னதற்கு பதில் சொல்லாமல் புன்னகைத்தான்.


"எனது மாளிகையில் நீ நினைத்தபடி எல்லாம் நடக்கும். எல்லாம் கிடைக்கும். நான் எதிரிகளுக்கு கொடூரமானவன். நண்பர்களுக்கு இனிமையானவன்" என்று தனது குள்ளமான பெரிய உடல் குலுங்கச் சிரித்தான் இடி-அமீன்.

கார்லோஸ் தனது அறைக்குச் சென்றபோது இன்ப அதிர்ச்சி.

அவனை வரவேற்றனர் இரண்டு அழகிகள். இரண்டுபேருமே பாதிமார்புகளை மட்டுமே மறைத்திருந்தார்கள். மறைக்கப்படாத பாதி மறைக்கப்பட்ட மீதியை ஊகிக்க போதுமான தடயத்தை கொடுத்தது. வளமான மார்புகள். கறுப் பழகிகள். கார்லோஸுக்கு கறுப்பழகிகள் மீது தனிப்பிடிப்பு இருந்தது. கறுப்பழகிகள் தங்கள் உடல் விஷயத்தில் வஞ்சகம் இல்லாத வளங்களை வைத்திருப்பவர்கள் என்பது கார்லோஸின் அனுபவம்.

தான் செல்லும் இரவு விடுதிகளில் கூட கறுப்பழகிகள் மீதுதான் நாட்டம் காட்டுவான் கார்லோஸ்.

இப்போது இடி அமீன் கார்லோஸின் உபயோகத்திற்காக கொடுத்திருந்த கறுப்பழகிகளைப் பார்த்தவுடேனேயே




கார்லோஸுக்கு போதை தலைக்கேறியது போல இருந்தது.

இரண்டுபேரும் கார்லோஸின் இரு புறமும் ஒட்டிக்கொண்டார்கள். கதவு தானாக மூடிக்கொண்டது.

என்டபே விமான நிலையத்தில் தீடீர் பரபரப்பு தொற்றிக்கொண்டது.

அதிபர் இடி அமீன் தீடிர் விஜயம். விமானநிலையப் பாதுகாவலர்கள் சல்யூட் அடித்து விறைப்பாக நின்றார்கள்.

இன்று யார் தலை உருளப்போகிறதோ தெரியவில்லை. எந்த அதிகாரிக்கு வேலைகாலியாகப் போகிறதோ தெரியவில்லை.

திரந்த ஜீப் ஒன்றுக்குள் இடி அமீன் இருந்தான். கடத்தல் விமானம் அருகே இடி அமீனின் ஜீப் சென்றது.

இடி அமீனின் பாதுகாவலர்கள் கீழே குதித்து இறங்கினார்கள்.

கடத்தல் விமானத்திற்கு பாதுகாப்பாக கார்லோஸின் குழுவைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிகளோடும், கைக்குண்டுகளோடும் நின்று கொண்டிருந்தனர்.

விமானத்தின் கதவருகே ஒருத்தனும், உள்ளே மற்றவர்களும் நின்றுகொண்டிருந்தனர்.

கார்லோஸும் மற்றவர்களும் இடி அமீன் அழைத்துத்தான் போயிருக்கிறார்கள் என்பது கார்லோஸ் குழுவினருக்கு தெரிந்தே இருந்தது.

இப்போது இடி அமீனைக் கண்டதும் விமானக் கதவருகே நின்றவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால், இடி அமீன் ஜீப்பைவிட்டு இறங்கவில்லை. பாதுகாவலர்கள்தான் இறங்கி விமானத்தை நோக்கி வந்தார்கள். தோள்களில் துப்பாக்கிகள் தொங்கிக் கொண்டிருந்தன.

'ஏன் வருகிறார்கள்?' என்று நினைத்து முடிப்பதற்கிடையில், கண் இமைக்கும் நேரத்தில் தோளில் இருந்த துப்பாக்கியை உருவி ஒருவன் சுட்டான். விமானக் கதவருகே நின்ற கார்லோஸ் குழு ஆள் நெற்றிப் பொட்டில் குண்டு துளைக்க மல்லாந்து விழுந்தான்.

அடுத்து துரிதகதியில் காரியங்கள் நடந்தன. விமானத்திற்குள் பாய்ந்தது இடி அமீனின் பாதுகாவலர்கள் குழு.

கச்சிதமான குறிகள். தாக்குதலை எதிர்பார்க்காத கார்லோஸ் குழுவினர் அனைவரும் சூடுபட்டு விழுந்தனர்.

➡☆☆☆

## 3 உலகைக் கலக்கிய விமானக் கடத்தல்

இடி அமீனின் முன்னால் நின்ற அதிகாரிகள் நடுங்கிக் கொண்டிருந்தனர்.

"நாய்களே! நாய்களே!" என்று தொடங்கி கெட்ட வார்த்தைகளால் திட்டித்தீர்த்தான் இடி அமீன்.

"மன்னித்துக்கொள்ளுங்கள். உங்களைப் போலவே ஒருவரை கொண்டுவந்து விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளை ஏமாற்றி விட்டார்கள். இஸ்ரேலிய மொசாட்டின் திட்டம்தான் இது." என்றார் ஒரு அதிகாரி.

"என்னைப்போல் ஒருவன் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தான்?" என்று கேட்டான் இடி அமீன். அதிகாரிகள் முழித்துக்கொண்டிருந்தார்கள்.

"சகல பயணிகளையும் மீட்டுக் கொண்டு போய்விட்டார்களா?"

"ஆம், ஆனால் ஒரு பெண்மணி மட்டும் வைத்தியசாலையில் இருக்கிறாள். சிகிச்சைக்காக விமானத்தில் இருந்து இறக்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டுவிட்டதால், அவள் மட்டும் நம்கையில் இருக்கிறாள்."

"எந்த வைத்தியசாலையில் இருக்கிறாள்?" என்று கேட்டபோது இடி அமீனின் முகத்தில் தெரிந்த கோபத்தைக் கண்டு அதிகாரிகள் பயந்து போனார்கள். மருத்துவமனையின் பெயர் சொன்னார்கள்.

இடி அமீன் தனது இடதுகாலால் தரையை உதைத்துக்கொண்டு, "வாருங்கள் என்னோடு" என்று உரத்து கூவிக்கொண்டு புறப்பட்டான்.

பிரிட்டிஷ் பிரஜையான டோராபல்ச் வயதான பெண்மணி. கம்பாலா மருத்துவமனைக் கட்டிலில் கிடந்தபடி, 'பேரப்பிள்ளைகளை எப்போது போய் காணப்போகிறேனோ?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

நர்ஸ்சுகள் சிலர் அவள் இருந்த பகுதிக்கு பீதியுடன் ஓடிவந்தார்கள்.

மூதாட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை. மலங்க மலங்க விழித்தாள்.

கறுத்த குள்ளமான ஒரு ஆள் இராணுவ உடையோடு தன்னை நோக்கி வருவதை பார்த்தாள். அவன் முகத்தில் தெரிந்த கொடூரம் மூதாட்டியை பயமுறுத்தியது.

யாரோ ஒரு இராணுவ அதிகாரியாக்கும் என்று மூதாட்டி நினைத்தாள். விமானக் கடத்தல் நாடகம் முடிவுக்கு வந்து விட்ட தாக்கும். அதுதான் என்னை அனுப்பிவைக்க அதிகாரியே நேரில் வருகிறாரோ என்று நினைத்தபோது, மூதாட்டி தனக்கு பத்து வயது குறைந்ததுபோல உணர்ந்தாள்.

மெல்ல அசைந்து கட்டிலில் எழுந்து அமர்ந்தாள். அவள் அமரவும் இடி அமீன் கட்டிலுக்கு அருகே வரவும் சரியாக இருந்தது.

வந்தவன் ஒரு பேச்சும் இல்லாமல் மூதாட்டியின் கழுத்தில் தன் இரு கரங்களையும் போட்டு இறுக்கத் தொடங்கினான்.

நர்ஸ்சுகள் கண்களை மூடிக்கொண்டார்கள். கூட வந்த அதிகாரிகள் வேறுபுறம் பார்த்துக் கொண்டார்கள்.

மூதாட்டியின் நாக்கு வெளியே தொங்கியது. விழிகள் மரண பயத்தில் விரிந்தன. கால்களை உதைத்து உதைத்து, அதுவும் அடங்க, இறுதியாய் ஒரு துடிப்புத் துடித்து விட்டு மூதாட்டியின் கடைசி மூச்சும் அடங்கியது.

இடி அமீன் முகத்தில் பரம திருப்பதி.

"உனக்கு ஒரு மச்சமிருக்குமே" என்றான் கறுப்பழகி ஒருத்தியிடம் கார்லோஸ்.

"இன்னும் என்னை முழுமையாகப் பார்க்கவே இல்லையே, எப்படி தெரியும்?" என்றாள்.

"அதுதான் கார்லோஸ்" என்றான்.

"பொய்! எனக்கு மச்சமேயில்லையே!"

"இருக்கிறது இடதுபக்க காலில் முழங்காலுக்கு மேலே."

"இல்லை!"

"நிரூபிக்கிறேன் வா" என்று அவளை தன்பக்கமாக இழுத்துக் கொண்டபோது கதவு தட்டப்பட்டது.

கார்லோஸ் அலுத்துக்கொள்ள, கறுப் பழகி சென்று கதவு திறந்தாள்.

இடி அமீன் கார்லோஸை உடனடியாக வரச்சொல்லியிருந்தான். சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டு; "வந்து மச்சம் எங்கே என்று காட்டுகிறேன், தயாராக இரு என்ன." கண்ணடித்துவிட்டு சென்றான்.

"இஸ்ரேலிய கொமாண்டோக்கள் வந்து பயணிகளை மீட்டுச் சென்றுவிட்டார்கள். அதிரடி தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

இடி அமீன் போன்ற தோற்றமுள்ள ஒருவனை தயார்செய்து கொண்டுவந்து, என்டபே விமான நிலைய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏமாற்றிவிட்டார்கள்." என்றெல்லாம் கார்லோஸுக்கு நடந்த சம்பவத்தை விளக்கினார் ஒரு அதிகாரி.

இடி அமீன் இப்போதும் கோபமாக இருந்தான். கண்கள் சிவந்திருந்தன.

கார்லோஸ் தன்னைப்பற்றி குறைவாக எடைபோடப்போகிறானோ என்றும் இடி அமீன் கவலைப்பட்டான்.

ஆனால்-கார்லோஸ்-

அமைதியாகப் புன்னகைத்தான்.

"இஸ்ரேலியர்கள் திறமையான, புத்திசாலியான எதிரிகள்தான்" என்றான் கார்லோஸ்.

"கிண்டல் செய்கிறாயா கார்லோஸ்?"

"இல்லை, உண்மையான வீரனுக்கு எதிரியை மதிக்க தெரிந்திருக்கவேண்டும். அவன் பலத்தை மதிப்பிடவும் தெரிந்திருக்க வேண்டும்." என்றான் கார்லோஸ்.

தன் சகாக்களின் உடல்களை காண்பதற்காக விமானநிலையத்திற்கு புறப்பட்டான் கார்லோஸ்.

அதேவேளை சோவியத் யூனியனிலும், ஃபிரான்ஸிலும் இருநாட்டு உளவுத்துறைகளும் கார்லோஸ் விடயமாக ஆராய்ந்து கொண்டிருந்தன.

சோவியத் யூனியன் ஆராய்ந்தது கார்லோஸை எப்படி பயன்படுத்துவது என்று.

ஃபிரான்ஸ் ஆராய்ந்தது கார்லோஸை எப்படி பழிதீர்ப்பது என்று.

இரண்டுக்கும் நடுவில் கார்லோஸின் சாகசங்கள் அடுத்த வாரம்.

(சாகசம் தொடரும்)

தருவது ரச்சன்

# வானலைவழியாக வீட்டுக்குள்!

## தொலைக்காட்சிகளில் சூடு



நம்நாட்டிலும் தொலைக்காட்சி அலை வரிசைகள் புதிது புதிதாக முளைத்துக் கொண்டிருக்கின்றன.

தனியார் தொலைக்காட்சிகளில் புதிதாக வந்திருப்பது 'டயானா விஷன்' தற்போது சி.என்.என் செய்திகளைத் தான் ஒளிபரப்பி வருகிறார்கள். நாளடைவில் படங்களை ஒளிபரப்பலாம்.

சகல தொலைக்காட்சிகளிலும் ஆங்கிலப் படங்களின் ஆதிக்கம்தான்.

'ஐயோ செக்ஸ்' என்று கண்களை பொத்திக் கொள்ளுபவர்கள் செய்திகள் ஒளிபரப்பாகும் நேரத்தில் மட்டும்தான் தொலைக் காட்சியை திறக்கலாம். அப்படித்தான் இருக்கிறது நிலமை.

உலகம் வேகமாக மாறிவருகிறது. அதற்கேற்ப நாமும் மாறித்தான் ஆகவேண்டும் என்று நினைப்பவர்கள் தொலைக்காட்சிகள் முன்பாக அமர்ந்து கொள்ளலாம்.

உதட்டோடு சேர்த்து முத்தமிடும் காட்சிகள் முன்பொரு காலத்தில் மகா ஆச்சரியம். இப்போது அது ஒரு சாதாரண காட்சியாகிவிட்டது. நீண்ட நேரம் சிரத்தையாக முத்தமிடும் காட்சிகளை மட்டுமே கட்டம்போட்டு மறைக்கிறார்கள்.

ஈ.ரி.வி 2 இல் 'பே வோட்ச்' என்றொரு படம் பிரதி ஞாயிறு தோறும் காண்பிக்கப் படுகிறது. கடல் கண்காணிப்பு என்று அதனை தமிழ்ப் படுத்தலாம்.

கடல் என்பதால் நீச்சல் உடைகளில் பிரபல மொடல் நடிகைகளை சுற்றித்திரிய வைத்திருக்கிறார்கள். எல்லோருமே தளதளவென்று தெரிந்தெடுக்கப்பட்டு கவர்ச்



சியை நம்பியே எடுக்கப்பட்ட படம்.

அரச கட்டுப்பாட்டில் உள்ள தொலைக் காட்சிகள் முதல், தனியார் தொலைக்காட்சி வரை ஒளிபரப்பும் ஆங்கிலப்படங்களில் அநேகமானவை தாராளமயப்படங்கள்தான்.

தணிக்கைக் கட்டம் போட ஆரம்பித்தால் படம் முழுக்க போட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழ் படங்கள்-தமிழ் படப் பாடல்கள் மட்டும் என்ன குறைந்தா போய்விட்டன.

முத்தக் காட்சிகள் இல்லையே தவிர, ஆங்கிலப் படங்களை தூக்கி லபக்கென்று விழுங்கும் அளவுக்கு நெருக்கமான காட்சிகள் தமிழ் படங்களில் வந்துவிட்டன. பாடல் காட்சிகளில் வெளிப்படுத்தும் ஒவ்வொரு அசைவுக்கும் 'செக்ஸ்' ரீதியான அர்த்தம் உண்டு. இந்திப் படங்களில் என்றால் சொல்லவே வேண்டாம்.

இவற்றையெல்லாம் பார்க்காதே என்று தடுப்பதைவிட, பார்த்து தானாக சலிப்பு ஏற்படட்டும் என்று விட்டுவிடுவது தான் நல்லது என்கிறார்கள் உளவியலாளர்கள் பலர்.

தடுக்கத்தடுக்கத்தான் மீறும் ஆர்வம் வருகிறது. மறைக்க மறைக்கத்தான் பார்க்கும் ஆசை தோன்றுகிறது.

இப்போதெல்லாம் முன்புபோல நெருக்கமான காட்சிகளை யாரும் விழி விரிய, வாய்பிரிய பார்த்துக் கொண்டிருப்பதில்லை. 'அட இவ்வளவுதானா?' என்று பார்த்து சலித்துவிட்டதே காரணம் என்கிறார் ஜப்பானிய உளவியல் நிபுணர் ஒருவர்.

ஜப்பானில் சில அலைவரிசைகளில் நீலப் படங்கள் ஒளிபரப்படுகின்றன. அவற்றை ரசிப்பவர்களின் தொகை முன்புபோல இல்லை என்று ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

இந்தியாவில் தனியார் அலைவரிசைகள் ஆரம்பமானபோது இருந்த ஆர்வம் தற்போது வீழ்ச்சியடைந்துவிட்டது.

நம்நாட்டைப் பொறுத்தவரை அரச, தனியார் தொலைக்காட்சிகள் அனைத்துமே தற்போது சலிப்பூட்டியே வருகின்றன.

நம்நாட்டில் தொலைக்காட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறதே தவிர, நிகழ்ச்சிகளில் புதுமை இல்லை. நிறைவும் இல்லை.

ஆங்கிலப்படங்கள் என்றால் ஜொள் விடுபவர்கள்கூட இப்போது சலித்துப் போய்விட்டார்கள்.

"வானலைவழியாக செக்ஸ் மலினப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இளம் தலைமுறை சூடாக்கப்பட்டு, கெட்டுக் கொண்டிருக்கிறது." என்றும் ஒரு சாரார் வாதிட்டுக் கொண்டிருக்கின்றனர். அதனை யாரும் காதில் போட்டுக் கொள்வதாக தெரியவில்லை.

# அழகிப் போட்டிகளில் ஊழல்

உலக அழகிப் போட்டிகள் நடத்தப் படுவது சரியா, தப்பா என்று உலகெங்கும் விவாதங்கள் நடத்தப்படுகின்றன.

அதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, அழகிப் போட்டிகள் தொடர்பாக சில சர்ச்சைக்குரிய சமாச்சாரங்கள் அடிபடத் தொடங்கியுள்ளன.




அழகிப் போட்டிகளில் நடுவர்களாக இருப்பதற்கு பெரும் புள்ளிகள் மத்தியில் பலத்த போட்டியாம்.

போட்டி ஏன் என்று விசாரித்ததில் பல விகாரமான விஷயங்கள் வெளிப்பட்டுள்ளன.

அழகிப் போட்டியில் வெற்றிபெற விரும்பும் தந்திரமான அழகிகள் நடுவர்களை முன்கூட்டியே தனியாகச் சந்தித்துவிடுகிறார்கள். நடுவர்களை சந்தோசப்படுத்துவதோடு, தமக்கு கிடைக்கும் பரிசுத்தொகையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை தருவதாகவும் ஆசை காட்டி விடுவார்கள்.

பிறகென்ன, குறிப்பிட்ட அழகி அரங்கில் தோன்றும்போது நடுவர்கள் புள்ளிகளை அள்ளிப்போட்டுவிடுவார்கள்.

குறிப்பாக நாடுகளுக்குள் நடத்தப்படும் அழகிப்போட்டிகளில்தான் ஊழல்கள் அதிகம்.

அழகிப் போட்டிகள் ஒரு வியாபாரமாகி வருகின்றன. அதனால் அவற்றில் வெற்றி பெற்று பணம் சம்பாதிக்க பலத்த போட்டி ஏற்பட்டுவருகிறது.

அழகிப் போட்டிகளில் வெற்றி பெறும் அழகிகளுக்கு பெரும் கோடீஸ்வரர்களிடமிருந்து அழைப்புக்கள் கிடைக்கின்றன. அழைப்பை ஏற்றால் பணம் சுளையாகக் கிடைக்கிறது.

உலக அளவில், நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாமல், நாடுகளுக்குள் பிரதேச ரீதியாகவும்கூட அழகிப் போட்டிகள் நடக்கத் தொடங்கியுள்ளன.

கப்பல்களுக்குள் கூட அழகிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.


கப்பலில் பொழுதுபோக்குக்காக உல்லாச பயணம் செய்யும் பணக்காரப் புள்ளிகளை கவரத்தான் அந்த ஏற்பாடு.

அழகிப் போட்டிகளில் பல ரகங்கள் வந்துவிட்டன. கால் அழகிப் போட்டிகள் கூட நடத்தப்படுகின்றன.

அமெரிக்கா, ஜெர்மன் போன்ற நாடுகளில் கால் அழகிகளுக்குத்தான் கோடீஸ்வர வட்டாரங்களில் வரவேற்பு.

இதுதவிர, அழகிப் போட்டிகளில் வெற்றி பெறுகிறவர்களுக்கு சினிமா வாய்ப்புக்கள், விளம்பர பட வாய்ப்புகள் தேடி வருகின்றன. அதனால் எப்படியாவது அழகிப் போட்டிகளில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற வேகத்தில் தமது அழகையே மூலதனமாக்கிக் கொள்கிறார்கள் அழகிகள்.

# வாத்து மேய்க்கும் வாத்தியார்




மனிதர்கள் மத்தியில்தான் வேடிக்கை வினோதப் போட்டிகள் நடக்க வேண்டும் என்று சட்டமா என்ன, அமெரிக்காவில் உள்ள தென் ஃபுளோரிடாவில் விலங்குகளுக்கு மத்தியில் வினோத விளையாட்டுப் போட்டி.

நாயின் முதுகில் சொகுசாக சவாரி செய்தபடி வாத்து மேய்த்த குரங்காருக்குத் தான் முதல் பரிசு கிடைத்தது. மிருகக் காட்சி சாலையொன்றில் நீண்டநாட்களாக கொடுக்கப்பட்ட பயிற்சியின்பின்னரே போட்டியில் கலந்து கொண்டு பார்வையாளர்களை அசத்தினவாம் மூன்றும், (நாய், குரங்கு, வாத்து) கற்றுக் கொண்டது கெட்டித்தனம்தான்.

## வித்தியாசமான சிலை

சிறுவர்கள் இருவரும் ஏறிநின்று விளையாடுவது சப்பாத்தில். உலகிலேயே இராட்சத உயரமான சப்பாத்துச் சிலை இதுதான். ஹங்கேரி நாட்டில் நாகிரகோஸ் என்னும் கிராமத்தில் இதனைக் காணலாம். பளிங்கு, சுண்ணாம்பு, சிமெண்ட் மூன்றும் கலந்து உருவாக்கியுள்ளனர். எடை 5 தொன். உயரம், 6 அடி, நீளம் 10 அடி. யார் யாருக்கோ சிலை எடுக்காமல் நமக்காக தேயும் சப்பாத்துக்கு சிலை எடுத்தவர்களை பாராட்டலாம்.



# முள்ளம் பன்றி வந்தல்லோ மூக்கில் தந்தல்லோ

மாணவனின் மூக்கில் முத்தமிடுவது ஒரு வகையான முள்ளம் பன்றி. இதனை அன்போடு வளர்த்துவருவதும் இந்த மாணவன்தான். அமெரிக்காவில் உள்ள போனிக்ஸ் உயர் கல்லூரியில் நடக்கும் சுற்றுச் சூழல் வகுப்புக்கள் பிரபலமானவை. மாணவர்களுக்கு பிராணிகளையும் நேசிக்க கற்றுக் கொடுக்கிறார்கள். (நம் நாட்டில் பிரயாணிகளையே நேசிக்கிறார்களில்லை.) ஆடுகள், பன்றிகள் என்பவற்றை மாணவர்கள் பிரியமாக வளர்க்கிறார்கள்.




## தகவல் பெட்டி

# விசித்திர முதலை

முதலையைக் கண்டிருப்பீர்கள். வெள்ளை முதலையைக் கண்டிருக்க மாட்டீர்கள். படத்தில் இருப்பதுதான் அதிசயமான வெள்ளை முதலை. 'அலிகேட்டர்' எனப்படும் பெரிய முதலையினத்தில் பிறந்தது. இதனிடம் ஒரு குணம் இருக்கிறது. அடிக்கடி கோபம் வருமாம். கோபம் வந்தவுடன் உடல் முழுவதும் சிவப்பாக மாறிவிடுமாம். நாணம் வந்துதான் உடல் சிவக்கிறதாக்கும் என்று நினைத்து அருகில் போனால் கதை கந்தல்தான்.



# கால்வாயில் கப்பல்




இரண்டு கடல்களை இணைக்கும் கால்வாய் சூயஸ் கால்வாய். இந்தக் கால்வாயின் நீளம் 100 மைல். செங்கடலில் இருந்து மெடிடரேனியன் கடலுக்கு செல்லும் கப்பல்களுக்கு வசதியாக கடல்மட்ட அளவில் 1869ம் ஆண்டில் கால்வாய் கட்டப்பட்டது. செங்கடல்நீர் இதன் வழியாகச் சென்று மெடிடரேனியன் கடலுடன் கலக்கிறது. இந்தக் கால்வாயை கட்டிமுடிக்க பத்துவருடம் சென்றது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வியர்வையும் கடல்நீரோடு கலந்தது. இக் கால்வாய் வழியாகத்தான் கப்பல் போக்குவரத்து நடக்கிறது. படத்தில் தெரியும் கப்பல் தரைதட்டி நிற்கிறதாக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள். தப்பு. சூயஸ்கால்வாய்க்குள் கப்பல் செல்லும் காட்சிதான் இது.

இளம்பிள்ளைவாதம் வந்த குழந்தைகளை நீரில் மிதக்கவிட்டால் நல்லதாம். நீந்தத் தெரியாத சிறு குழந்தைகளை குளிக்கும் தொட்டியில் இறக்கினால் அவை மூழ்கிவிடுமே? இதற்காக துணிபோன்ற ஒரு புதிய பொருளை இலண்டன் நிபுணர்கள் தயாரித்திருக்கின்றனர். அதில் நீர்க் குமிழிகள் அப்படியே ஒட்டிக் கொள்வதால், அது மிதந்து கொண்டேயிருக்கும்.

அந்தப் பொருளைக் கொண்டு குழந்தைக்குக் குளிக்கும் உடை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதை அணிவித்து குழந்தையைத் தண்ணீரில் இறக்கினால் தலை எப்போதும் நீருக்குமேல் இருக்கும்படி குழந்தை மிதக்கும். அழிந்து போகாது. பரீட்சார்த்த முயற்சியாக மிதக்கவிடப்பட்ட குழந்தைதான் இது.

# மிதக்கும் குழந்தை



## முன்னாள் நடிகைகள் பட்டாளம்

'சித்திரலேகா', 'நிலவு' ஆகிய படங்களை இயக்கிய தம்பிராஜ் அடுத்து இயக்கப் போகும் படம் 'ருக்குமணி'.

'ருக்குமணி' படத்தில் இரண்டு கதாநாயகர்கள். அதில் ஒருவர் [illegible]. இன்னொரு கதாநாயகனை தேர்வுசெய்து கொண்டிருக்கிறார்கள்.

கதாநாயகிகளாக [illegible] ஆகிய புதுமுகங்கள் நடிக்கின்றனர்.

முன்னாள் கவர்ச்சி நடிகைகள் மீது தம்பிராஜுக்கு அப்படி என்ன பிரியமோ தெரியவில்லை. ஜோதிலட்சுமி, ஜெயமாலினி, சி.ஐ.டி. சகுந்தலா, அனுராதா, ஜெயகுமாரி ஆகியோரை தேடிப்பிடித்து கொண்டுவந்து நடிக்கவைக்கிறார்.

கவுண்டமணி, செந்தில் ஆகியோரும் நடிக்கின்றனர்.

ஒரே படத்தில் ஆர். சுந்தர்ராஜன், கே. நடராஜ், கார்வண்ணன், விசு, மணிவண்ணன் ஆகிய 5 இயக்குநர்களும் நடிப்பது மற்றொரு புதுமை.

## 'லத்தி சார்ஜ்'

தமிழில் படம் தயாரித்து கையைச் சுட்டுக் கொண்டார் ரோஜா. இப்போது தெலுங்கில் 'லத்தி சார்ஜ்' என்னும் படத்தை தயாரிக்கிறார். கதாநாயகி ரோஜா. கதாநாயகன் ஜெயராம். கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதை என்பதால் தெலுங்கு ஹீரோக்கள் நடிக்கத் தயங்கினார்களாம். அதனால்தான் ரோஜா ஜெயராமை அழைத்தாராம். ஜெயராமுக்கு நல்ல சான்ஸ்.

## பூரிப்பு

விஜயகாந்த்-ரோஜா நடித்துள்ள 'தமிழ் செல்வன்' படம் நன்றாக வந்துள்ளதாம். பாரதிராஜா ரொம்பவும் புகழ்ந்தாராம் ரோஜாவை. மோதிரக்கையால் குட்டுப்பட்ட பூரிப்பில் இருக்கிறார் ரோஜா.





பிரபு-மதுபாலா
படம்: பாஞ்சாலங்குறிச்சி

## ஐஸ்வர்யாவுக்கு ஐஸ்

'ஆனந்தம்' படத்தில் உலக அழகி ஐஸ்வர்யா ராயுடன் ஜோடியாக நடிக்கிறார் மோகன்லால். ஐஸ்வர்யா ராயைப் பற்றி ரொம்பவும் புகழுகிறார்.

"ஐஸ்வர்யா ராய் ரொம்ப புத்திசாலியான பெண். தான் புத்திசாலி என்பதை உலக அழகிப் போட்டியில் தேர்வு பெற்றபோதே நிரூபித்தவர். நன்றாக நடிக்கிறார். மென்மையானவர். நடிகை என்ற வகையிலும் புகழ் பெறுவார்," என்கிறார் மோகன்லால்.

## ஷில்பா [illegible]

ஷில்பா ஷெட்டியுட[illegible]
தொடங்கியிருக்கிறார்கள் [illegible]
கோவிந்தாவின் [illegible]
நடிகைகள் பலர் அவரை [illegible]
ஒருவர் ஷில்பா ஷெட்டி.
ஷில்பா ஏற்கெனவே அ[illegible]
இணைத்துப் பேசப்பட்ட[illegible]
"கோவிந்தா ஒரு [illegible]
பத்திரிகைக்கு பேட்டியில் [illegible]
ஷில்பா சொன்னதற்கு [illegible]
விட்டார்கள்.

## ஏப்ர[illegible]

'சிவசக்தி' [illegible]
விட்டுத்தான் [illegible]
கலந்துகொ[illegible]
ஒரே [illegible]
செலுத்தி [illegible]
சத்ய[illegible]



ராஜஸ்ரீ
படம்: ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெ[illegible]

## ஊர்வசியின் அறை

கவர்ச்சிகாட்டி நடிக்க விருப்பாதவர் நடிகை ஊர்வசி.

சமீபத்தில் மலையாளப் படம் ஒன்றில் நடித்துக் கொண்டிருந்தார் ஊர்வசி. பிரபல மலையாள இயக்குநர் ஒருவர் இயக்கும் படம் என்பதால் சற்றுக் கவர்ச்சி காட்ட சம்மதித்தார்.

பாடல் காட்சி ஒன்று படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பாடல் காட்சியை விளக்குவதற்காக ஊர்வசியிடம் வந்தார் இயக்குநர். எப்படி நடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் திடீரென்று ஊர்வசியை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாராம்.

முதலில் அதனை சாதாரணமாகத்தான் எடுத்துக்கொண்டாராம் ஊர்வசி. தொடர்ந்து இயக்குநரின் கைகள் செய்த விஷமங்களால் வெகுண்டெழுந்த ஊர்வசி விட்டாராம் ஒரு அறை.

படப்பிடிப்புக் குழுவினரே திகைத்து நின்று விட்டார்களாம். இயக்குநர் உற்சாகமான உணர்வில் அப்படி நடந்துகொண்டு விட்டதாக தயாரிப்பாளர் மன்னிப்புக் கேட்டாராம்.

படப்பிடிப்பை இரத்துச் செய்யச் சொல்லி விட்டு திரும்பிவிட்டார் ஊர்வசி. தயாரிப்பாளர் தலையில் கைவைத்துக்கொண்டு இருக்கிறார்.

## இரு நாயகிகளோடு 'சின்னமாமன்'

மம்முட்டி, மோகன்லால், ஜெயராம் என்று தமிழ்ப்பட உலகுக்கு வந்துள்ள மலையாள நடிகர்கள் பட்டியலில் மற்றொருவரும் சேருகிறார். கே. ஜெயன்தான் அந்த புதுவரவு.

நடிகை ஊர்வசியின் காதலரான கே.ஜெயன் மலையாளத்தில் பிரபல நடிகர். ஊர்வசி மலையாளப்படங்களில் நடிக்க ஆரம்பித்தபோது அவருக்கு ஆதரவாக இருந்தவர் ஜெயன். நட்பு காதலாகிவிட்டது.

இப்போது தமிழில் கே.ஜெயன் நடிக்கும் படத்தில் அவருக்கு ஜோடி ஊர்வசி. மற்றொரு ஜோடி ஹீரா.

படத்திற்கு 'சின்னமாமன்' என்று பெயரிட்டுள்ளனர்.

மணிவண்ணன், ஆனந்தராஜ், செந்தில், அலெக்ஸ், வினுச்சக்கரவர்த்தி, கரிகாலன், கோவை சரளா ஆகியோரும் நடிக்கிறனர்.

பாடல்கள் வாலி, இசையமைப்பது புதியவர், பெயர் சரத். கதை, வசனம், இயக்கம் என்.கலைஅரசன்.

## விஜய் விரும்பும் பெண்

பூவே உனக்காக படத்தின் வெற்றியால் பூரித்துப் போயிருக்கிறார் விஜய்.

தனது வயதை ஒளிக்காமல் சொல்கிறார் விஜய். 22 வயது. மூன்று வருடங்கள் சென்ற பின்னர்தான் கல்யாணம், கச்சேரி பற்றியெல்லாம் யோசிப்பாராம்.

படித்த, குடும்பப் பாங்கான, எக்கச்சக்கமான அன்பு நிறைந்த பெண்ணாக கிடைத்தால் எந்த மதமாக இருந்தாலும் ஓகே பண்ணுவாராம். எல்லாம் மூன்று வருடங்களுக்கு பின்னர்தான்.

## [illegible]

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் தன் பெண் பிள்ளைக்கு பெயர் சூட்ட நீண்ட கால அவகாசம் எடுத்துக் கொண்டார். தற்போது ஒருவழியாக பெயர் சூட்டிவிட்டார். கதீஜா என்பதுதான் பெயர்.



கார்த்திக்-கனகா
படம்: கட்டப்பஞ்சாயத்து

## பிரபு-குஷ்பு ச[illegible]

திருமணத்திற்காக மூன்று வருடம் கா[illegible] விட்டார் சி.சுந்தர். அதுவரையும் என்ன [illegible] யோசிக்கிறார் குஷ்பு. "தரமான பாத்திர[illegible] தாராளமாக நடிக்கலாம் எனக்கு ஆ[illegible] என்று சொல்லிவிட்டாராம் சி.சுந்தர்.

சமீபத்தில் சென்னை விழா ஒன்றி[illegible] சென்றார் குஷ்பு. விழாவின் இடை நடுவி[illegible] செய்தியை குஷ்புவிடம் சொன்னார்க[illegible] பட்டார் குஷ்பு. அதற்கிடையே பிரபு வந்[illegible] குஷ்புபாடு திண்டாட்டமாகிவிட்டது. வெளியேறிவிட்டார் குஷ்பு.

## தாத்தாவுக்கு [illegible]

நடிகை மாதுரி டிக்ஷித் மீது [illegible] எம்.எப். ஹுசைன் பிரியம் வைத்திரு[illegible]

மாதுரி டிக்ஷித்தின் ஒவ்வொ[illegible] கவிதைத்தனம் இருக்கிறது என்று சொ[illegible]

மாதுரி டிக்ஷித்தும் தாத்தா ஹுசை[illegible] இருந்தார். தனது தீவிர அபிமா[illegible] காட்டினார். ஆனால் ஹுசைனின் [illegible] வெறியாக மாறிக் கொண்டிருக்கிற[illegible] தினமும் செல்கிறாராம். மாதுரி[illegible] ஆராதிக்க வேண்டும்.

என்று புலம்பாத குறையாக சொ[illegible] ராம். தாத்தாவுக்கு தேவை [illegible]தானா?

## 'ஆனந்தம்' படத்தில் அரசியல்?

'ஆனந்தம்' படத்தில் தமிழக அரசியல் சமாச்சாரங்கள் இடம்பெறக்கூடும் என்று ஒரு தகவல்.

ஆனால் மணிரத்னம் தனது படக்கதைப் பற்றி மூச்சேவிடவில்லை. அதனால் படக்கதையென்ன என்பது யாருக்குமே தெரியாமல் புரளிகள் கிளம்புகின்றன.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, வி.என். ஜானகி போன்றவர்களை பிரதிபலிக்கும் பாத்திரங்களும் படத்தில் இடம் பெறுவதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைப் பிரச்சனை பற்றிய படம் என்று வெளியான செய்திகள் சூப்பர் வதந்தி. மணிரத்னத்தை சங்கடத்தில் மாட்ட படவுலகில் உள்ள சிலர் கிளப்பிவிட்ட புரளியாம்.

'ஆனந்தம்' படத்தில் நடிக்கும் மோகன்லாலை [illegible]யோடு இணைத்து ஒரு [illegible] நடிக்கவைக்க [illegible] செய்யப்படுகிறது.

மலையாள நடிகர்கள் தமிழில் வந்து தமக்குள் போட்டி போட ஆரம்பித்து விட்டார்கள். மம்முட்டி, மோகன்லால், சுரேஷ்கோபி, ஜெயராம் ஆகியோர் மத்தியில் தான் போட்டி. சுரேஷ் கோபி, பிரபுவுடன் இணைந்து 'அலாவுதீன் பூங்கா' படத்தில் நடித்துவருகிறார்.



விக்னேஷ்-அம்ரிதா
படம்: டேக் இட் ஈஸி ஊர்வசி

## ராஜஸ்ரீயின் முடிவு

மன்சூர்அலிகான்-ராஜஸ்ரீ நடிக்கும் படம் 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே'

கருத்தம்மா படத்தில் பாரதிராஜா அறிமுகம் செய்த நடிகை ராஜஸ்ரீ. நல்ல நடிகை என்று பெயர் கிடைத்தது. வாய்ப்புக்கள் வரவில்லை. பெயர் மட்டும் இருந்து என்ன பயன்? பணம் வேண்டாமா?

அதனால் கவர்ச்சியாக நடிக்க முடிவெடுத்தார் ராஜஸ்ரீ. 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' படத்தில் தாராளமாக கவர்ச்சி காட்டி நடித்துக் கொண்டிருக்கிறார். உதாரணத்திற்காக ஒரே ஒரு படம் இங்கு பிரசுரமாகியிருக்கிறது.

## மத மாற்றம்

பிரபு தேவாவைக் காதல் மணம் செய்து கொண்டதாக அடிபட்டவர் ரம்லத். நடனக் குழுவில் இருந்த முஸ்லீம் பெண். தற்போது நடனத்திற்கு 'குட்பை' சொல்லிவிட்டாராம். அது மட்டுமல்ல மதம் மாறிவிட்டாராம். அதாவது இந்துப் பெண்ணாக மாறிவிட்டாராம். தனியார் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக இருப்பதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.



# சினி விசிட்

## கல கல வாசல்

கல்லூரி வாசல் என்ற பெயர் சூட்டாமல் கல கலவாசல் என்று சூட்டியிருக்கலாம். படம் முழுக்க ஒரே கலகல, கிளு, கிளு.

பிரசாந்த், அஜித்குமார், பூஜாபட், தேவயானி ஆகியோர் சுவாரசியமாக உணர்ந்து நடித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

'கல்லூரி வாசல்' நன்றாக ஓடுவதால் பூஜாபட்டை தேடி தமிழ் பட தயாரிப்பாளர்கள் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பம்பாயில் அல்லது மும்பாயில் பூஜாபட்டுக்கு பல சோலிகள். அவற்றையெல்லாம் ஓரம் கட்டிவைத்துவிட்டு கோடம்பாக்கத்தில் குடியேறமுடியுமா? முடியாது. அதுதான் வாய்ப்புகளை ஏற்க தயங்குகிறார் பூஜாபட்.

## ரம்பா மிதப்பார்

பம்பாயில் இருந்து தமிழுக்கு வந்த நடிகைகளை ஊதிய விஷயத்தில் ஊதித்தள்ளிவிட்டார் ரம்பா.

'உள்ளத்தை அள்ளித்தா' படம் வசூலை அள்ளித் தந்ததால் ரம்பாவும் ஊதியத்தை உச்சத்துக்கு கொண்டு வந்துவிட்டார்.

'செங்கோட்டை' 'சுந்தரபுருஷன்' ஆகிய படங்களும் வெளியாகி பிய்த்துக் கொண்டு ஓடினால் ரம்பா வானத்தில் மிதக்கப்போகிறார்.

## கண்ணம்மா மீனா

'பாரதி கண்ணம்மா' படத்தில் கிராமத்து இளைஞனாக நடிக்கிறார் பார்த்திபன். பாரதி என்பது அவரது பட்டப் பெயராம். கண்ணம்மா யார்- மீனாவேதான்.

வெளிவார் படமான 'பாரதி கண்ணம்மா', 'அரவிந்தன்' ஆகிய படங்களில் நடித்தாலும் தனது சொந்தப் படமான 'சோத்துக் கட்சி' வேலைகளையும் கவனிக்கத் தவறுவதில்லை ...ராம் பார்த்திபன்.

அஜீத் குமார்-தேவயானி
படம்:- கல்லூரிவாசல்



முகப்பில்
ராமராஜன்
ஊர்வசி

மோகினி
படம்: விஸ்வநாத்

## ...சொன்ன சேதி

...த்தாவும் அடிக்கடி சந்திக்கத் ...கிசு கிசு கிளம்பியிருக்கிறது.

...சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளதால் ...ளாக்கத் தொடங்கிவிட்டனர். அதில்

...ார், சுனில்ஷெட்டி என்று பலரோடும் ...போது கோவிந்தாவுடன் சுற்றுகிறார். ...டுப்பிள்ளை" என்று ஷில்பா ஒரு ...வித்தொலைத்தார். வந்தது வம்பு. ...ரு வியாக்கியானம் செய்யத் தொடங்கி

## ...வள்ளல் படப்பிடிப்பு

...சேதி' படங்களை முடித்துக் கொடுத்து ...ளல்' படத்தின் படப்பிடிப்பில் ...சத்யராஜ்.

...ல் பல படங்களில் நடித்தால் கவனம் ...டாக நடிக்க முடியாது என்பது ...பாலிசி.

...ஜின் மனேஜர் தயாரிக்கும் படம் ...'வள்ளல்' வித்தியாசமாக இருக் ...பரல் புத்தாண்டின் பின்னர்தான் ...ளல்' படத்திற்காக தேதி கொடுப்பார் ...சத்யராஜ்.

## மினி சினி

* பிரபு-சத்யராஜ் இணைந்து நடிக்கும் 'சிவசக்தி' படத்தில் 'தொட்டாச்சிணுங்கி', 'கல்லூரி வாசல்' ஆகிய படங்களில் இரண்டாவது நாயகியாக நடித்த தேவயானி ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார்.

* விஜயகாந்தின் 'நாயகம்' படத்தில் காஷ்மீர் தீவிரவாதியாக வித்தியாசமான மேக்-அப்பில் நடித்த மன்சூர் அலிகான், இப்போது விஜய் நடிக்கும் 'மாண்புமிகு மாணவன்' படத்தில் ஏறிய நெற்றி மற்றும் தொப்பையுடன் அரசியல்வாதியாக நடிக்கிறார்.

* பிரபல தெலுங்கு இசையமைப்பாளரான கோட்டி. என். சுபாஷ் சந்திரபோஸ் கதாநாயகனாக நடிக்கும் 'ஏஜண்ட் 15' படத்தின் மூலம் தமிழில் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

* மூன்று முறை சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற சாரதா, சில மலையாளப் படங்களைச் சொந்தமாகத் தயாரித்துள்ளார். விரைவில் இவர் படமொன்றைச் சொந்தமாகத் தயாரித்து இயக்கவுள்ளார்.

* சரத்குமார் புதிய படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். படத்தின் பெயர் பந்தயக்காரன். வி.சி. குகநாதன் இயக்கும் இப்படத்தை டி. ராமநாயுடு தயாரிக்கவுள்ளார்.

* இந்தியில் நாகார்ஜுன் கதாநாயகனாக நடித்த 'கிரிமினல்' (தமிழில் 'எல்லாமே என் காதலி') படத்தை இயக்கிய மகேஷ்பட், மீண்டும் நாகார்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்குகிறார்.

* நதியா நடித்து பாதியில் நின்றுபோன 'பூங்காற்று புதிதானது' படத்தின் படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியுள்ளது. விரைவில் வெளிவரவுள்ள இப்படம் 'மார்கழிப்பூவே' என்ற பெயரில் வெளிவரவுள்ளது.

*தமிழில் தங்கை வேடங்களில் நடித்து வரும் மீரா இரண்டு தெலுங்குப் படங்களிலும், ஒரு கன்னடப் படத்திலும் ரேணுகா என்ற பெயரில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

## ஐந்துகிலோ அவுட்

'சிவசக்தி' படத்தில் சத்யராஜ் பிரபு சம்பந்தப்படும் சண்டைக்காட்சியில் ஒரு விபத்து. பிரபுவின் காலில் அடிபட்டுவிட்டது. சிகிச்சைக்காக ஓய்வில் இருந்தபோது பயங்கர உணவுக் கட்டுப்பாடு. அதன் விளைவாக ஐந்து கிலோ எடை குறைந்துவிட்டதாம்.

முன்னர் சிவாஜிகணேசனும் தனது எடையை அடிக்கடி குறைத்துக் கொள்வது வழக்கம்.

## ஹொலிவூட்டில் மனிஷா

மனிஷா கொய்ராலா இந்தியில், தெலுங்கில், தமிழில் என்று பலமொழிப் படங்களிலும் தன் திறமையைக் காட்டிவிட்டார். அடுத்து ஹொலிவூட் ஆங்கிலப் படத்தில் நடிக்கப் போகிறார். அதற்காக மனிஷா வாங்கப் போகும் சம்பளம் இந்திய பணமதிப்பில் ஒன்றரைக் கோடி. படத்தின் பெயர் தீப் ஒஃப் பாக்தாத். ஸ்டீவன் ஸ்கின் இயக்கவுள்ளார்.

சமீபத்தில் ஸ்டார் வேல்ட் பத்திரிகைக்கு மனிஷா அளித்துள்ள பேட்டியில் படு சூடு.

"திருமணத்திற்கு முன்னர் ஆண்களோடு செக்ஸ் தொடர்பு வைத்துக் கொள்ளலாமா? என்று கேட்கிறார் நிருபர். அதற்கு மனிஷா சொன்ன பதில் இது:

"அதில் தவறு இல்லை என்பதுதான் என்கருத்து. ஒரு இளைஞரை திருமணம் செய்து கொள்ள முன்னர் அவரது திறமையை ஒரு முறை பரீசிலித்துப் பார்ப்பதில் தவறு கிடையாது.

தாம்பத்தியத்தில் ஏற்படும் சிக்கல்களும் மணமுறிவுக்கு காரணமாகிவிடுகின்றன. உறவின் பலம் தீர்மானிக்கப்படுவதில் கட்டிலுக்கும் பங்கிருக்கிறது." என்று சொல்லியிருக்கிறார் மனிஷா.

சென்னை மட்டுமே விரும்பும் ஆணைக் காதலிக்க மாட்டேன் என்றும் சொல்லியிருக்கிறார்.



## ...திப்பு

...க்கச் சொல்லி ...ய்வது என்று ...ள் கிடைத்தால் ...ள கிடையாது."

...ந்துகொள்ளச் ...வரப்போகும் ...ரமாக புறப் ...ந்து விட்டார். ...ன்புறவழியாக

## ...சை

... ஒலியர் எம். ...ழைய செய்தி. ...அசைவிலும் ...வர் ஜொசைன். ...து பிரியமாக ...என்று அன்பு ...ம் தற்போது ...துரி விடுக்கு ...அழகை திவசம்

## ரயில்வே கூலி

சகல மொழிகளிலும் கொடி நாட்டுவது என்று முடிவு செய்துவிட்டார் மம்முட்டி. தெலுங்கிலும் நடித்துக்கொண்டிருக்கிறார். மீனாவும், மம்முட்டியும் நடித்த தெலுங்குப்படம் ஒன்று தமிழில் மொழி மாற்றப்படுகிறது. ரெயில்வே கூலி' என்று பெயர் வைத்துள்ளார்கள். தமிழிலும் மம்முட்டியே குரல் கொடுக்கிறார். அதற்காக தனியான சம்பளம் கொடுத்தால் சரி.

## நக்மாவின் ஒத்துழைப்பு

'ரகசியப் பொலிஸ்' படத்தில் சரத்குமார், நக்மா சம்பந்தப்பட்ட காதல் காட்சிகள் நெருக்கமாக இருந்தன. இப்போது 'அரவிந்தன்' படத்தில் நக்மாவும், சரத் குமாரும் நடிக்கும் காட்சிகள் 'ரகசியப் பொலிஸ்' நெருக்கத்தை யெல்லாம் தூக்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றன.

சரத்குமாரோடு சரளமாக பழகுகிறார் நக்மா. அதனால் காட்சிகளை எடுக்கும்போது இயல்பானதன்மை தெரிகிறது என்கிறார் இயக்குநர். அப்படியா?!




## கதாநாயகனாகிறார் கராத்தே வீரர்

தமிழ்நாட்டில் பிரபலமான கராத்தே பயிற்சியாளர் கராத்தே மணி தமிழ் படங்கள் பலவற்றில் நடித்திருந்தார். சில படங்களில் கதாநாயகனாகவும் நடித்தார். நிலைக்க முடியவில்லை.

இப்போது மற்றொரு கராத்தே பயிற்சியாளர் நடிக்க வருகிறார். உலக சாதனைகள் செய்து புகழ்பெற்ற ஷிஹான் உசைனிதான் கதாநாயகனாக நடிக்கப்போகிறார்.

ஏற்கனவே புன்னகை மன்னன், வேலைக்காரன், 'பிளட்ஸ்ரோன்' (ஆங்கிலம்) ஆகிய படங்களில் உசைனி சிறு வேடங்களில் நடித்திருக்கிறார். புன்னகை மன்னனில் இலங்கைத் தமிழராக நடித்திருந்தவர் உசைனிதான்.

இப்போது உசைனி கதாநாயகனாக நடிக்கும் படம் "மை இந்தியா"

கொள்ளையர் கூட்டமொன்றை அடித்து துாள்பண்ணும் கதையாம். உயர் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் உசைனி.

உசைனிக்கு மற்றொரு அதிஷ்டம் யாதெனில், படத்தில் இரண்டு கதாநாயகிகள். ஒருவர் சுவாதி. மற்றொரு நாயகியாக நடிக்க பஞ்சாப் மாநில அழகி ஒருவரை இறக்குமதி செய்கிறார்கள்.

ஆனந்தராஜ், வடிவேலு, தேவன், தியாகு, டெல்லி கணேஷ், மனோரமா ஆகியோரும் நடிக்கின்றனர்.

திரைக்கதை, இயக்கம் அலெக்ஸ் பாண்டியன்.

'ஜாலியோ ஜாலியோ, லைப் ரொம்ப ஜாலியோ, டோன்ட் வொரி மச்சி, நான் உங்க கட்சி' என்று தொடங்கும் பாடலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.



## ஒருபுறம் ஷில்பா மறுபுறம் நக்மா

கமலஹாசனின் மனைவி சரிகா முன்னாள் நடிகை. அதனால் சினிமா உலக விஷயங்கள் அவருக்கு அத்துப்படி. கமல் நடிக்கும் படங்களில் அவருக்குரிய உடைகளை வடிவமைத்துவந்தார் சரிகா.

அடுத்து படம் ஒன்றை இயக்கப் போகிறார் சரிகா. கதாநாயகன் கமல். அவருக்கு ஜோடியாக ஷில்பா ஷெட்டியையும், நக்மாவையும் நடிக்கவைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்.

## அது எப்படி

'கவர்ச்சி காட்டவே மாட்டேன் போ' என்று அடம்பிடிக்கும் ஒரே நடிகை சங்கீதாதான். ஆனாலும் அவர் கைவசம் பல படங்கள் இருக்கின்றன. அது எப்படி என்று தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு அலைகிறார்கள் தமிழ் படவுலக ஆடைத் தியாகச் செம்மல்கள்.

குழந்தை வளர்ப்பு என்பது மகத்தானது. நாம் வளர்க்கும் முறைகளில் தான் குழந்தைகள் உருவாகின்றன. குழந்தை என்பது பச்சைமண். நாம் நடத்தும் விதத்தில் தான் அவர்களின் குணமும், போக்கும் மாறுகிறது.

ஒரு குழந்தையை 'அப்படிச் செய்யிறியே, இப்படிச் சாப்பிடுகிறாயே,' என்று விமர்சனம் செய்து கொண்டேயிருந்தால் அந்தக் குழந்தை பெரிதாக வளர்ந்ததும் எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசுகின்ற

# எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்!

குழந்தையாகிவிடும்.

கேலி செய்து பேசினோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்; 'இவள் முகத்தைப் பார், மூக்கைப் பார், முழியைப் பார் கோணங்கி மாதிரி' என்று சொல்கிறோம். விளையாட்டுக்குச் சொன்னால் கூட அது குழந்தையின் மனதைப் பாதிக்கும். வளர்ந்த பிறகு அவனுக்குள் ஒரு தாழ்வுமனப் பான்மையைத் தோற்றுவித்துவிடும்.

விஷமம் செய்து கொண்டே இருக்கும் குழந்தையிடம் ஒரு தாய் பொறுமையின் பூஷணமாய் இருந்தால், அவனே வளர்ந்த பிறகு பொறுமையுள்ளவனாக மாறிவிடுவான்.

'எழுபது மார்க்ஸ் வாங்கினாயா? அதற்கு ஏன் கவலைப்படுகிறாய்? அடுத்த முறை தொண்ணூறு எடுப்பாய்.' என்று பெற்றோர் குழந்தையைத் தட்டிக் கொடுத்து உற்சாகப் படுத்தி ஊக்கமளித்து வளர்க்கும்போது, அந்தக் குழந்தை நம்பிக்கை ஒளியோடு வளரும்.

'இது பிழை. இப்படியெல்லாம் செய்யலாமா?' என்று குழந்தை செய்வதை பிழை, சரி என்று எடுத்துச் சொல்லி வளர்க்கும் போது அவனே நியாயவானாக ஆகிவிடுவான்.

குழந்தையின் தாய், தந்தை, அதனுடைய சகோதர உறவு, வீடு என்று அதை மையமாக வைத்து, எண்ணி, அதைக் குழந்தையின்



மனதிலும் பதியும்படி செய்தால், அந்தக் குழந்தை தன்னைத்தானே விரும்ப ஆரம்பிக்கிறான்.

குழந்தை பெற்றோரால் தான் வளர்க்கப் படுகிறது. எப்படி நீங்கள் வளர்க்கிறீர்களோ, அப்படியே வளர்வான். பச்சை மண்ணாக இருப்பதை கண்ணிற்கும், மனதிற்கும் அழகான இனிய பொம்மைகளாக உருவாக்குவது உங்கள் கையில் தான்!

# செம்பருத்தி..... செம்பருத்தி

பெண்களின் உடல் நலத்திற்கும், அழகிற்கும், கூந்தல் வளர்ச்சிக்கும் கருப்பை சம்பந்தமான எல்லாக் கோளாறுகளுக்கும், இதயத்திற்கும் செம்பருத்திப் பூ சிறந்த மருந்தாகும்.

இந்தப் பூவின் இதழ்களைத் தனித் தனியாக எடுத்து வெய்யிலில் உலரவைத்துப் பொடி செய்து, தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து கூந்தலில் தேய்த்து வர கூந்தல் செழித்து வளரும்.

செம்பருத்திப் பூவின் இதழ்களை சீயக்காயுடன் அரைத்து, ஷம்பூ போல் உபயோகித்தால் முடி உதிராமலும், கருமை மாறாமலும் இருக்கும். இந்த ஷம்பூ கண்ணிற்கும் குளிர்ச்சியைத் தரும்.

இதன் இதழ்களை, வெய்யிலில் உலர வைத்துப் பொடி செய்து, கொதிக்க வைத்துப் பாலுடன் கலந்து குடித்தால் மிகவும் சுவையாக இருக்கும். இரத்த விருத்திக்கும் மிகவும் நல்லது.

செம்பருத்திப் பூக்களை மெதுவாக மென்று தின்றால், இரத்த ஓட்டம் சீராக நடைபெற உதவும்.

# பாதங்கள் பதமாக....



பெண்கள் தங்கள் முகத்திற்கு விழுந்து விழுந்து அழகு பார்க்கும் அளவிற்கு பாதங்களைக் கவனிப்பதில்லை. கால் பாதங்கள் மட்டும் அழகில்லாமல் இருந்தால் நன்றாக இருக்குமா என்ன?

**மென்மையான கால் பாதங்களைப் பெற...**

★ குளிக்கும்போது நன்கு சோப்பு போட்டுத் தேய்த்து விட்டு, குளித்து முடிந்ததும் ஈரம் போக துடைத்து விட்டு, எலுமிச் சம்பழச் சாற்றில், பேபி கிறீமைக் கலந்து பாதங்களுக்கு அடியில் நன்றாகப் பூசித் தேய்த்து விடவேண்டும். நாளடைவில் உங்கள் பாதங்கள் மிருதுவாகவும், அழகாகவும் இருக்கும்.

★ மஞ்சள் தேய்த்துக் குளித்தாலும் பாதங்கள் அழகு பெறும்.

**பாத வெடிப்புக்கள் போக.....**

★காலையில் வெது வெதுப்பான வெந்நீரில் உங்கள் பாதங்களைச் சிறிது நேரம் வைத்திருங்கள். பிறகு ஒரு தேக்கரண்டி அளவு கிளிசரின், பன்னீர் இரண்டு தேக் கரண்டி அளவு, எலுமிச்சம்பழச்சாறு ஆகிய இம்மூன்றையும் வெந்நீரில் நனைத்த பாதங்களில் வெடிப்பு உள்ள பகுதியில் பூச வேண்டும். இவ்வாறு மூன்று நாட்கள் பூசி வந்தால் போதும். வெடிப்பு அகன்று கவர்ச்சிகரமாகக் காணப்படும்.

# தங்கமாலைப் பரிசுப் போட்டி

## முதற் பரிசு 'நெக்லஸ்'

# லேடீஸ் ஸ்பெஷல்

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கிய 'தங்கமாலை' பரிசுப் போட்டியில் ஈடில்லா ஆர்வமுடன் பல்லாயிரம் வாசகிகள் கலந்து கொண்டனர்.

25 பரிசுக் கூப்பன்களையும் பத்திரமாய் சேகரித்து அனுப்பி ஆர்வமுடன் பங்கெடுத்த அனைவருக்கும் பாராட்டுக்கள்.

பரிசுக்குரிய அதிஷ்டசாலிகளை அம்மன் ஜுவல்ஸ் உரிமையாளர் திரு. ஆர்.கணேசன் அவர்கள், அம்மன் ஜுவல்ஸ் நிறுவனத்தில் தமது வாடிக்கை யாளர்கள் முன்னிலையில் தெரிவு செய்தார்.

முதற்பரிசான தங்கமாலையை ('நெக்லஸ்') பெறும் அதிஷ்சாலி இவர்தான்:

**ஆர். ஜெயந்தி**
**6/28/1, ரொறிங்டன் அவென்னியூ,**
**கொழும்பு-7.**

ஆறுதல் பரிசினைப் பெறும் ஏனைய 50 அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்கள் அடுத்தவார முரசில் இடம்பெறும்.

அதிஷ்டசாலிகள் அனைவர்க்கும் முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் இனிய வாழ்த்து க்கள்!




அதிஷ்டசாலிகளை தெரிவுசெய்கிறார் அம்மன்ஜுவல்ஸ் உரிமையாளர் திரு. ஆர். கனேசன் அவர்கள். அருகில் முரசின் உதவி ஆசிரியர்–கலைமணி இரா. பத்மநாதன்.

# ஆட்டிறைச்சி வாங்குவது எப்படி?

இன்று ஆட்டிறைச்சி விற்கும் விலையைக் கேட்டால் மயக்கமே வருகிறது. அது சரி ஆட்டிறைச்சியில் இரண்டு வகையான இறைச்சி இருக்கிறது, தெரியுமா? ஒன்று செம்மறி ஆட்டிறைச்சி, மற்றது வெள்ளாட்டு இறைச்சி, இதில் மட்டன் என்று அன்றாடம் அழைக்கும் இறைச்சி வகை செம்மறி ஆட்டிறைச்சி. வெள்ளாட்டு இறைச்சிக்கு இந்தப் பெயர் பொருந்தாது. அது 'செவான்' என அழைக்கப்படுகிறது.

இறைச்சியில் கலப்படம் செய்வோர் உண்டு. அதிக விலை கொடுத்து வாங்கும் இறைச்சி தரமானதுதானா என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? இருக்கிறது வழி- வெள்ளாட்டு இறைச்சிக்கும், செம்மறியாட்டு இறைச்சிக்கும் வேறுபாடு உள்ளது.

செம்மறியாட்டு இறைச்சியில் ஒரு வித வாடை இருக்கும். வெள்ளாட்டு இறைச்சியில் வாசனை ஏதும் இராது. உரிக்கப்பட்ட செம்மறியாடின் வால் தடிமனாக இருக்கும். வெள்ளாட்டில் நீளமாகவும், நுனிப்பகுதி மேல் நோக்கி வளைந்துமிருக்கும். செம்மறியாட்டின் இறைச்சி வெளிப்புறத் தோற்றத்தைப் பார்க்கும் போது சிவப்பான சதையும் தசை நார்கள் நுண்மையாகவும் இருக்கும். வெள்ளாட்டினைப் பொறுத்தவரையில் நல்ல சிவப்பான சதையும், சதைகளின் மேல் கொழுப்பும் இருக்கும். முடியானது இறைச்சி மேல் ஒட்டியிருக்கும்.

சிலர் இளம் கன்றின் இறைச்சியை செம்மறி ஆட்டு இறைச்சியுடன் கலந்து விடுகின்றனர்.

இளம் கன்றின் இறைச்சியானால் செம்மறியாட்டின் வாசனை இராது. சிறுநீரகங்களின் மேல் பாகம் வழவழப்பாக இல்லாமல் திட்டுத் திட்டாக இருக்கும். வால் நீளமாகவும் இருக்கும்.

இப்போது சொல்லப்பட்ட கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டால் ஆட்டு இறைச்சிக்குப் பதிலாக மற்ற இறைச்சியைச் சேர்த்துக் கலப்படம் செய்திருப்பதைக் கண்டுபிடித்துவிடலாம். கவனமுடன் செயற்படுங்கள். காசுக்குத் தகுந்த பொருட்களை வாங்குங்கள்.

# வசப்பட்டது உலகக் கிண்ணம்

# தன்னம்பிக்கை + உத்வேகம் + தகுதியான தலைமைத்துவம் = வெற்றி!



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் தனித்துவமே அதன் விறுவிறுப்பில் தான் இருக்கிறது.

அந்த விறுவிறுப்புக்கு போட்டியிடும் அணிகளின் உத்வேகம்தான் சூடேற்ற வேண்டும்.

ஒருநாள் போட்டி களிலும் புதிய தந்திரங்களை புகுத்தினால்தான் வெற்றி வசப்படும்.

25 ஓவர்கள்வரை விக்கெட்டுகளை காப்பாற்றிக்கொண்டு தற்காப்பு ஆட்டம்; அதன்பின்னர் சற்று வேகம்; 40 ஓவர்களின் பின்னர் விளாசல் என்பது பழைய தந்திரம்.

40 ஓவர்களின் பின்னர் ரன் எண்ணிக்கை உயரும் என்று கணக்கிட்டு, அதனைக் கட்டுப்படுத்த பந்துவீச்சில் மாற்றம் செய்துவிடும் புத்திசாலிக் கப்டன் முன்பாக அந்த தந்திரம் எடுபடாது.

மேற்கிந்தியத் தீவு அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வெற்றியை மயிரிழையில் தவறவிட்டது மேற்கிந்தியத் தீவு அணி.

லாரா அவுட்டானபின்னர் களத்தில் இறங்கினார் கப்டன் ரிச்சி ரிச்சாட்சன். ஓட்ட எண்ணிக்கையை நிதானமாக கொண்டு சென்று 40 ஓவர்களின் பின்னர் விளாசலாம் என்று ஆடிக்கொண்டிருந்தார்.

அவுஸ்திரேலிய அணி கப்டன் மார்க் டெய்லர் பந்துவீச்சில் மாற்றம் செய்து, கடைசி ஓவர்களில் இறுக்கத்தை ஏற்படுத்தும் வியூகம் வகுத்தார். மேற்கிந்திய அணி திணறிப் போனது. 5 ஓட்டங்களால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போனது.

துடுப்பாட்ட விடயத்தில் இலங்கை அணியின் பலமே முதல் பதினைந்து ஓவர்களுக்குள் துரிதமாக ரன் குவித்துவிடுவதுதான்.

ஜெயசூரியா, களு விதாரண, அரவிந்த டி சில்வா ஆகியோரின் அதிரடி ஆட்டம், முதல் பதினைந்து ஓவர்களுக்குள் அணியை ரன் குவிப்பில் தூக்கி நிறுத்திவிடுகிறது.

உள்வட்டத்திற்குள் பந்து தடுப்பாளர்கள் நின்றுகொண்டிருக்கும் முதல் பதினைந்து ஓவர்களுக்குள் பவுண்டரிகள் அடிப்பது சுலபம். பதினைந்து ஓவரின் பின்னர் பீல்டிங்கில் மாற்றம் வரும். பவுண்டரிகளை சிரமப்பட்டே அடிக்க வேண்டும். பதினைந்து ஓவர்களின் பின்னர் விக்கெட்டுக்களுக்கு இடையே ஓடி ரன் குவிப்பதில் திறமை காட்ட வேண்டும்.

அந்தத் திறமைகளும், திட்டமிட்ட துடுப்பாட்டமும்தான் இலங்கை அணியின் வெற்றிக்கு பாதை போட்டுக் கொடுத்தன.

இறுதிப் போட்டியில் பூவா தலையா போட்டுப்பார்த்ததில் இலங்கை அணிக்குத் தான் வெற்றி. முதலில் துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலியா அணியை அழைத்தார் கப்டன் ரணதுங்கா.

உலகக் கிண்ணப் போட்டிகளில் முதலில் துடுப்பெடுத்தாடும் அணிதான் கிண்ணத்தை கைப்பற்றுவதுண்டு. பகல், இரவு ஆட்டத்தில் இரவு நேரம் துடுப்பெடுத்தாடும் அணிக்கு ரன்களை குவிப்பது கஷ்டமானது, என்றெல்லாம் இருந்த நம்பிக்கைகளை புறங்கையால் தள்ளிவிட்டார் ரணதுங்கா. அவுஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடச் சொன்னார். காரணம் என்ன? தன்னம்பிக்கை. தமது திட்டமிட்ட துடுப்பாட்டத்தில் இருந்த அசைக்க முடியாத நம்பிக்கை.

ரணதுங்காவின் நம்பிக்கை பொய்க்கவில்லை. அவுஸ்திரேலிய அணியும் முதல் பதினைந்து ஓவர்களில் விளாசத் தொடங்கியது. ஆனால் இலங்கை அணி பந்து வீச்சாளர்களின் உத்வேகம் அவுஸ்திரேலிய அணியின் சூரத்தனமான துடுப்பாட்ட வீரர்களை கட்டிப்போட்டுவிட்டது.

குறைந்த பட்சம் 260 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 241 ஓட்டத்தோடு அவுஸ்திரேலியா 50 ஓவர்களை முடித்துக் கொண்டது.

அரவிந்த டி சில்வா, சமிந்தா வாஸ், முத்தையா முரளிதரன், ஜெயசூரியா ஆகியோரின் பந்துவீச்சு அபாரம். முரளி ஒருவிக்கெட் எடுத்ததோடும் எதிரணியின் ரன் குவிப்பை அட்டகாசமாகத் தடுத்துவிட்டார்.

**அதிரடி ஆட்டம்**

ஜெயசூரியா அவசரப்பட்டு ரன் அவுட்டானார். களு விதாரணவும் 6 ஓட்டங்களோடு திரும்பினார். இரண்டு விக்கெட்டுகள் போய்விட்டால்- அதுவும் முதல் பத்து ஓவர்களுக்குள் போய்விட்டால், பின்னர் துடுப்பெடுத்தாட வருபவர்கள் அடக்கமான ஆட்டத்தில் இறங்கிவிடுவார்கள். பந்து வீச்சாளர்களைப் பற்றிய பயமும் வந்துவிடும்.

ஆனால், இலங்கை அணியைப் பொறுத்தவரை பயமே இல்லாத தூள்கிளப்பல்தான். இந்தியாவுடன் அரையிறுதிப் போட்டியிலும், அவுஸ்திரேலியாவுடன் இறுதிப் போட்டியிலும் ஆரம்பத்திலேயே இரண்டு விக்கெட்டுகள் காலியாகின.

அப்படியிருந்தும் அரவிந்த டி சில்வா களம் புகுந்ததும் அதிரடியில்தான் இறங்கினார். பந்து பவுண்டரிக்கு பறந்து பறந்து திரும்பியது. வெற்றித்தேவதையின் புன்னகை அப்போதே தெரியத் தொடங்கிவிட்டது.

அன்றாட வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு சூடான ஆட்டம்பார்க்க காத்திருக்கும்




பார்வையாளர்களுக்கு அரவிந்த டி சில்வா போன்ற ஆட்டக்காரர்களின் அடி தான் அல்வா. பார்வையாளர்களை எமாற்றாத அணி இலங்கை அணிதான் என்றாகிவிட்டது.

வெற்றியும் முக்கியம், பார்வையாளர்களை பரவசப்படுத்துவதும் முக்கியம். இரண்டையும் இலங்கை அணி நிறைவேற்றித் தந்திருக்கிறது.

இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியா எதிர் பார்க்கப்பட்ட 260 ரன்களை குவித்திருந்தால் கூட, இலங்கை அணி 260 ரன்களை அடித்து முடித்திருக்கும்.

**பாவம் ஷேன் வோர்ண்**

'அவுஸ்திரேலியா பந்துவீச்சாளர் ஷேன் வோர்ண் அப்படி ஒன்றும் பெரிய ஆளில்லை' என்று கப்டன் ரணதுங்கா சொல்லியிருந்தார். அதுவெறும் வாய் வீச்சல்ல என்று போட்டியின்போது தெரிந்தது. பாவம், ஷேன் வோர்ண். அவரது பந்துக்கு சிக்ஸரும், பவுண்டரியும் குவிக்கப்பட்டபோது, அவரது முகம் போன போக்கு கமராவில் குளோசப்பில் பரிதாபமாகத் தெரிந்தது. அவரால் ஒரு விக்கெட் கூட எடுக்க முடியவில்லை. இதுவரை 99 விக்கெட் டுகளை சாய்த்துள்ள ஷேன் வோர்ண் தனது நூறாவது விக்கெட்டை எடுக்க முடியாமல் திரும்பியது மற்றொரு சோகம்.

கட்ச் மூன்று தவறவிட்டது, பாகிஸ்தான் பார்வையாளர்களது ஆதரவு, ஆரம்பத்திலேயே இலங்கையின் ரன் குவிப்பு என்பவை தான் தமது தோல்விக்குக் காரணம் என்றார் மார்க் டெய்லர்.

ஆனால், அதைவிட முக்கியமான காரணம், இலங்கை அணியின் தன்னம்பிக்கை; எப்படியும் வெல்ல வேண்டும் என்ற ஆவேசம்; நல்ல தலைமைத்துவம்.

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின்போது ஏற்பட்ட கோபத்துக்கு, பாகிஸ்தானில் வைத்து கணக்குத் தீர்த்துக் கொண்டது இலங்கை அணி.

1983 இல் இந்தியா, 1992 இல் பாகிஸ்தான், 1996 இல் இலங்கை. மூன்று தடவைகள் உலகக் கிண்ணம் ஆசிய நாட்டவர் கைகளில்!– அதுவும் சார்க் நாடுகளின் கைகளில்!

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## காத்தான்குடி வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான். | றிஸ்வியா யூசுப். 12/21, அரபிக் கலாசாலை வீதி, காத்தான்குடி-06. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் ஏப்ரல் 08ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து (ஞாயிறு, புதன் தவிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காலிந்த பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-06.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** G

பெயர்:......................

முகவரி:......................

..............................

கையொப்பம்:....................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-03-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## விழிகள் பூக்க......

உறக்கமில்லா
உருளல்களால்
படுக்கை விரிப்பு
கசங்கும்–என்
மனசைப் போலவே...!
♥✱♥
முகம் பார்க்க முடியாத
அதிகாலை வேளையில்
நகம் கடித்துக்–
காத்திருந்தேன்! அன்பே
♥✱♥
என் இனியவன்
வருவான்...
இப்போது வருவான்....!
♥✱♥
இலைகளின். உரசல்–
காற்றின் அலசல்–
எரிச்சலூட்டும்...!
♥✱♥
என் காதலனின்
காலடி ஓசைக்குப்
போட்டியா இவைகள்?
♥✱♥
காத்திருக்கும்
விழிகளுக்குள்
நீயாகினாய் அன்பே!
கடிகார முள்ளாகி
இருதயம் துடிக்கும்...!
♥✱♥
என் இனியவன்
இப்போது வருவான்....
வந்து
கொண்டிருப்பான்....!
♥✱♥
ஊர்ச்சேவல்கள்
எல்லாம்
ஒருங்கிணைந்து
கூவும்...!
♥✱♥
கூட்டமாய் பறவைகள்
குதூகலிக்கும்...!
என் இமை திறந்து
அகல அகல விரித்து
கதிரவனைப்
பார்ப்பேன்!
♥✱♥
ஓ....என்னவன்
இனறும் வரவில்லை...!
♥✱♥
ஒற்றையாய்
கூவும்
ஒரு குயில்
ஓசைமட்டும்
எனக்காக
கேட்கும்....!

நெலோமி–அ.

## மடிந்துவிடு...!

நேற்றுவரை--
நினைவுகளை(ப்)
பதியம் போட்டு...
சொப்பனத்தில்
சுகம் கண்டது
என் வாலிபம்.
▫ ▫
இன்று–
மரணத்திற்கு
மனுப்போட்டு விட்டு....
மங்கிப் போகிறது
என் வாலிபம்.
▫ ▫
காதலீ...!
நீ–
மறந்து விடு...!
என்றதை விட
இறந்து விடு...!
எனச் சொல்...!
ஏனெனில்....
உன்னை–
மறப்பதைவிட
இறப்பது சுகம்.

ஆர். சாந்தசீலன்–
பொத்துவில்.

## வேதனைப்படும் வெள்ளை மல்லிகை

வெந்தணலில் புழுப் போல
வேகுகின்ற மனதோடு
பொங்கு தமிழ் புழுதியிலே
புரளுகின்ற வீணைய தாய்
சங்கம் வளர்த்த தமிழ்
சத்தமின்றி ஆனதுவாய்
திங்கள் மதி முகமும்
தீஞ்சுவை ஓசையதும்
வெஞ்சம் எனும் தணலில்
வீசயெறியப்படும்.
அஞ்சுகம் அவ்வப்போது
அழுது வடியும்
போர்க்களம் மனம்–அதில்
எண்ணம் போராடும் தினம்
வெள்ளைத் துகிலுக்குள்
வெண்ணிலாக்கள் வேகும்.
கிள்ளை மொழி மறக்கும்.
தென்னங் கீற்றும் சுடும்.
மாற்றுடை மனம் கவரும்
காற்றிலே அது தினம் கரையும்
நீல விழிகளுக்குள் நினைவுகள்
நிர்வாணமாக்கப்படும்.
பூக்கள் இந்தப் பூவுக்கு
புறத்தியாக்கப்படும்.
புன்னகை உதட்டில் உட்கார மறுக்கப்படும்.
கனவுகள் மட்டும் எதிர்க்கால வாழ்வுக்கு
மாலையிடும்.


ஜெயந்தி ஜெய்சங்கர்– கொழும்பு-13

## உயர்ந்த இடத்து முத்தம்

முத்தமிடுவதால் ஆயுள் அதிகரிக்கிறது என்று மருத்துவக் கண்டுபிடிப்பொன்று வெளியாகியிருக்கிறது. ஜப்பானிய மக்களின் சராசரி வயது 1950ம் ஆண்டில் 55. 1960ம் ஆண்டில் ஜப்பானியரது சராசரி வயது அறுபதாக உயர்ந்தது. அது எப்படியென்று கேட்டால். முத்தமிடும் பழக்கம் பரவியதுதான் காரணம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.


முத்தமிட முடியாதவர்கள் சூயிங்கம் போன்றவற்றை மென்றுகொண்டிருக்கலாம் என்றும் யோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

அதெல்லாம் ஒருபுறம் இருக்க, உலகில் மிகப் பிரபலமானவர்களின் முத்த ஸ்டைல்களை கவனிப்போமோ? இதோ சில அபூர்வப் படங்கள்.



பில் கிளின்டனும் ஹிலாரியும், 1992

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனாட் றீகன்– துணைவி நான்சி, 1985.





பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ்–இமெல்டாவுடன், 1985.

பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜக்சன்–லிசாமேரி, 1995. பிரிவுக்கு முன்னர்.





டயனா–சாள்ஸ், கல்யாணக்கோலத்தில் அரண்மனை முத்தம்.

## தேன் கிண்ணம்

## நான் சுவாசிக்க வேண்டும்!

இந்த விதைக்குள்
புகுந்திருக்கும் நிழலே!
நீ
அருவியாக வடியும்போது
நான்
கடலாகக் கிடந்தேன்.
நீ
தென்றலாக வருவாய்
உன் வருடலுக்காக
பூவாகமாறி
வரவேற்றேன்!
✓
என் இரவுகளில்
உலவும் நிலவே!
✓
இந்த வானம்
கோடி நட்சத்திரங்களை
பூத்து நின்று .
இப்போது
வியர்த்துக் கொண்டிருக்கிறது.
✓
இந்தச் சோலை
உனக்காகப் பூத்து
பார்த்திருக்கும் போது,
தென்றலே!
நீ எந்தச் சோலையில்
உன்னை
சிறைவைக்கப் போகின்றாய்?
✓
என் இதயம்
இன்னமும் உன்னை
அடைகாத்திருக்கிறது!
✓
உன் மனதை
மூடிக்கிடக்கும்
கருமேகத்தை
கலைத்துவிட்டு
என்னைப் பார்!
உறுதியான ஆணி வேரில்
நான்
சுவாசிப்பது புரியும்!
✓
காதல்
வால் வெள்ளியா
மோதி விழுந்து
மடிந்து போக....?
✓
உன் விழிகள்
விழுந்துதானே
இந்த
சூரியன் உதித்தது!
✓
உன் புன்னகைக்குள்
என் எதிர்காலம்.
என் நிஜமே!
முட்காட்டுக்குள்
செருப்பில்லாமல்
என்னை
நடக்கச் சொல்வது
நியாயமா?
✓
'குருடனாக
வா
ஓவியம் தருகிறேன்.'
என்கிறாயே!
✓
எறும்பின்
காலடிச்சத்தம்
உன்னை நினைக்கும்
போது
கேட்கிறதே...!
என் இதய சத்தம்
உனக்கு
கேட்காமல் இருப்பதேன்?
✓
என் மேகமே!
இந்தப் பாலைவனம்
இறந்து கிடக்கிறது....!
✓
மழையாகிப் பெய்....!
நான்
சுவாசிக்க வேண்டும்!

நிந்தா தாசன்.

## நிதர்சனம்

புக்காராவும்
சுப்பர் சொனிக்கும்
பெயர் தெரியாத
இன்னும் பலவும்
வானில் வட்டமிடும்....

கண்கள்
கண்டிராத
ஆயுதங்களின்
பெயர்களையெல்லாம்
சத்தத்தைக் கொண்டே
காது சொல்லும்....

பிறந்ததிலிருந்தே
பரிச்சயமாகிவிட்ட
ஆட்(டி)லறியும்–வந்து
வெடித்துச் சிரிக்கும்.....

குடித்தொகையில்
குறைந்துபோன
கொஞ்சத்தை
எஞ்சியுள்ளதுகள்
இழுத்து மூடும்....

எவருக்காகவும்
யாரும்
துக்கப்படாமலேயே
பிணங்கள் எரியும்....

ஏனெனில்
இந்தச் சந்ததிக்கு
இவையும்
இயற்கை என்றாகிவிட்டது.....

அதிகமென்றால்
மழைக்கும் வெயிலுக்கும்
ஒதுங்கி நிற்பது தவிர
எவருமே
ஒப்பாரி வைப்பதில்லை
என்பது போல்
இவையும் இங்கே
"இயற்கை" என்றாகிவிட்டது!!

அ.டக்ளஸ் ஜெயசேகரன்–
வவுனியா.

## இனியாவது தெரிந்து கொள்வோம்!

சாதிபல உருவாக்கி
எத்தனை
சண்டித் தனங்களையெல்லாம்
சட்டமாக்கித்
தடித்திருந்தோம்!
***
இன்று......
உலகமெல்லாம் எம்மை
மொத்தமாகச் சேர்த்து
முடிசூட்டி
வைத்த பெயர்
"அகதிகள்"
***
ஒற்றைச் சாதியாய்
நாம்
உ...ய்...ர்...ந்...து நிற்பது
இப்பொழுது தானடா!
***
'நக்கல்'
என்று– நினைத்து
விடாதே
நண்பனே!
***
பேதம்–என்ற ரணம்
எத்தனை
வேதனை தருவது
என்பதை
இனியாவது
தெரிந்து கொள்வோம்!
***

நீர்கொழும்பு தருமலிங்கம்



## இந்த வாரம் உங்கள் பலன்

( 24.03.96 முதல் 30.03.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, வெளியிட வாழக்கை. | காலை | 7 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியசித்தி. | மு.ப. | 8 மணி |
| புதன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை | 6 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | காலை | 7 மணி |
| சனி- துயர் நீங்கும், பொருள்வரவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| திங்கள்- பொருள்வரவு, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை | 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 மணி |
| வியாழன்-பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், பொருள் செலவு. | பகல் | 12 மணி |
| சனி- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை | 7 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | காலை | 6 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | பகல் | 12 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | காலை | 6 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனப்பயம். | பி.ப. | 1 மணி |
| சனி- இனசன நன்மை, கௌரவம். | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பணவரவு, காரியசித்தி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனப்பயம். | பகல் | 12 மணி |
| புதன்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | காலை | 6 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவக் கேடு. | காலை | 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை | 6 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, வீண் மனஸ்தாபம். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, இனசன நன்மை. | காலை | 6 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பணவரவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- இனசன நன்மை, மனக்கலக்கம். | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், செவ்வாய், கேது, புதன். |
| மேடம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி. |

★ சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் இலாபம், உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| திங்கள்- மனக்கலக்கம், வீண் தொல்லை. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| புதன்- தொழில் விருத்தி, பயனுள்ள செயல். | காலை | 6 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பணச் செலவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனக்கலக்கம். | காலை | 7 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், பணவரவு தடை. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் | 12 மணி |
| புதன் - மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, பணச் செலவு; | காலை | 6 மணி |
| சனி- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், பொருள் வரவு, | மு.ப, | 9 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 12 மணி |
| புதன்- இனசன நன்மை, அந்நியர் உதவி. | காலை | 7 மணி |
| வியாழன்-தொழில் இலாபம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | காலை | 6 மணி |
| சனி- தொழில் இலாபம், மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், கௌரவம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்-பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பொருள் செலவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், மனக் கலக்கம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை | 7 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- வீண் வாக்குவாதம், சஞ்சலம். | பி.ப. | 2 மணி |
| சனி- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. | 2 மணி |
| புதன்- எதிர்பார்த்தது நன்மை, வீண் கலக்கம். | பி.ப. | 3 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை | 6 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், இனசன நன்மை. | பி.ப. | 2 மணி |
| சனி- பொருள் வரவு, பிரயாண மிகுதி. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்கலக்கம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், பிரயாண மிகுதி. | காலை | 6 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை | 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கௌரவம். | பகல் | 12 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8



தேசத்தைக் காத்தல் செய்!
தையலை உயர்வு செய்!
தொன்மைக்கு அஞ்சேல்!
தோல்வியில் கலங்கேல்!
தவத்தினை நிதம்புரி! நன்று கருது!
நாளெல்லாம் வினை செய்!
நினைப்பது முடியும்!
-சுப்பிரமணிய பாரதியார்.



## சிந்திக்கலாம் இங்கே

அறிவு சிறிதளவாயிருப்பினும், தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பு பெருமளவில் ஒருவருக்கு இருக்குமானால் அவர் எந்தத் துறையிலும் பிரகாசிக்க முடியும்.

-எடிசன்-

உலகிலேயே மிகவும் அவமானம் தரும் செயல்-எந்த வேலையையும் ஆர்வத்துடன் செய்யாமல் சோம்பலாகப் பொழுதைப் போக்கும் செயல்தான்.

-டால்ஸ்டாய்-

ஒரே விஷயத்தில் கவனத்தைச் செலுத்தி அதில் தளர்ச்சியில்லாமல் உறுதியாக நிற்கும் ஆற்றலே அபார அறிவுக்கு அடையாளம்.

-செஸ்டர்பீல்ட்-

மனிதனாகப் பிறந்ததே மகிழ்ச்சியுடன் வாழத்தான். எனவே, எந்த நேரமும் இன்பமாக இருக்கப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

-யாரோ-

தொகுப்பு- எஸ்.சாந்தி.

பாப்பா முரசு சிறுகதை

# எளிமையும் ஆடம்பரமும்

சிதானந்த மகரிஷி என்ற துறவி ஒருவர் நாடு முழுவதும் சென்று மக்களுக்கு நற்போதனைகளையும், உதவிகளையும் செய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்தார். அவரது புகழ் உலகெங்கும் பரவியிருந்தது.


ஒரு சமயம் அவர் பிரம்மதேசம் என்ற ஊருக்குத் தன் சீடர்களுடன் வருகை புரிந்தார்.

மக்கள் அவர்களை அன்போடு வரவேற்று உபசரித்தனர். மகரிஷியும், அவரது சீடர்களும் அவ்வூர் மக்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளையும், நற்போதனைகளையும் வழங்கி வந்தனர்.

ஒரு நாள் அவ்வூரில் உள்ள பெருஞ் செல்வந்தன் ஒருவன் மகரிஷியைச் சந்தித்து வணங்கினான்.

"ஐயன்மீர்! எனக்குத் தாங்கள் நல் உபதேசங்களையும், அறிவுரைகளையும் வாழ்க்கை நெறிமுறைகளையும் கூற வேண்டும்," என்று கேட்டான்.

அவனைப் பார்த்த மகரிஷி, "முதலில் உன்னைப் பற்றியும், உனது வாழ்க்கை முறையைப் பற்றியும் சொல்" என்றார்.



"ஐயன்மீர்! இந்த ஊரிலேயே மிகப் பெரும் செல்வந்தன் நான். என்னிடமிருக்கும் சொத்துக்களை வைத்து ஏழேழு தலைமுறைக்கும் அமர்ந்து கொண்டே உண்டு கழித்து, வாழ்க்கையை மிகவும் ஆடம்பரமாகவும், சந்தோஷமாகவும் வைத்துக் கொள்ளலாம். ஆனால், நான் அப்படியெல்லாம் செய்ததில்லை. நான் மிகவும் எளிமையுடனேயே வாழ்ந்து வருகிறேன். சாதாரண உணவுகளையே உண்கிறேன். சாதாரண உடைகளையே அணிகிறேன். கட்டில், மெத்தை இருந்தாலும் வெறுந்தரையில் தான் படுத்துக் கொள்கிறேன்." என்று தன் எளிமையைப் பற்றி மிகவும் பெருமையாகச் சொன்னான்.

இதையெல்லாம் கவனமாகக் கேட்ட மகரிஷி,

"அடியேனே! நீ வாழ்வது வாழ்க்கையே அல்ல. கணக்கிலடங்கா செல்வம் கொட்டிக் கிடக்கும்போது நீ இப்படி வாழவே கூடாது. நான் சொல்கிறபடி வாழ். அதாவது மூன்று வேளையும் நீ அறுசுவை உணவுகளாக உண்ண வேண்டும். பட்டாடைகளையும் தங்க ஆபரணங்களையும் நீ அணிய வேண்டும். பட்டு மெத்தையில் படுத்து நீ உறங்க வேண்டும். நீ இப்படிச் செய்தால் உன் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியுடையதாக இருக்கும்." என்றார்.

"ஓ! அப்படியே செய்கிறேன் ஐயன்மீர்!" என்று சொல்லி விட்டு அந்தச் செல்வந்தன் விடை பெற்றுச்சென்றான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மகரிஷியின் சீடர்கள், அந்தச் செல்வந்தன் கண்ணில் இருந்து மறைந்ததும் மகரிஷியிடம்,

"குருவே! மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தச் செல்வந்தரிடம் ஆடம்பரமாக வாழும்படி அறிவுரை கூறி அனுப்பினீர்களே..... இது ஏன் என்று எங்களுக்கு விளங்கவே இல்லை!" என்று கேட்டனர்.

உடனே மகரிஷி தன் சீடர்களைப் பார்த்து, "அந்தச் செல்வந்தன் ஆடம்பரமாக வாழ்ந்தால்தான் அவனிடம் வேலை செய்யும் வேலைக்காரர்கள் கூழோ, கஞ்சியோ குடித்து நிம்மதியாக வாழ்வார்கள். ஆனால், அவனே கூழைக் குடித்து எளிமையாக வாழ்க்கை நடத்தினால், தன் வேலைக்காரர்கள் ஏன் நல்ல சாப்பாடு சாப்பிடவேண்டும் என்று நினைப்பான். அதனால் தான் அவனிடம் ஆடம்பர வாழ்க்கை வாழும்படி கூறி அனுப்பினேன்!" என்று விளக்கமளித்தார்.

அவரின் அறிவுபூர்வமான அறிவுரையைக் கேட்டு சீடர்கள் மிகவும் வியந்து போனார்கள்.

## வாரம் ஒரு நாடு

### மடகஸ்கார்



தலைநகர்-அண்டானானாரியோ
பரப்பு- 5,87,341 சதுர கிலோ மீட்டர்.
மக்கள் தொகை- 1.33 கோடி
மொழி- மலகாசி, ஃபிரெஞ்சு
எழுத்தறிவு- 53%
சமயம்- ஆவி வழிபாடு, கிறிஸ்தவம், இஸ்லாம்
நாணயம்- மலகாசி பிராங்க்.
தனிநபர் வருமானம்- 230 டொலர்.

அமைவிடம்:-

மொசாம்பிக் கடற்கரையில் 500 கிலோ மீட்டர் நீளமுள்ள பெரிய தீவாகும்.


வரலாறு:-

1896ல் ஃபிரான்சின் மேலாதிக்கப் பகுதியாக இருந்தது. 1960 இல் சுதந்திரம் பெற்றது. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

பொருளாதாரம்:-

விவசாயம் முக்கிய தொழில். அரிசி பொது உணவுப் பொருள், கோப்பி முக்கிய ஏற்றுமதிப் பொருள். நெல், வாழைப்பழம், உருளைக்கிழங்கு, முக்கிய விவசாயப் பொருட்கள், புகையிலை, கராம்பு, வனிலா, அவரை ஆகியனவும் பயிராகின்றன. கால்நடை மந்தைகள் பெருமளவில் பெருகியுள்ளன. கிராபைட், மைக்கா, நிக்கல், செம்பு ஆகிய உலோகங்கள் அதிகம் காணப்படுகின்றன. 1960 க்குப் பிறகு குரோமைட்டும் வெட்டி எடுக்கப்படுகிறது. தொழில் துறையில் பெரும் வளர்ச்சிப் போக்கு எதும் இல்லை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.03.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 134
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 132

பரிசுக்குரியவர்:
எஸ்.ரஸ்மினா சுபைர்.
மாருக்கொன கொலனி, உக்குவலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி: றிப்கா சுஹைர். மிரிஸ்வத்தை, பலாங்கொடை. | எம்.எம்.மின்ஹாஜ். பலாந்தோட்ட முஸ்லிம் பாடசாலை. |
| செல்வி. ஜியோலின் ஜோன்சன். கிளரன்டன் எஸ்டேட், நானுஓயா. | எஸ். பிரதீப் நிரோஷன். றோ-க-த-வித்தியாலயம், கொச்சிக்கடை. |
| எஸ்.எச்.றிஸ்னாஸ். களு/ஜீலான் மகா வித்தியாலயம், ஹேனமுல்லை. | கே. யோகேஸ்வரன். பது/ஹப்புத்தளை, த.ம.வி, ஹப்புத்தளை. |
| செல்வி.நா.ஸ்ரீ வீணா. கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு. | ஐ.எம். பௌஸ். ஸம்ஸம் வீதி, மருதமுனை-03. |
| பரமசிவம் ஜெயந்தினி. விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | செல்வி. ஆர்.ஒபிலியா. விஹார வீதி, மாத்தளை. |

## ராணி எலி

தேனீக்கள், எறும்புகள், குளவிகள் ஆகியவை ஒரு ராணியின் தலைமையின் கீழ் கூட்டம் கூட்டமாக வாழும். அந்தக் கூட்டத்தில் வேலைக்காரர்களும், படைவீரர்களும் உண்டு. இது போன்ற அமைப்பில் வாழும் நாலு கால் பிராணி ஒன்றும் உள்ளது. அதுதான் ராணி எலி எனப்படும் ஒரு வகை வயல் எலிகள். ஆபிரிக்காவின் சில பகுதிகளில் இவை வாழ்கின்றன. இவை நிலத்தின் அடியில் பெரிய வளை அமைத்து கும்பலாக வாழும். ஒரு கூட்டத்திற்குத் தலைமையாக ஒரு ராணி எலி இருக்கும். ஆண்டிற்கு 40 குட்டிகள் போடும். பிற எலிகள் ராணிக்குத் தொண்டு செய்து, அதன் குட்டிகளைக் காப்பாற்றும். எலிகள் என்ற பெயர் இருந்தாலும் இவை எலிகள் குடும்பத்தைச் சேர்ந்தவை அல்ல. முள்ளம் பன்றிக் குடும்பத்தைச் சேர்ந்தவை.



## அடிமையான கதை



கிழக்கிந்தியக் கம்பனி என்ற பெயரில் இந்தியாவிற்குள் வர்த்தகம் செய்ய வந்த ஐரோப்பியர் இந்தியாவை ஆண்ட செய்தியை அறிவீர்கள். அவ்வாறு இந்தியாவிற்குள் நுழைந்து வியாபாரம் செய்ய அனுமதித்தது யார் தெரியுமா? அப்போதைய முகலாய மன்னன் ஜஹாங்கீர். ஐரோப்பியர்களான போர்த்துக்கீயர் தாங்கள் வியாபாரம் செய்யும் நாட்களைக் குறிப்பிட்டு அத்தனை நாட்கள் வரை இந்தியாவில் தாம் வியாபாரம் செய்வதற்கான அனுமதியை அவரிடமிருந்து பெற்றார்கள். 1615 முதல் 1618 வரையான மூன்று வருடங்கள்வரை அனுமதி.

அன்று அவர் கொடுத்த அனுமதி, இந்தியர்களை 1947 வரை அந்நியருக்கு அடிமைகளாக்கியிருந்தது.

## ஒரு வரிச் செய்தி

- ★ நோபல் பரிசை இருமுறை பெற்ற ஒரே ஒரு நபர்-மேரி கியூரி அம்மையார்.
- ★ நைல் நதியின் நிறம் பாதி நீலமாகவும், பாதி வெள்ளையாகவும் இருக்கும்.
- ★ கருவிலே முதன் முதலில் உண்டாகும் உறுப்பு-கண்.
- ★ நம் காதில் உள்ள எலும்புதான் மிகச் சிறிய எலும்பாகும்.
- ★ நீந்தத் தெரியாத மிருகங்கள்-ஒட்டகம், பன்றி.
- ★ யானைக்கு ஆறே ஆறு பற்கள்தான் உள்ளன.
- ★ இந்தி மொழியில் இராமாயணத்தை எழுதியவர்-துளசிதாசர்.
- ★ வட ஆபிரிக்காவில் உள்ள எல் குவாத் என்ற இடத்தில் வருடத்தில் ஒரு நாள் கூட மழை பெய்வதில்லை.

## சைரஸ்

**★ சைரஸ் என்பவர் யார்?**

பாரசீக ஆட்சியை ஏற்படுத்திய மன்னன்.

**★ பாரசீகத்தவர்கள் அரசு எங்கிருந்தது?**

கி.மு. 1000ம் ஆண்டில் ஆரியர்கள் ஐரோப்பாவில் இருந்து குடிபெயர்ந்து செல்லும்போது ஈரான் நாட்டில் குடியேறினர். வடபகுதியில் ஒரு அரசும், தென் பகுதியில் 'மெடிஸ்' என்ற பாரசீகத்தவர்களின் அரசும் அமைந்தது.

**★ சைரஸ் எப்படி மன்னன் ஆனார்?**

மெடியன் அரசர் ஒருவரை பதவியில் இருந்து துரத்திவிட்டு தான் அரசர் ஆனார். அதிலிருந்து பல கிராமங்களைக் கைப்பற்றி தனது நாட்டை விரிவு படுத்தினார்.

**★ பாரசீக ஆட்சி எப்போது மிகச் சிறந்து விளங்கியது?**

முதலாம் டேரியஸ் ஆட்சிக் காலத்தில் மிகச் சிறந்து விளங்கியது. சிந்து நதியிலிருந்து லிபியா வரையிலும், அரபிக் கடலிலிருந்து காகஸ் மலைவரையிலும் பரவி இருந்தது.

**★ எப்போது இந்த ஆட்சி முடிவுக்கு வந்தது?**

அலெக்சாண்டரின் படையெடுப்பின் போது முடிவுக்கு வந்தது.


## விடுகதைகளும் விடைகளும்

1. சிறகில்லாப் பறவை தேசமெங்கும் திரியும். அது என்ன?
2. சட்டிக்குள்ளே மிதக்குது குட்டிப் பனிமலை. அது என்ன?
3. மூக்கிலே முகப்பு முதுகிலே வனப்பு. அது என்ன?
4. தெப்பத்தைச் சுற்றித் தர்ப்பைப் புல். அது என்ன?
5. வளைச்சாலும் நுழைச்சாலும் ஒடியாத கம்பி. அது என்ன?
6. நாற் கால் குதிரை நடக்காது படுத்தே கிடக்கும். அது என்ன?

### விடைகள்

1. கடிதம் 2. வெண்ணெய்
3. பம்பரம் 4. புருவம்
5. மயிர் 6. கட்டில்

செல்வி.ஏ. அகல்யா, நுவரெலியா.




## மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

"ஏன்?" வரதராஜன் ஆன மட்டும் காரணம் அறிய முயன்றான். 'ஏன்? எதற்காக என்னைக் கொல்ல முயல வேண்டும்? நான் அவளுக்கு என்ன பாவம் பண்ணினேன்? அநாமதேயமான இடத்தில் விட்டு வந்தது உண்மைதான். அதற்கு நான் மட்டுமா பொறுப்பு?'

புரியவில்லை.

'அவள் வீட்டுக்கு போன் செய்து விசாரித்தால் என்ன?' வீட்டை நோக்கி நடக்கும்போது மனசுக்குள் வெலவெலத்துப் போனான்.

'அந்த பில்லை மட்டுமில்லாமலிருந்தால் என் கதி இந்நேரம் என்ன ஆகியிருக்கும்? ஆண்டவனே!'

வீட்டுக்குள் போனபோது போன் பேசிக் கொண்டிருந்த உறவுக்காரம்மா ஒருவளிடம் இருந்து அவசரமாக போனைப் பிடுங்க முயன்று தோற்றான்.

"இருடாப்பா பாவக்காய் பிட்லை பண்ணறதைப் பத்தி-"

"எல்லாம் நேரே போய் சொல்லிக் கொடுங்க. எனக்கு அவசரமாக பேசணும்." என்று இவன் கதறல் அலட்சியப் படுத்தப்படவே-

எரிச்சலாக காத்து நின்றான்.

"உங்க குற்றச்சாட்டு அநியாயமானது சரஸ்வதியம்மா." ராஜா சொன்னான். "உதவி செய்கிறவங்களுக்கு இப்படி ஓர் உபத்திரவம்னா-பிறகு ஊர்ல உதவி செய்யவே ஆளிருக்காது."

சரஸ்வதியம்மாவின் பங்களாவின் ஹால் விஸ்தீர்ணம் அதிகம். அணு அணுவிலும் செலவு செய்யப்பட்ட ரூபாய்கள் தெரிந்தன. ஆனால் மனசுதான் படுகஞ்சம் போலிருக்கிறது.

"அது மட்டுமில்லே பாஸ்" ஜென்னி சொன்னாள்.

"நெக்லஸ் என்கிறது கழுத்தில் போட்டுக்கற சங்கதி. அதையேன் கைப்பையில் போட்டு வைக்கிறாங்களாம்?

"அதில் பார் பெண்ணே," சரஸ்வதியம்மாள் சொன்னாள்; "என் மகள் ஜோதி எச்சரிக்கையான பெண். இரண்டாவது பெக் உள்ளே போனதும் அவளுக்கு பயம் வரும். எங்காவது விழுந்து விடுமோ? யாராவது திருடிக்குவாங்களோ என்கிற பயம். அதனால் வாட்ச், இந்த மாதிரி நகைகள் எல்லாத்தையும் கழற்றி கைப்பையில் போட்டு வைச்சிருப்பாள். அது வழக்கம். நீங்க தான் கொண்டு வந்து விட்டீங்க; பையிருக்கு, உள்ளே நகையில்லேன்னா அதுலே சந்தேகப்படறதில எந்த தப்புமில்லே. புரியுதா?"

"அதென்ன பெண்ணை இப்படி அலட்சியமா உலாவவிடறீங்க? கைப்பையில் வைச்சிருக்கிறது மட்டும் பாதுகாப்பாக்கும்? பையையே தூக்கிட்டுப் போயிட்டா என்ன பண்ணுவாளாம்? நேத்து அவளிருந்த நிலையில் எங்க பாஸ் அவளைக் கற்பழிச்சாக்கூட அவளுக்குத் தெரிந்திருக்காதே."

"ஜென்னி!"

"ஒரு பேச்சுக்கு சொன்னேன் பாஸ்." சொன்னாள் "அதுக்குள்ளே ஆர்வமாகப் பார்க்காதீங்க."

"அதிலெல்லாம் என் பெண் நெருப்பு மாதிரி. தொடக்கூடாத இடத்தில தொட்டா தொட்டவனை சுட்டெரிக்கும் நெருப்பு. என்ன ராஜி, எழுந்துட்டாளா?"

அம்மாளால் ராஜி என விசாரிக்கப்பட்ட அந்தப் பெண் அமைதியே உருவாக படியிறங்கி வந்து நின்றாள்.

"இப்பதான் நினைவே திரும்பியிருக்கிறது அத்தே."

"ஏதாவது சொன்னாளா?"

"கறுப்பு காப்பி கேட்டாள். காப்பியும் தலைவலி மாத்திரையும் கொடுத்துட்டுத்தான் இறங்கி வரேன்."

முகத்தில் தெரிந்த அடக்கமும் கனிவும் அவள் குரலிலுமிருந்தது.

சரஸ்வதியம்மாள் அவசரமாக மாடி ஏறிப்போனதும் அந்த ராஜி சினேகமாகச் சிரித்தாள். பெருமூச்சு விட்டாள். போனை எடுத்தாள். ராஜா காத்திருந்தான்.

"எப்படியிருந்த பெண் எப்படியாயிட்டா பாவம்?"

"ஏன் என்ன ஆச்சு?"

"கூடாத இடத்தில காதலிச்சா. அந்த அயோக்கியன் இவளுக்குப் போதைப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்துட்டான். அப்பப்ப ஏமாற்றி பணம் பறிச்சிட்டிருந்தான். அப்புறம்-

"சொல்லுங்க."

"இவளைவிட பெரிய பணக்காரி சினேகிதம் கிடைச்சதும் இவளை விட்டு விலகிப் போயிட்டான். இவ நிலமைதான் என்ன?"

"பாவம்."

"அவனை மறக்கவும் முடியாம அவனால ஏற்பட்ட குடிப்பழக்கத்தையும் விட முடியாம இப்ப அசல் டிரக் அடிக்ட் ஆயிட்டா."

"இப்ப அந்த ஆள் எங்கே?" ராஜா கேட்டான். "விலாசம் தெரியுமா உங்களுக்கு?"

"ஸாரி. எங்கேயோ பம்பாய் பக்கம் போயிட்டதாக ஒரு தடவை இவள் சொல்லி கேட்டிருக்கேன்."

"ஆமாம். வயசு பொண்ணாச்சே. கவனிச்சு கண்டிச்சு வளர்க்க வேண்டாமா?"

"கவனிக்க - கண்டிக்க இங்கே யாருக்கு நேரமிருக்கு? மாமனாருக்கு அப்புறம் அத்தை தான் பிஸினஸை பார்த்துக்கறாங்க. பிறகு அண்ணனும் வேற ஏற்றுமதி இறக்குமதி பிஸினஸுன்னு எப்பவும் வெளிநாட்டிலேயே தான் சுத்திக்கிட்டிருப்பார். இப்ப கூட மலேசியா போயிருக்கார். தவிர இதெல்லாம் அவங்களுக்கு மிக சாதாரணமான விஷயம்."

போன் இன்னொன்று ஒலித்ததும் எடுத்தாள். "ஆமாம். ஜோதி வீடு தான். அவள் இறங்கி வர நேரமாகும். இப்பதான் போதையும் தூக்கமும் கலைஞ்சு எழுந்தாள். குளிச்சிட்டு வர நேரமாகும். அரைமணி கழிச்சு போன் பண்ணுங்க."

போனை வைத்துவிட்டு இவர்களிடம் சொன்னாள்-

"யாரோ வரதராஜனாம். ராஸ்கல் உளர்றான். பாஸ்டர்ட்"

அங்கே-

போனைக் கவிழ்த்து வரதராஜன் முகம் இருண்டு போனான்.

'என்ன இது? அந்தப் பெண் இவ்வளவு நேரம் தூங்கிட்டு இப்பதான் எழுந்திருக்கிறதாக சொல்றாங்க? அவங்க அண்ணி வேறே ஏதோ சொல்றாங்க-

அப்போ? ஏழு மணிக்கு போன் பண்ணினாளே. அதெப்படி? வேறு யாராகவுமிருக்க முடியாது. பார்ட்டியில சந்திச்சது-காரில போனது-முன்பின் தெரியாத இடத்தில இறங்கி படுக்க வச்சிட்டு வந்தது எல்லாத்தையும் கச்சிதமாக சொன்னாளே. வேறு பெண்ணுக்கு சாத்தியமா அது?..

'யார் அவள்?...'

'எதுக்காக பார்க்குக்கு கூப்பிட்டாள்? சுட்டுக் கொலை செய்ய முயற்சி செய்தாள்? யாராக இருக்க முடியும் அவள்?'

இந்த கதை மந்தையில் புகுந்து கலந்திருக்கும் அந்த கறுப்பு ஆடு யார்? யார்?

பயமும் குழப்பமும் அவனை நிறைய பாதிக்க போனைச் சுழற்றினான்.

"ராம்?"

"பேசறேன் சொல்லுமா வரதா?"

"சாலமன் வீட்டிலேருப்பானா இப்ப?"

"வீட்லயிருக்க மாட்டான். ஏன்னா? இப்ப இங்கே என் வீட்டில என் எதிரேதான் உட்கார்ந்திருக்கான். ஏண்டா?"

"அங்கேயே இருங்க. நான் வரேன். அவசரமா பேசணும்" கத்தினான். "டென்னிஸ் கிளம்பிடாதீங்கடா? நான் இதோ வரேன். ரொம்பவும் அவசரம்?"

"தலை போகிற அவசரமா?"

"இல்லே உயிர் போகிற அவசரம். வந்து சொல்றேன் இருங்க."

கிளம்பினான்.

இன்ஸ்பெக்டர் வேதநாயகம் குழப்பத்திலிருந்தார்.

"இதையும் பாருங்க. அடையாளம் சொல்ல முடியுமான்னு பாருங்க." என்று சவக்கிடங்கு பீரோ இழுப்பறையை இழுத்து போர்வையை விலக்கிக் காட்ட-

அந்தம்மாள் முகத்தில் பல்ப் எரிந்தது. "இவனா?"

"இவனைத் தெரியுமா உங்களுக்கு?"

"நல்லாவே தெரியும் இன்ஸ்பெக்டர்! எங்க வீட்டு எதிர் வீட்டு மாடியிலதான் குடியிருக்கிறான். இப்பதான் ரெண்டு மாசமாச்சு."

"வாங்க ஜீப்பிலேயே கொண்டு உங்க வீட்டில விட்டுடறேன். இந்தப் பையன் வீட்டையும் காட்டுங்க."

"போலீஸ் ஜீப்பிலா?" என்று தயங்கினாலும் "ஆபத்துக்கு தோஷமில்லே" என்று ஏறிக்கொண்டார் அம்மாள். "நேரே, போங்க."

வீட்டு வாசலிலேயே அந்தப் பெண்ணைக் கண்டதும் பூரித்துப் போனாள் அம்மாள்.

"எங்கேம்மா போயிட்டே?" என்றதும் அந்தப் பெண் நெற்றியில் ஒரு பிளாஸ்திரி பெருக்கல் குறியிடப்பட்டிருந்தது.

"என்னைக் கேட்கறியாடி பொண்ணே! ஆபீஸ் போறேன்னு போன கழுதை ரெண்டு நாளாகி உன்னைக் காணோம்னு பயந்துபோய் போலீஸ் ஸ்டேஷன், ஆஸ்பத்திரின்னு அலைஞ்சு திரிஞ்சிட்டு வரோம். எங்கேடி போனே?"

"முந்தா நாள் ஆபீஸ் விட்டு வர்றச்சே சின்னவிபத்து ஏற்பட்டுப் போய் நினைவு தப்பிப் போச்சும்மா. ரெண்டு நாளா ஆஸ்பத்திரியில கிடந்து இப்பதான் நினைவும் திரும்பி குணமும் ஆகிட்டது போன்னு சொல்லி அனுப்பி வைச்சாங்க. அதுக்குள்ளே போலீஸ் ஆஸ்பத்திரின்னு ஊரையே கூட்டி வைச்சு கலாட்டா பண்ணிட்டியேம்மா."

"சரி. சரி. எதிர்வீட்டு ஆளுன்னு சொன்னீங்களே. அந்த வீட்டைக் காட்டுங்க."

"அதோ, அந்த மாடிதான்." என்று அம்மாள் சுட்டிக்காட்டிய மாடியில் பூட்டியிருப்பது இங்கிருந்தே தெரிந்தது.

"கீழேதான் வீட்டுக்கு சொந்தக்காரம்மா இருக்கார். போய்க் கேளுங்க."

கதவைத் தட்டியதும் திறந்த அம்மாள் போலீசைக் கண்டதும் மிரண்டு போனார். "என்ன? எங்கே வந்தேள்?"

"மேலே வீட்டைக் குடி விட்டிருக்கீங்களா?"

"ஆமாம். இப்பதான் புதுசா புருசனும் பொண்டாட்டியுமா வந்தா. ஏன்? என்ன ஆச்சு?"

"ஒண்ணும் ஆகல்ல. அவங்களைப் பார்க்கணும்."

"அதென்னவோ தெரியல. ரெண்டு நாளாகவே வீடு பூட்டிக் கிடக்குது. திருப்பதி மாதிரி எங்காச்சும் போயிருக்காளோ. என்னவோ."

"எப்ப வருவாங்க?"

"யாருக்குத் தெரியும்? ஈஸ்வரா! தெரியாம வீட்டை விட்டுட்டேன். ராத்திரி பூராவும் அவங்க அடிக்கிற கூத்துக்கு என்னைக் காவது இப்படி போலீஸ் வந்து நிற்கும்னு நெனச்சேன். சரியாதான் போயிடுச்சு."

"ஏன்? என்ன செய்யறாங்க?"

"நேரங்கெட்ட நேரத்தில வராங்க போறாங்க. கண்ட கண்ட காலிப் பசங்கள்ளாம் வந்து போறாங்க. சிலசமயம் இப்படித்தான் பலநாள் வரவேமாட்டாம காணாம போயிடுவாங்க. அதென்ன குடித்தனமோ தெரியலை. அந்தப் பொண் சமையல் பண்ணி நான் பார்த்ததேயில்லே. அந்தப் பயல்தான் கேரியரைத் தூக்கிண்டு தெருமுனையில இருக்கிற ஹோட்டலுக்குப் போய் எடுப்புச் சாப்பாட்டைக் கொண்டு வருவான்."

"தெரு முனையிலேன்னா? அசைவ சாப்பாடு ஹோட்டல்லயா?"

"அந்தக் கண்ணராவியைக் கேட்காதீங்கோ. அந்நிய பதார்த்தமெல்லாம் வரவழைச்சுத் திங்கறாங்க. எழுந்து வந்தா காக்காய் கண்டகண்ட கண்ணராவியையெல்லாம் எடுத்து வந்து போடறது சனி."

"மட்டன் பீஸா? எலும்பா?"

"அந்தக் கண்ணராவியெல்லாம் நான் என்னத்தைக் கண்டேன்? ஒன்று மட்டும் தப்புப் பண்ணிட்டேன்."

"என்ன அது?"

"ஒரு வருஷத்துக்கு அட்வான்ஸ் வாங்கித் தொலைச்சுட்டேன். அது தீர்ற வரை வெளியே போகச் சொல்ல முடியாது. அவதிதான் போங்கோ."

"எப்படி வந்துட்டுப் போறான்? கார் வச்சிருக்கானா?"

"சே.சே.அந்த அளவு பெரிய மனுசனா தெரியல்ல. அநேகமா ஆட்டோ தான். எப்பனாச்சும் மொப்பெட்டோ, ஸ்கூட்டரோ எடுத்துண்டு வருவான். அதுவும் அவன் சொந்தமா என்னன்னு தெரியல."

"அவங்களைப்பற்றி தெரிஞ்சவங்க அக்கம் பக்கத்திலே யாராவது இருக்கிறாங்களா?"

"அவுஸ்ஓனர் எனக்கே தெரியல்லேனா வேறயாருக்குத் தெரியப்போறது? அப்படியொண்ணும் யாரோடும் பழகற ஜென்மங்களில்லை. அநேகமா யாருக்கும் எதுவும் தெரியாது. வந்தப்ப ஏதோ பம்பாய் கம்பெனிக்கு மெட்ராஸ் ரெப்ரசன்டேடிவ்னு சொன்னதாக ஞாபகம்."

"கம்பெனி பேர்"

"என்னவோ தொண்டைன்னு சொன்னான். சரியா ஞாபகமில்லே. இருங்கோ ஞாபகம் வர்ரது. காய் தொண்டே அண்ட் கோன்னு சொன்னான்."



ஸ்டேஷனுக்குத் திரும்பியதும் டெலிபோன் டைரக்டரியை வைத்து ஆராய்ந்து பார்த்தார். அப்படியொரு கம்பெனி பெயரேயில்லை.

இரண்டொரு பம்பாய் கம்பெனிகளில் போன் செய்து "காய்தொண்டே அண்ட் கோ விலாசம் தெரியுமா?" என்று விசாரித்தார்.

ஒட்டுமொத்தமாக அத்தனை பேரும் சொல்லிவிட்டார்கள். "அப்படியொரு கம்பெனி பம்பாயிலேயே இல்லை."

கமிஷனரைப் பார்க்கப் போனார். சந்தேகத்தைச் சொன்னார்.

"அந்த வீட்டுக்காரம்மாளையே கூட்டிப் போய் அடையாளம் சொல்லச் சொல்லியிருக்கலாமே."

"பயப்படறாங்க சார். பிணத்தைப் பார்த்தா ராத்திரி பூராவும் அலற வேண்டி வரும் என்கிறாங்க. எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்துட்டேன்."







"அடுத்து என்ன செய்யப்போறீங்க?"

"பூட்டின வீட்டை உடைச்சு திறந்து ஏதாவது தடயம் கிடைக்குதான்னு ஆராயணும். அதற்கான சர்ச்வாரண்ட் வேணும் சார்."

"இப்பவே கொடுக்க ஏற்பாடு செய்யறேன்." என்ற கமிஷனர் காரியதரிசியைக் கூப்பிட்டுப் பேசப் பேச-இன்ஸ்பெக்டர் யோசனையில் மூழ்கினார். "வீட்டில் துப்புக் கிடைக்குமா? இல்லே புதுக் குழப்பம் வருமோ? போய்ப் பார்த்தால் தான் தெரியும்."

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்

பெயர்: எல். நௌபர்.
வயது: 17
முகவரி: 17, ஓடாவியார் வீதி, காத்தான்குடி-06.
பொழுது போக்கு: நாவல்கள், பேனாநட்பு.

பெயர்: கே.குமாரகுலசிங்கம்
வயது: 24
முகவரி: 40, மொரட்டுவ வீதி, பிலியந்தலை.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம், போனாநட்பு.

பெயர்: ஆர்.சாந்தினி
வயது: 28
முகவரி: 44/4, திருக்கடலூர், திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தையல்.

பெயர்: கே.பத்மலிங்கம்
வயது: 32
முகவரி: P.O.BOX-56140, RIYADH-11554, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம்.நாஃபி
வயது: 20
முகவரி: ராண்டர் அடி, குட்டிக்கரச்சி, கிண்ணியா-5
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம்.ஹுசைன்.
வயது: 26
முகவரி: 250, ஜாயா வீதி, மருதமுனை-6, கல்முனை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, ரீ.வி.

பெயர்: சி. பதுர்தீன்.
வயது: 32
முகவரி: P.O.BOX-29329, CODE NO-13030, SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: வானொலி பத்திரிகை.

பெயர்: எம். ஹக்மான்.
வயது: 16
முகவரி: கல்பிட்டி வீதி, நுரைச்சோலை.
பொழுது போக்கு: உதைபந்து, பத்திரிகை.

பெயர்: கே.ராதாகிருஷ்ணன்.
வயது: 24
முகவரி: MONTE BOGLIA 6, 6900 LUGANO. SWITZERLAND
பொழுது போக்கு: பத்திரிகை, வீடியோ.

பெயர்: ஆர். கண்ணன்.
வயது: 23
முகவரி: 26, கொட்டா றோட், பொரல்ல, கொழும்பு-8.
பொழுது போக்கு: பத்திரிகை படித்தல்.

பெயர்: பி. ஜெகன்.
வயது: 20
முகவரி: மண்டூர், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: பிர்தொஸ்.
வயது: 22
முகவரி: 59, ஜின்னா நகர், தோப்பூர்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, பேனாநட்பு.

# தாய்

## மக்சீம் கார்க்கி



## 69

“நம்மோடிருப்பவர்கள் எவ்வளவு குறைந்த தொகையினர் என்பதை நினைத்துப் பார்த்தேன். நாம் இன்னும் மிகுந்த உற்சாகத்தோடு உழைக்க வேண்டும். பாவெலும் அந்திரேயும் உள்ளிருந்து தப்பியோடி வரத்தான் வேண்டும். அதற்கு அவர்களைச் சம்மதிக்கச் செய்யவேண்டும். அவர்களைப் போன்ற உழைப்பாளிகள் உள்ளே சும்மா முடங்கி உட்கார்ந்து கொண்டிருக்கக் கூடாது.”

இவ்வாறு அந்த டாக்டர் சொன்னார்.

நிகலாய் முகத்தைச் சுழித்தான், தாயைப் பார்த்தவாறே தலையை ஆட்டினான். தன் முன்னிலையிலேயே தன் மகனைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது அவர்களுக்குச் சிரமமாயிருக்கிறது என்பதைத் தாய் கண்டு கொண்டாள்; எனவே அவள் எழுந்து அந்த அறையை விட்டு தன் அறைக்குச் சென்றாள். அவளது மனத்தில் அவர்கள் தன்னுடைய விருப்பத்தை நிராகரித்துத்தான்விட்டார்கள் என்ற வேதனையுணர்ச்சி ஏற்பட்டு அவளை வருத்தியது. அவள் படுக்கையில் படுத்தவாறே, அந்தக் குரல்களின் உள்ளடங்கிய முணுமுணுப்பைக் கேட்டாள்; தன்னை மறந்து ஒரு பயபீதி உணர்ச்சிக்கு அவள் அடிமையானாள்.

அன்றைய தினம் முழுவதுமே அவளுக்கு ஒரே புரியாத இருள் மண்டலமாகவும், தீய சொரூபமாகவும் தோன்றியது, ஆனால் அதைப்பற்றி அவள் சிந்திக்க விரும்பவில்லை. தனது மனத்தை அலைக் கழிக்கும் எண்ணங்களை உதறித் தள்ளிக் கொண்டே, அவள் தன் சிந்தனையையெல்லாம் பாவெலை நோக்கித் திருப்பினாள். அவன் விடுதலைபெற்று வருவதைப்பார்க்க அவள் ஆவல் கொண்டாள். ஆனால் அதே சமயத்தில் அவள் பயப்படவும் செய்தாள். தன்னைச் சுற்றி நிகழும் சம்பவங்களெல்லாம் ஓர் உச்ச நிலைக்கு ஆரோகணித்துச் சென்று கொண்டிருப்பதாக அவள் உணர்ந்தாள்; அந்த உச்ச நிலையில் ஏதோ ஒரு பெரும் மோதல் ஏற்படும் என்ற பயமும் அவளுக்கு எழுந்தது. ஜனங்களின் மௌனம் நிறைந்த சகிப்புத்தன்மை எதற்காகவோ விழிப்போடு காத்து நிற்கும் பரபரப்புக்கு இடம் கொடுத்தது. அவர்களது உத்வேகம் நன்கு மேலோங்கியிருக்கிறது. ஒவ்வொருவரும் கூரிய வார்த்தைகளைப் பேசுவதைக் கேட்டாள். எல்லாமே பொறுமையிழந்து புழுங்குவதாக உணர்ந்தாள். ஒவ்வொரு அறிக்கை வெளிவரும்போதும், சந்தையிலும், கடைகளிலும், வேலைக்காரர்களிடமும், தொழில் சிப்பந்திகளிடமும் உத்வேகமான வாதப் பிரதிவாதங்கள் கிளம்பி ஒலிப்பதைக் கேட்டாள். ஒவ்வொருவர் கைதியாகும் போதும், மக்களிடையே அந்தக் கைதுக்குரிய காரணத்தைப்பற்றி பயமும் வியப்பும் தன்னுணர்வற்ற அனுதாப வார்த்தைகளும் பரிமாறப்பட்டன. ஒரு காலத்தில் அவளை எவ்வளவோ பயமூட்டிய வார்த்தைகளை இன்று சாதாரண மக்களே பிரயோகித்துப் பேசுவதையும் அவள் கேட்டாள்: எழுச்சி, சோஷலிஸ்டுகள், அரசியல் முதலிய வார்த்தைகள். அவர்கள் அந்த வார்த்தைகளை ஏளன பாவத்தோடு சொன்னாலும், அந்த ஏளன பாவத்துக்குப் பின்னால் ஒரு தனி குறுகுறுப்புணர்ச்சியும் தொனித்தது; குரோத உணர்ச்சிக்குப் பின்னால் பய உணர்ச்சியும் தொனித்தது. அந்த வார்த்தைகளை அவர்கள் சிந்தனை வசப்பட்டவாறு பேசும்போது, அந்தச் சிந்தனையில் நம்பிக்கையும் பயமுறுத்தலும் நிறைந்து ஒலித்தன. அவர்களது அசைவற்ற கட்டுக்கிடையான இருண்ட வாழ்க்கைத் தடாகத்தில் வட்டவட்டமாக அலைகள் பெருகி விரிந்தன. தூங்கி விழுந்த சிந்தனைகள் துள்ளியெழுந்து விழிப்புற்றன. அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களை வழக்கம் போல் ஏற்றுக் கொள்ளும் அமைதி கலகலத்துச் சிதற ஆரம்பித்தது. இந்த மாறுதல்களையெல்லாம் அவள் மற்றவர் களைவிடத் தெளிவாக உணர்ந்தறிந்தாள். ஏனெனில் மற்றவர்களைவிட வாழ்க்கையின் துயர முகத்தை அவள்தான் நன்கு அறிந்திருந்தாள். அம்முகத்தில் சுருக்கங்கள் விழுவதையும், சிந்தனையும், எழுச்சியார்வமும் ஏற்படுவதைக்கண்டு அவளுக்கு மகிழ்ச்சியும் பயபீதியும் கலந்து ஏற்பட்டன. அவற்றில் தன் மகனது சேவையைக் கண்டதால் அவள் ஆனந்தம் அடைந்தாள். அவன் சிறையிலிருந்து தப்பி வந்தால், இவர்களுக்கெல்லாம் தலைமை வகிக்கும் ஆபத்தான பொறுப்புக்கு அவன் ஆளாவான் என்று அவள் அறிந்திருந்ததால் அவள் பயபீதியும் அடைந்தாள். அதனால் அவன் அழிந்தே போவான் என்று அஞ்சினாள்.

சமயங்களில் தன் மகனது உருவம் ஒரு சரித்திர புருஷனின் உருவம் போல் வியாபகம் பெற்று விரிந்து அவளுக்குத் தோன்றும். தான் இதுவரை கேள்விப்பட்ட நேர்மையும் தைரியமும் நிறைந்த சகல வார்த்தைகளின் உருவமாக, தான் இதுவரை கண்டு வியந்து போற்றிய சகல மக்களின் கூட்டுத் தோற்றமாக, தான் இதுவரை அறிந்திருந்த வீரமும் பிரபலமும் நிறைந்த சகல விஷயங்களின் சம்மேளனமாக, அவன் அவளுக்குத் தோற்றமளித்தான். இம்மாதிரிச் சமயங்களில் அவளது உள்ளத்தில் பெருமையும் அன்பும் பெருகி வழியும். அவனைப்பற்றி ஆனந்தம் கொண்டு நம்பிக்கையோடு தனக்குத்தானே நினைத்துக் கொள்வாள்:

“எல்லாம் சரியாகிவிடும்-எல்லாம் சரியாகிவிடும்!”

அவளது அன்பு-அவளது தாய்மைப் பாசம்-ஓங்கி எழுந்து, அவளது இதயத்தை வேதனையோடு குன்றிக் குறுகச் செய்யும். தாயின் பாச உணர்ச்சி தனது தீப ஒளியால் மனித உணர்ச்சியின் வளர்ச்சியைத் தடை செய்து, அதனை ஆட்கொண்டு எரித்துச் சாம்பலாக்கும். அந்த மாபெரும் உணர்ச்சியின் இடத்திலே, அவளது பயவுணர்ச்சியின் சாம்பல் குவியலுக்கிடையே அவளது மனம் ஒரே ஒரு சிந்தனைக்கு ஆளாகி உள்ளூரப் போராடிக் கொண்டிருக்கும்:

“அவன் செத்துப் போவான்... அவன் அழிந்து போவான்!...”

❤ ❣ ❤ ❥

ஒரு நாள் மதியம் அவள் சிறைச்சாலை ஆபீசில் பாவெலுக்கு எதிராக உட்கார்ந்து, தாடி வளர்ந்து மண்டிய அவனது முகத்தை நீர்த்திரை மல்கிய கண்களோடு பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னுடைய கைக்குள் கசங்கிச் சுருண்டு போயிருக்கும் அந்தச் சீட்டை அவன் கையில் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

“நானும் சௌக்கியம். எல்லோரும் அப்படித்தான்” என்று அமைதியாகச் சொன்னான். “நீ எப்படி இருக்கிறாய்?”

“நானும் சௌக்கியம், இகோர் இவானவிச் இறந்து போனான்” என்று யந்திரம் மாதிரி நிர்விசாரமாய்ச் சொன்னாள் அவள்.

“உண்மையாகவா?”என்று வியந்து கேட்டான் பாவெல். அவன் மெதுவாகத் தன் தலையைத் தொங்கவிட்டான்.

“சவ அடக்கத்தின்போது பொலிசார் ஒரு சண்டையைக் கிளப்பி விட்டார்கள். ஒருவனைக் கைது செய்திருக்கிறார்கள்” என்று பரபரப்பின்றிச் சொன்னாள் அவள்.

சிறைச்சாலையின் உதவியதிகாரி நாக்கை மிக எரிச்சலோடு சப்புக் கொட்டிக்கொண்டே துள்ளியெழுந்தான்:

“இந்த மாதிரி விஷயங்களைப் பேசக் கூடாது என்று தெரியுமா, இல்லையா?” என்று முணுமுணுத்தான் அவன். “இங்கு அரசியலைப்பற்றிப் பேசக்கூடாது.”

தாயும் எழுந்து நின்று, தனது குரலில் குற்றபாவத்தின் சாயை படரப் பேசினாள்:

“நான் ஒன்றும் அரசியலைப்பற்றிப் பேசவில்லை; ஒரு சண்டையைப் பற்றித்தான் பேசினேன். அவர்கள் சண்டை போட்டது உண்மை. ஒரு பையனுடைய தலையைக் கூட அவர்கள் நொறுக்கித் தள்ளிவிட்டார்கள்...”

“எல்லாம் ஒன்றுதான். இனிமேல் பேசாமல்தான் இருக்க வேண்டும். உங்கள் சொந்த விஷயத்தைப்பற்றி, அதாவது பொதுவாக உங்கள் வீட்டு விஷயத்தையும், குடும்ப விஷயத்தையும் தவிர வேறு எதையுமே இங்கு பேசக்கூடாது.”

தனது பேச்சுக் குழம்பிக் குழறி ஒலிப்பதை அவன் கண்டு கொண்டான்; அவன் மீண்டும் மேஜையருகே உட்கார்ந்து சில காகிதங்களைப் பரபரவென்று புரட்டத் தொடங்கினான்.

“இந்த மாதிரி நீ ஏதாவது பேசித் தொலைத்தால் அப்புறம் இதற்கு பதில் சொல்ல வேண்டியது நான்தான்” என்று சோர்ந்து போய்ச் சொன்னான் அவன்.

**ஜனங்களின் மௌனம் நிறைந்த சகிப்புத் தன்மை எதற்காகவோ விழிப்போடு காத்து நிற்கும் பரபரப்புக்கு இடம் கொடுத்தது.**

**ஒவ்வொருவர் கைதியாகும் போதும், மக்களிடையே அந்தக் கைதுக்குரிய காரணத்தைப் பற்றி பயமும் வியப்பும் தன்னுணர்வற்ற அனுதாப வார்த்தைகளும் பரிமாறப்பட்டன.**

அவன்மீது பதிந்துநின்ற கண்களை அகற்றாமலே, தாய் தன் கையிலிருந்த துண்டுச் சீட்டை பாவெலின் கைக்குள் விறுட்டென்று திணித்தாள். அப்புறம் நிவர்த்தி நிறைந்த நிம்மதி யுணர்ச்சியோடு பெருமூச்சு விட்டாள்.

“எதைப்பற்றித்தான் பேசுவது என்பதே எனக்குத் தெரியவில்லை...” என்றாள் தாய்.

“எனக்கும்தான் தெரியாது” என்று கூறிச் சிரித்தான் பாவெல்.

“அப்படியானால், இங்கு வருவதிலேயே அர்த்தமில்லை” என்று எரிச்சலோடு சொன்னான் அதிகாரி. “எதைப்பற்றிப் பேசுவது என்று தெரியாவிட்டால், இங்கு ஏன் வருகிறீர்கள்? வந்து, எங்கள் பிராணனை ஏன் வாங்குகிறீர்கள்?....”

“விசாரணை சீக்கிரம் நடக்குமா?” என்று கேட்டாள் தாய்.

“பிராசிக்யூட்டர் சில நாட்களுக்கு முன் வந்திருந்தார். சீக்கிரமே நடக்குமென்று சொன்னார்..”

அவர்கள் இருவரும் அர்த்தமற்றுப் பேசிக்கொண்டிருந்தார்கள். அன்பும் பரிவும் நிறைந்த கண்களோடு பாவெல் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை அவள் கண்டாள். அவன் முன்னிருந்ததைப்போல இப்போதும் மிகுந்த அமைதியும் நிதானமும் நிறைந்து விளங்குவதாக அவளுக்குத் தோன்றியது. அவனது தோற்றத்தில் அப்படியொன்றும் மாற்றமில்லை. கைகள் வெளுத்திருந்தன; தாடி வளர்ந்திருந்ததால், வயதில் அதிகமானவனாகத் தோன்றினான். அவ்வளவுதான். அவள் அவனிடம் இன்பகரமான விஷயம் எதையாவது சொல்ல விரும்பினாள். நிகலாயைப் பற்றித்தெரிவிக்க விரும்பினாள். எனவே சுவையற்ற தேவையற்ற விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்த தொனியிலேயே அவள் பேசத் தொடங்கினாள்:

“உன்னுடைய ஸ்வீகார புத்திரனை அன்றைக்கு நான் பார்த்தேன்...”

பாவெல் விஷயம் புரியாமல் அவளது கண்களேயே பார்த்தான். நிகலாய் வெஸோவ்ஷிகோவின் முகத்திலுள்ள அம்மைத்தழும்புகளை அடையாளம் சொல்வதற்காக, அவள் தன் கை விரல்களால் தன் கன்னத்தில் தட்டிக் கொட்டிக் காட்டினாள். “அவன் இப்போது சரியாயிருக்கிறான். அவனுக்குச் சீக்கிரமே ஒரு வேலை பார்த்துவைக்க வேண்டும்.”

பாவெல் புரிந்து கொண்டான். தலையை ஆட்டியபடி மகிழ்ச்சி நிறைந்த கண்களோடு பதிலிறுத்தான்:

“அப்படியா? ரொம்ப நல்லது” என்றான் அவன்.

“ஆமாம், இவ்வளவுதான் விஷயம்” என்று முடித்தாள் அவள். அவனது மகிழ்ச்சி அவளது இதயத்தைத் தொட்டது; அதன் காரணமாகத் தன்மீது திருப்தி கொண்டாள்.

அவளது கரத்தை இறுகப்பற்றி அவளுக்கு விடை கொடுத்தான்.

“நன்றி, அம்மா!”

அவர்கள் இருவரது இதயங்களும் ஒன்றையொன்று நெருங்கிப் பழகிக் கொண்டதால் ஏற்பட்ட ஆனந்த வெறி அவளது தலைக்குள் காரமான மது வெறியைப்போல் மேலோங்கிக் கிறங்கியது. அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் அவனது கையைமட்டும் பற்றிப் பிடித்தாள் அவள்.

வீட்டுக்கு வந்தவுடன் சாஷா தனக்காகக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். தாய் பாவெலைப் பார்த்து விட்டு வரும் நாட்களிலெல்லாம் அவளும் வந்து செல்வது வழக்கம். அவள் பாவெலைப் பற்றி எதுவும் கேட்பதில்லை; தாயாகவே, அவனைப் பற்றி எதுவும் சொன்னால் கேட்பாள். இல்லாவிட்டால் தாயின் கண்களையே வெறித்து ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டிருப்பதோடு திருப்தியடைந்து விடுவாள். அனால், இந்தத் தடவையோ அவள் ஆர்வத்தோடு வாய் விட்டுக் கேட்டுவிட்டாள்.

“சரி. அவன் எப்படி இருக்கிறான்?”

“நன்றாயிருக்கிறான்.”

“அவனிடம் அந்தச் சீட்டைக் கொடுத்து விட்டீர்களா?”

“ஆமாம். அதை அவன் கையில் மிருந்த சாமர்த்தியத்தோடு கொடுத்து விட்டேன்..”

“அவன் அதைப் படித்தானா?”

“அங்கேயா? அது எப்படி முடியும்?”

“ஆமாம். நான் மறந்துவிட்டேன்” என்று மெதுவாகக் கூறினாள் அந்தப் பெண். “நாம் இன்னும் ஒரு வார காலம்-சரியாக ஒரு வாரகாலம்-முழுவதும் காத்திருக்க வேண்டும். இல்லையா? சரி. அவன் ஒத்துக்கொள்வான் என்று நினைக்கிறீர்களா?”

சாஷா முகத்தை நெரித்துச் சுழித்து, தாயையே கூர்ந்து நோக்கினாள்.

“நான் எப்படிச் சொல்லமுடியும்?” என்றாள் தாய். “இதில் ஒன்றும் ஆபத்தில்லையென்றால் அவன் ஏன் சம்மதிக்கக் கூடாது!”

சாஷா தன் தலையை உலுக்கிக் கொண்டாள்.

“சரி. இந்த நோயாளிக்கு என்ன உணவு கொடுக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா? அவனுக்குப் பசியெடுத்து விட்டது” என்றாள் அவள்.

“அவன் எதுவும் தின்னலாம். இரு. இதோ நான் போய்..”

அவள் சமையலறைக்குள் சென்றாள். சாஷாவும் மெதுவாக அவளைப் பின்தொடர்ந்து சென்றாள்.

“நானும் உதவட்டுமா?”

“வேண்டாம், வேண்டாம்.”

தாய் அடுப்பின் பக்கமாகக் குனிந்து ஒரு பாத்திரத்தை எடுத்தாள்.

“பொறுங்கள்...” என்று அமைதியாகச் சொன்னாள் அந்தப் பெண்.

அவளது முகம் வெளுத்து, கண்கள் வேதனையுடன் விரிந்தன. அதே சமயம் அவள் நடுங்கும் உதடுகளோடு அவசர அவசரமாக முணுமுணுத்துப் பேசினாள்:

“நான் உங்களிடம் ஒன்று கேட்க நினைத்தேன். அவன் சம்மதிக்க மாட்டான் என்பது மட்டும் எனக்கு நிச்சயம் தெரியும். நீங்கள் அவனிடம் அது விஷயமாய் மன்றாடிக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவனது தேவை இப்போது இங்கு மிகவும் அத்தியாவசியமானது. எடுத்துக் கொண்ட கொள்கையின் வெற்றிக்காக, அவன் இதற்குச் சம்மதிக்கத்தான் வேண்டும் என்று சொல்லுங்கள். அவனது உடல் நலத்தைப் பற்றி நான் மிகவும் பயந்து கொண்டிருப்பதாகச் சொல்லுங்கள். உங்களுக்கே தெரியும்-இன்னும் விசாரணைக்குரிய நாளைக்கூட நிர்ணயிக்கவில்லையே..”

அவள் மிகுந்த சிரமத்தோடு பேசுகிறாள் என்பது நன்றாகத் தெரிந்தது. அவள் ஏதோ ஒரு மூலையைப் பார்த்தவாறே நிமிர்ந்து நின்றாள். குரல்மட்டும் தடுமாறியது. சோர்ந்துபோய் தன் கண்ணிமைகளை மூடி, உதடுகளைக் கடித்துக் கொண்டாள். இறுகப் பிடித்து மடக்கிய அவளது கைவிரல்கள் சொடுக்கு விட்டுக்கொள்வது கூடத் தாய்க்குக் கேட்டது.

*(தொடர்ந்து வரும்)*

# பாதை மாறும் பயணங்கள்

ஜனசமுத்திரம். கிளாலிக்கரை மனிதத்தலைகளால் திமுதிமுத்தது. தமிழினி தன் பயணப்பையை எடுத்துக் கொண்டு முன்னேறினாள். எல்லா முகங்களிலும் ஒருவித பதட்டம் அப்பிக் கிடந்தது. கியூ....பாஸ்.....படகுப் பயணம் இவையெல்லாம் இப்போது அவர்களுக்கு மிகச் சாதாரணமாகிப் போன விஷயங்கள். கைப்பையில் தாலி இருந்தது- ஃபிரான்ஸ் போய் கட்டிக் கொள்வதற்காக. இனி யாழ்ப்பாணத்து மண் அந்நியமாகிப் போய்விட பாரீஸின் பரபரப்புக்குள் ஐக்கியமாகிவிடுவாள்.

“அம்மா...தம்பி....அக்கா...நான் வரட்டே, நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதேங்கோ! எனக்கிஞ்ச வாழக்குடுத்து வைக்கேல்ல...என்ன செய்யிறது, நாங்கள் நினைக்கிறபடியே எதுவும் நடக்குது....ம் நான் வரட்டே...?” விடைபெற்றுக் கண் கலங்கி ஜனசமுத்திரத்துள் ஐக்கியமானாள். அவள் முன்னால் ஒரு இளம் பெண் இடுப்பிலும் கையிலும் இரு குழந்தைகளோடு நின்றிருந்தாள். கியூ ஆமை வேகத்தில் நகர்ந்தது.

“நீங்கள் கொழும்புக்கே போறியள்?” அந்தப் பெண் வலியவே கேட்டாள்.

“ஓம் கொழும்பு போய் ஃபிரான்ஸ் போறன்.”

“தனியாவே வெளிக்கிட்டனீங்கள்?”

“ஓமோம்! ஆனால் ஐயா கொழும்பில தான் நிக்கிறார்”

“ஃபிரான்ஸில கலியாணமே?”

“ஓமோம்”

“நாங்கள் கொழும்புக்கு போறம்- அவர் அங்கதான் வேலை. வரச்சொல்லி ஒரே கரைச்சல். எனக்கெண்டால் தனியா வெளிக்கிட்டும் பழக்கமில்ல, அதுவும் இவையோட வலுகஷ்டம் போக்குவரத்து, இனிப்பிள்ளையளின்ரை வருங்காலத்தையும் யோசிக்க வேணுமெல்லே, ஆளொரு திசையாய் இருந்தொண்டு என்ன செய்யிறது? எனக்கும் தாய் சகோதரங்கள் இல்ல. உதவியுமில்ல. அது தான் யோசிச்சுப் பார்த்து வெளிக்கிட்டனான்.”

தமிழினிக்கு வழித்துணை கிடைத்த பேரானந்தம். தாயின் முந்தானையைப் பிடித்துக் கொண்டிருந்த பெண் குழந்தை இவள் கரம் பற்றிக் கொண்டது வாய்க்குள் பெருவிரலைத் திணித்தபடி. ஆண் குழந்தை தாயின் இடுப்பில் ஒட்டிக் கொண்டிருந்தது. படகுகளுக்கான இலக்கம் கொடுபடும் போது அந்தப் பெண் சொன்னாள்:

“எல்லாரும் ஒரே படகில் போறது நல்லமில்ல, பிரிஞ்சு பிரிஞ்சு போனால் நல்லது. ஒரு நன்மைக்குத் தீமையெண்டாலும்...உங்களோட தம்பி இருக்கட்டுமன், மகள் அதுலயும் நான் இதுலயுமாய் ஏறுவம்.”

படகு இலக்கம் பெற்றுப் பிரிந்தார்கள். தமிழினியின் கரங்களுக்குள் அந்த ஆண் குழந்தை சுகமாய் தூங்க ஆரம்பித்தது. சனத்திரளைத் திணித்துக் கொண்டு படகுகள் ஓர் சங்கிலித்தொடராய் ஓடத் தொடங்கின. சற்று நேரத்துக்கெல்லாம் ஒளியைச் சுமந்து வரும் சுடர்கள் போல ஷெல்கள் புறப்பட்டன. “சிவனே, முருகா, இயேசுவே, பிள்ளையாரே, மாதாவே” அவசர அவசரமாக அழைக்கப் பட்டார்கள். வீல் வீலென்று குழந்தை தமிழினியின் மடியில் முகம்புதைத்துக் கதறத் தொடங்கியது. அவளை இறுகப் பற்றிப் பிடித்தது. ஏரித்தண்ணிர் படகுக்குள் எகிறிக் எகிறிக் குதிக்க எல்லோரும் தொப்பலாகி விட்டிருந்தார்கள். என்ன நடந்தது என்று அறியமுடியாத பதட்டம்- பயங்கரம். கரை சேரும் வரை கடவுள்களின் நாமங்களின் உச்சரிப்பு மட்டும் தெளிவாய்க் கேட்டது.

சிறு குழந்தைகளின் அலறல், பெரியவர்களின் பதறல் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டேயிருந்தது. என்னவோ நடந்திருக்கிறது என்பது மட்டும் ஊர்ஜிதமாகியது.

கரை சேர்ந்த போது தான் தமிழினி கண்திறந்து பார்த்தாள். நெஞ்சுக்குள் பிரபஞ்சம் குலுங்கியது, ஓலம் குரல்வளையை



நெருக்கிற்று. அடுத்த படகிலிருந்த பெண்குழந்தை ஓடி வந்து இவள்கரம் பற்றித் தாயைத் தேடியது. இவள் இடுப்பிலிருந்த குழந்தை இவளை இறுகப்பற்றிப் பிடித்திருந்தது. இடுப்பிலும் கரத்திலும் இரு குழந்தைகளோடு திமிறிப் போனாள் தமிழினி. அந்தப் படகின் சுவடே இல்லை. அத்தனைபேரும் சிதறிச் சிதைந்து போனார்கள்.... ஓ அந்தத்தாய் எத்தனை எதிர்பார்ப்புகளோடு புறப்பட்டாள்; பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி.

அந்தப் பெண்ணின் வாசகங்கள் மனதில் எதிரொலித்தன. “எனக்குத் தாய் சகோதரங்களில்ல, உதவியுமில்ல, இனிப் பிள்ளையளின்ரை வருங்காலத்தையும் யோசிக்க வேணுமேல்லே” விழிநீர் உடைப்

**ஆத்மராஜா றூத் சந்திரிக்கா**

பெடுத்தது. ஒரு கணம் கண்மூடினாள். விழிகளுக்குள் இரு குழந்தைகளினதும் பரிதாப முகங்கள்.

தாயை இழந்த சோகம் தெரியாத, புரியாத மழலைகள். ‘சகலமும் நீயே’ என்று அவளைத் தழுவிக் கொண்டு நிற்கும் இரண்டு பிஞ்சுகளை அந்தக் கரையில் தவிக்க விட்டு அவளால் நகரக் கூட முடியவில்லை. கரங்களில் குழந்தைகள், பையில் தாலி. கண்காணாத ஒருவனுக்காக கையில் தாலியோடு புறப்படுவதா...? இல்லை கண்கண்ட இந்த மழலைகளுக்காக இந்த மண்ணில் ஜீவிப்பதா...? தமிழினி தீர்மானத்தோடு நடந்தாள். தன் கர்ப்பத்தில் சுமக்காத இரு குழந்தைகளையும் சுமந்து கொண்டு தமிழினி நடக்கிறாள்- ஒரு தாயாக!

# லத்திகா ஐ லவ் யூ

மேஜையின்மீது தலையைக் கவிழ்த்த படி லத்திகா அழுது கொண்டிருந்த அந்த தினம் ரவியின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு தினம்.

கேவிக் கேவி அழுது கொண்டிருந்தாள் லத்திகா. இன்னும் பத்து மணி ஆகவில்லை. பக்கத்து இருக்கை காமினியும், ஜஸ்பீரும் இன்னமும் வரவில்லை. ரவியின் பொஸ் கபூருக்கு, ஆண்களைக் கண்டாலே பிடிக்காது. அதனால் தான் காமினி, ஜஸ்பீர், லத்திகா என்று பெண் உதவியாளர்களையே வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்தான்.

ஆனால், அலுவலகத்தில் யாரும் பெண் ஸ்டெனோ இல்லாததால் ரவியை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று, ஆக, மூன்று இளம் பெண்களுக்கு நடுவில் ரவி. காமினியும், ஜஸ்பீரும் பஞ்சாபிகள். அவர்களின் நுனி நாக்கு ஆங்கிலமும், அடாவடிப் பேச்சுக்களும், ஸ்லீவ்லெஸ்சும் ஏனைய ஆடம்பரங்களும் அவர்களிடமிருந்து ரவியை வெகுவாக விலக்கி வைத்தன.

லத்திகா நேர் எதிர். ஒரு தேர்ந்த கலைஞனின் புல்லாங்குழலிலிருந்து வரும் மிருதுவான சங்கீதத்தை ஒத்த குரலும், பேச்சும், தேனில் ஊறிய பலாச்சுளையை ஒத்த சாயப்பூச்சு இல்லாத அதரங்கள், லாகிரியில் கிறங்க அடிக்கும் காந்தக் கண்கள், கேரளத்துப் பெண்களுக்கே உரிய வாளிப்பான தேகக்கட்டு. அருகில் நின்று பேசினால் கஸ்தூரி மஞ்சளும், தேங்காய் எண்ணையும் கலந்து வரும் ஒரு ரம்யமான மணம்.

இதுவும் இன்ன பிறவும் தான் லத்திகா....

அவள் அருகில் சென்றான். முகம் புதைத்து அழுது கொண்டிருந்த அவள் தலையை வருடி என்னவென்று கேட்க நினைத்து அதை அடக்கிக் கொண்டான்.

என்ன விசயமென்று குழப்பமாக இருந்தது.

ஊரிலிருந்து ஏதேனும் துர் செய்தியா? உடல் தான் சுகமில்லையா?

"லத்திகா, என்ன விசயம்? ஏன் அழுகிறாய்?"

பதில் இல்லை. தலை குலுங்கியது; விசும்பல் ஒலி மட்டுமே கேட்டது.

அதற்குமேல் ரவியால் ஒன்றும் யோசிக்க முடியவில்லை. தயங்கவும் இல்லை. அவளது முன்னந் தலையைத் தொட்டு லேசாக நிமிர்த்தினான்.

**"நீ போகாதே என்று தடுக்கவும் மாட்டேன் ஆனால் வேறு வழி எதுவும் எனக்குப் புலப்படவில்லை."**

"நாய் கடித்து விட்டது ரவிஜி!"

"சே....இதற்கா இப்படி அழுவார்கள்? உடனே கிளம்பு...ஆஸ்பத்திரி போகலாம்." என்று சொல்லி ஆட்டோவைப் பிடித்து பக்கத்திலிருந்த படா இந்துராவ் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனான்.

காயம் அதிகம் இல்லை. சொல்லப்போனால் காயமே இல்லை. கீறல் தான். இருந்தாலும் பரவாயில்லை என்று டாக்டர் ஒரு ஊசியைப் போட்டு, "இனி பயப்பட ஒன்றும் இல்லை." என்றும் சொல்லிவிட்டார்.

அதற்குமேல் அவர்கள் அன்றையதினம் அலுவலகத்துக்கு போகவில்லை.

தொடர்ந்து அவர்களது பழக்கம் அதிகமாகி, ஓட்டல், பார்க் என்று அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தனர்.

பாரகம்பா சாலை. இருபுறமும் கவியும் பெரிய பெரிய நாவல் மரங்கள். வெகு தூரம் பார்க்க முடியாத படி வெண்ணிறப் பனி. எப்போதேனும் கடந்து செல்லும் வாகனங்களின் 'ஹெட்லைட்' வெளிச்சம். எலும்புக்குள் ஊடுருவும் குளிர்.

சாலையில் அந்த இருவரைத் தவிர வேறு ஒரு உருவம் கூட தட்டுப்படவில்லை.

"என்ன, பேச்சையே காணோம்?"

"நீதானே சொன்னாயே பேசாமல் நடக்கலாம் என்று......"

"இந்தக் 'கடி' தானே வேண்டாம்ங்கிறது.... பேசாம இருக்கிறதுக்கா இப்படி நடந்தே போகலாமென்று சொன்னேன்....ம்...?" சொல்லிவிட்டு அவன் இடுப்பில் தன் ஆள் காட்டி விரலால் குத்தினாள் லத்திகா.

துள்ளிக் குதித்தான் ரவி.

"பேசலாம். பேசவேண்டும். உன்னிடம் நான் ஒன்று சொல்ல வேண்டும்."

"என்ன....?"

"சொல்லத் தயக்கமாக இருக்கிறது லத்திகா...."

"ஏன் தயக்கம்?"

"நீ தவறாக எடுத்துக் கொள்ளலாம். என்னுடைய சிநேகிதத்தை முறித்துக் கொள்ளலாம். என்னை மோசமான ஆளாக நினைத்து விடலாம்....'

"மாட்டேன்..... மாட்டேன்..... மாட்டேன்... சொல்லுங்கள்.....!"

அப்போதும் தான் சொல்ல நினைத்ததை சொல்லாமல் நடந்து கொண்டிருந்தான் அவன்.

"சொல்லாவிட்டால் மேலே ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டேன்," சொல்லிவிட்டு இரு கைகளையும் கட்டிக் கொண்டு நின்று விட்டாள் லத்திகா.



## சாரு நிவேதிதா

(தமிழக எழுத்தாளர்)

அவளருகே மிக நெருங்கி சன்னமான குரலில் அதை சொன்னான் ரவி.

"லத்திகா...ஐ லவ் யூ...."

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவள் உடல் ஒரு கணம் சிலிர்த்துக் குலுங்கியது.

ஒன்றும் பதில் சொல்லாமல் நடக்க ஆரம்பித்தாள் அவள். அவனும் எதுவும் பேசாமலேயே அவள் பக்கத்தில் சென்று கொண்டிருந்தான்.

பாரகம்பா சாலையின் குறுக்கே ஓடிய கஸ்தூரிபா காந்தி மார்க்கை வந்து சேர்ந்திருந்தனர்.

லத்திகாவின் ஹோஸ்டலுக்கு இடதுபுறம் திரும்ப வேண்டும்.

அப்படித் திரும்பியபோதுதான், அவன் சற்றும் எதிர்பாராதபடி அவள் அதைச் செய்தாள்.

அவனது ஒரு கரத்தைப் பற்றியெடுத்து அதில் தன் ஈர உதடுகளால் முத்தம் பதித்தாள் லத்திகா.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் லத்திகாவுக்கு அமெரிக்காவில் (நியூயோர்க்) ஒரு வேலை கிடைத்தது.

"உடனடியாக திருமணம் செய்து கொள்வோம். இரண்டுபேரும் கிளம்புவோம்," என்றாள் லத்திகா.

"அப்படியெல்லாம் என்னால் திடீரென்று புறப்பட முடியாது. இதைப்பற்றி யோசிக்கவே எனக்கு ஆறுமாதகாலம் அவகாசம் வேண்டும்."

"அப்படியானால்...."

"நீ போகாதே என்று தடுக்க மாட்டேன். ஆனால், வேறு வழி எதுவும் எனக்குப் புலப்படவில்லை."

"கடைசியாக கேட்கிறேன்.... நீ இப்போது என்னுடன் புறப்பட்டு வருவாயா?"

"லத்திகா... நான் சொல்வதைக் கேள்...."

"என்னுடன் வருவாயா? மாட்டாயா? அதற்கு பதில் சொல்."

ரவி மவுனமாக இருந்தான்.

"ரவி....ஒய் ஆர் யூ ஸோ அடமண்ட்?"

(ரவி நீ ஏன் ரொம்பவும் பிடிவாதம் காட்டுகிறாய்?)

இவைதான் லத்திகா ரவியிடம் பேசிய கடைசி வார்த்தைகள்.

அதற்குப் பிறகு லத்திகாவை தன் வாழ்க்கையில் மீண்டும் சந்திக்க முடியும் என்று ரவி கனவில் கூட நினைத்ததில்லை. ஆனால், சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின், சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

ரவி தன் ஆறு வயது பெண் குழந்தையுடனும், மனைவியுடனும், தன் நண்பன் ஒருவனை வழியனுப்புவதற்காக அந்த பன்னாட்டு விமான நிலையத்திற்கு வந்திருந்தான்.

அப்போது தான் அந்த மஞ்சள் நிற தேவதையை, அவன் மறுபடியும் அங்கே கண்டான். அவள் பக்கத்தில் ஆஜானுபாகுவான ஒரு வெள்ளைக் காரன். கணவனாகத்தான் இருக்க வேண்டும். பக்கத்தில் ஐந்து அல்லது ஆறு வயது மதிக்கத்தக்க புஷ்டியான ஒரு சிறுவன்.

அவனைக் கடந்து சென்ற போது- பனிரெண்டு வருடங்களுக்கு முன் பாரகம்பா சாலையில் சோடியம் விளக்கொளியில் பார்த்த அதே பரவசம் முகத்தில் மின்ன லேசாக, மிக லேசாக புன்முறுவல் காட்டினாள்.

நிற்கவில்லை. பேசவில்லை.

அவனும் லேசாய் புன்முறுவலித்தான்.

"ரவி.....ஒய் ஆர் யூ ஸோ அடமண்ட்?" அவள் தன் மகனை அதட்டியது அவன் காதில் விழுந்தது. தன் மகனுக்கு என் பெயரையா வைத்திருக்கிறாள்?

ஒரு கணம் அவன் மனதில் ஏதோ தடம் புரண்டது போல் இருந்தது. அந்த இடத்திலேயே அமர்ந்து 'ஓ...' என்று வாய்விட்டு கதறி அழவேண்டும் போல் தோன்றியது.

முகத்தை கைகளால் இறுக துடைத்தபடி திரும்பிப் பார்த்தான். அவளும் அதே கணத்தில் திரும்பிப் பார்த்தாள்.

"அப்பா....அந்த ஆன்ட்டி உன்னைத் திரும்பித் திரும்பி பார்க்கிறாளே...உனக்கு அவளைத் தெரியுமா?" அவன் கையை பற்றியிருந்த அவன் மகள் கேட்டாள்.

"எந்த ஆன்ட்டி?"

"அப்பா நீ ஏன் அழுகிறாய்?"

"ஆமாம் கண்ணு.... தூசு விழுந்து விட்டது," என்று சொல்லிவிட்டு கைக்குட்டையை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டான் ரவி.

'லத்திகா....ஐ லவ் யூ....' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

# சர்மி மறந்துவிட்டாள்



ஜெயந்தி ஜெய்சங்கர் ~ கொழும்பு

இன்று எனக்குத் திருமணம். அளவுக் கதிகமான சந்தோசமோ ஆவலோ எனக்கு இல்லை. சாதாரணமாக கல்யாணம் என்றால் பெண்களுக்கே ஏற்படும் கனவு, கற்பனை எதுவுமே எனக்கு ஏற்படவில்லை.

காரணம் நான் நானாக இல்லை, என்று தான் சொல்ல வேண்டும். பதட்டமும் கலக்கமும் மனதில் குவிந்து மனம் இருண்டு இருப்பது போல் பிரம்மை. வீட்டில் ஒரே அமர்க்களம். சொல்ல முடியாதளவு சந்தோசத்தில் எல்லோரும் போட்ட சத்தம் என்னை மேலும் பயப்படுத்தியது. "கல்யாணப் பெண்ணுக்குரிய களையையே காணோம். என்னடி இப்பவே பயமா? பேயறைந்தவ மாதிரி வெறிச்சிட்டு இருக்கிறியே?" சங்கீதா சொன்ன பின்தான் எழுந்து கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கிறேன். என் முகத்தில் பயம் பயங்கரமாக இருந்தது. யானை தன் தலையில் தானே மண் அள்ளிப்போட்ட மாதிரி நானே என்னைக்காட்டிக் கொடுத்து.. கஷ்டப்பட்டு முகத்தை மாற்றிக் கொள்கிறேன்.

உதட்டில் வலிந்து வரவழைக்கப்பட்ட புன்னகையோடு உட்கார்ந்து இருக்கின்றேன். சடங்கு சம்பிரதாயங்கள் சந்தோசமாகவே முடிகிறது. என் கழுத்தில் மூணு முடிச்சும்- விழுகிறது. எல்லாமே கனவில் நடப்பது போல் பிரம்மை. அம்மாவைப் பார்க்கிறேன் ஆனந்தத்தில் முகம் இன்னும் அழகாய் இருக்கிறது. அப்பாவின் முகமும் அப்படித் தான். அவர்களுக்கு சுமை இறங்கிப் போன சந்தோசம். மகளுக்கு மாங்கல்யபாக்கியம் கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சி.

ஒரே ஒரு பிள்ளை என்று ஊரே கூடி வாழ்த்தும்படி அப்பா கல்யாணத்தை அமர்க்களப்படுத்திவிட்டார். அவர்களைப் பொறுத்த வரை நான் இன்னும் குழந்தை. பச்சைப் பிள்ளையைப் பார்ப்பது போல் அதே பக்குவம். "மாப்பிள்ளை ரொம்ப நல்லவரம்மா; அவர் மனம் கோணாதபடி நடந்துக்க. பிடிவாதம் பிடிக்கக்கூடாது. வீட்டிலை இருந்தமாதிரி இன்னும் விளையாட்டுப் பிள்ளையாக இருக்காம, பொறுப்பாக குடும்பப் பெண்ணாக, லட்சணமா நடந்துக்க சர்மி...." அடிக்கடி அம்மா கிசுகிசுத்தாள். சர்மிளா என்ற பெயரை 'சர்மி' என்று அழைப்பதில்தான் அவர்களுக்கு சந்தோஷம். 'சர்மியாக' இருந்த நான் சற்று நேரத்துக்கு முன் மூன்று முடிச்சு விழுந்து முகுந்தனின் மனைவி என்ற அதி உயர்ந்த ஸ்தானத்தோடு அமர்ந்திருக்கிறேன்.

கழுத்தில் தாலியும் கண்களில் கலக்கமும் நிறைந்திருந்தது. என் கலக்கத்தை அறியாமல் என் கையை அழுத்திவிட்டு உதட்டோரம் குறும்பாய் சிரித்த முகுந்தன் மேல் கொஞ்சம் கோபமும் கொஞ்சம் நாணமுமாக மெதுவாக கையை விடுவிக்க முயன்றபோது "அழகான பஞ்சுக் கரம். என்பிடிக்குள் பதிந்தால் பறிக்கேலாது." காதோரம் கிசுகிசுத்த அவன் குரல் கன்னத்தை சூடேற்றியது. அதை மறைக்க தலைகுனிந்தபோது "தாமரை தலை கவிழ்வது வெட்கத்தாலா நாணத்தாலா.....?" நிலம் பிளந்து அப்படியே உள்ளே போனால் நன்றாய் இருக்கும் போல் எனக்குத் தோன்றியது.

முகுந்தனின் வார்த்தையை இரசிக்கவோ வெறுக்கவோ முடியாத திரிசங்கு நிலை. பேசி செய்யப்படும் திருமணத்தில் கூட காதல் இருக்குமா...? கண்டதும் காதல் போல் அல்லவா பேசுகிறான். காதல் ஆழமானது அல்லவா? அழகாலா அது ஏற்படும்? பல எண்ணங்களின் போராட்டத்தோடு பகல் பொழுது கழிந்தது. சுட்டெரித்த சூரியனை அப்படியே விழுங்கிவிட்ட மகிழ்வில் இருள் படர ஆரம்பித்தது.

நான் பசலையில் தவிப்பேனா....பயத்தில் துடிப்பேனா...என்று தவித்து இருந்தபோது தான் "சர்மி எழுந்து புடவையை மாத்தி அலங்காரம் பண்ணிக்கலாம் வா" அழைத்த சித்தியின் பின்தொடர்ந்து அறைக்குள் நுழைந்தேன். கள்ளச் சிரிப்புடன் அலங்காரம் செய்யும் சித்தியை எண்ணும்போது அருவருப்பாய் இருந்தது.

முகத்தை திருப்பிக் கொள்கிறேன்.

தினமுரசு என்னைப் பார்த்து சிரித்தது. பத்திரிகையைப் பார்த்தபோதுதான் என் நண்பி 'ஸ்ரீலதா'வின் நினைவு வேதனைப் படுத்தியது. "என்னதான் இருந்தாலும் உயிர்த் தோழியின் கல்யாணத்துக்கு வர முடியாதளவிற்கு.... சே.... கலை உலக நண்பர்கள் எல்லாமே இப்படித்தான். கடைசி நேரத்தில் காலைவாரி விடுவார்கள் கோபத்தில் நெஞ்சம் துடித்தபோதும் தினமுரசில் காட்ட முடியாமல் எடுத்துப் பிரித்துப் பார்க்கிறேன். எக்ஸ்ரே..... அதிரடி....தகவல் பெட்டி சினிவிசிட் தாண்டி "அதை மட்டும் சொல்லாதே" சிறுகதையில் பார்வை பதிந்தது. ஸ்ரீலதாவின் கதை அது. கோபத்தை மறந்து ஆவலோடு படிக்கின்றேன். அவள் கற்பனையா...என் கதையா... அச்சமும் ஆவலும் மேலோங்க கதையைப் படிக்கிறேன்.

"சர்மிளா-அவள்தான். அவள்தான் அக் கதையின் நாயகி. அழகானவள். அன்பானவள். பண்பானவள். அவளுக்கும் பருவத்தில் எழும் காதல் உணர்வு தோன்றி முகம் தெரியாமலே தன் காதலனை எண்ணி இரசித்தபோது அழகு உருவமாய் முன் தோன்றிய அர்சுன் ஆசைகாட்டி அழகை அனுபவிக்க முயன்றபோது உறங்கிக் கிடந்த பெண்மை விழித்து அவள் விலகிக் கொண்டாள்.


கட்டுப்பாட்டோடு காதல் செய்து கண்ணியமாய் வாழ ஆசைப்பட்டவள் அவள். அழகு தான் வாழ்க்கை என்று அனுபவிக்க அலைந்து அழிந்து போனவன் அர்சுன். அவன் புதைந்துபோன இடத்தில் புல் முளைத்து அது கூட அழிந்துபோய் இருக்கும் போது கடந்து போனவற்றை- மறந்து போனவற்றை- கசப்பான நினைவை கைப்பிடித்த கணவனிடம் சொல்லி நல்ல பொழுதை பொல்லாத பொழுதாக்காமல் நல்ல மனைவியாய் நடந்து கொள்வேன் என்ற உறுதியுடன் அவள் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்ட அறைக்குள் புகுந்தாள்."

"அதை மட்டும் சொல்லாதே" என்ற கதைமூலம் குறிப்பால் உணர்த்திய தோழியின் வார்த்தைகளால் உள்ளத்தில் எண்ணம் வலுவேற ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை செய் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அறியாப் பருவத்தில் ஆசைப்பட்டு அற்பத்தனமான அவன் குணம் அறிந்து விலகி அவன் இறந்த பின்பும் பாரிய தவறாய் நினைவை வருத்தி எதிர்கால இனிய வாழ்வை சிதைப்பது வீண். குழந்தை பொம்மை விளையாட ஆசைப்பட்டது உண்மை. தொட்டால் வெடிக்கும் பொம்மை என்று அறிந்து, வேண்டாம் என்று சொன்னால் அந்தக் குழந்தையை எண்ணிப் பெருமைப் பட வேண்டும் அதை எண்ணி என்னை வருந்துவது மடமை அல்லவா?

அந்த நிகழ்வை தூக்கி எறியாமல் சிதம்பர இரகசியம் மாதிரி எண்ணி என்னை வதைத்தது எவ்வளவு அறியாமை, என்று எண்ணியதும் என்னில் இருந்த பயம்- அச்சம் மெல்ல மெல்ல விலகி ஓடுவதை உணர்ந்தேன். ஆசையில் நெஞ்சம் கனக்க, அச்சத்தில் மெல்ல உடல் நடுங்க, வெட்கத்தில் கன்னம் சிவப்பேற, விழிகள் தாபத்தோடு தரைநோக்க முகுந்தனின் அன்புக் கரத்திற்குள் பூவாய் மலர்ந்தேன்.

# ம(ன)றக்க முடியவில்லை

ஷர்மிளா இஸ்மாயில்— கண்டி



குண்டு மல்லிகை மணம் மனதைக் கிளறியது. மெதுவாய் கிள்ளியெடுத்து உள்ளங்கையில்வைத்து முகர்ந்தாள். சுகந்தம் சுகமாயிருந்தது.

காத்திருந்தாள். சரியாக அரை மணியும் ஐந்து வினாடிகளும் தாமதித்து விட்டான். கோபம் வந்து முகத்தை கடுகடுக்க வைத்தது. 'வரட்டும்' என எரிச்சலோடு லேசாய் புலம்பிக் கொண்டாள்.

மனத்திரையில் அவன் முகம் வந்து போனது. கோபம் மண்டிக் கிடந்ததை மறந்தாள். தனக்குள்ளாக புன்னகைத்துக் கொண்டாள். கையில் கிடந்த கவிதைப் புத்தகத்தை விரித்தாள்.

'சிரிப்பதற்கு மட்டுமந்த உதடு போலும்- பார்வை
சிந்திவிழ மட்டுமந்தக் கண்கள் போலும்
எரிப்பதற்கு மட்டுமந்த அழகு போலும்- ஆணை
இடுவதற்கு மட்டுமந்த விரல்கள் போலும்
கறுப்புகளை மறந்து விட்ட எரிந்து நிற்கும்-ஒரு
கனகமணி விளக்கைப் போல் நமக்கும் தோழி
உறுப்புகளை மறந்து விட்ட காதல் வேண்டும்-அது
உண்மையிலே சாத்தியமா முயன்று பார்ப்போம்!'

வைரமுத்துவின் வரிகள். வாசித்து யோசித்தாள். தலை நிமிர்ந்தவளுக்கு தூரத்தில் அவன் வருவது தெரிந்தது. கூடவே ஒரு குட்டிப் பையனும்.

வந்தவன் புன்னகைத்தான். வசீகரத்தில் மனம் மயங்கிற்று. பிடிவாதமாய் முறைத்தாள்.

"இந்த ஆண்ட்டிக்கு ஹலோ சொல்லு ராஜா." அவன் கூற அந்தக் குட்டி ராஜா "ஹலோ ஆண்ட்டி" என்றான். அவள் பேசாதிருந்தாள். "ஆண்ட்டி ரொம்ப கோவமாய் இருக்காங்க. ராஜா நாம கொண்டு வந்த சொக்லேட்டை ஆண்ட்டிக்கும் கொடுப்போமா?" கேட்டு சிரித்தான்.

ரோஜா நிற விரல்களால் குட்டிப் பையன் கொடுத்ததை புன்னகைத்து வாங்கினாள். "தேங்க் யூ ராஜா."

"ராஜாக்கு மட்டுமா அந்த 'தேங்க் யூ' இந்த ரகுவுக்கு இல்லையா?" கேட்டான்.

"ஆமாமா. சொன்ன நேரத்துக்கு வந்துட்டீங்க. நன்றி சொல்லத்தான் வார்த்தை தேடிக்கிட்டு தவிச்சுப் போயிருந்தேன்." சீறினாள்.

"கோபம் கொள்ளாதே பெண்ணே. இந்தச் சிறுவன்- அதாகப்பட்டது என் அண்ணன் மகன்- நேற்றைய தினம் எங்கள் வீட்டுக்கு வந்ததிலிருந்து என்னுடனேயே ஒட்டிக் கொண்டுள்ளான். அவனை நான் தனியே கழன்று வர முடியவில்லை. தாயே தப்பி வருவதற்குள் பாதி பிராணன் போய்விட்டது. எனினும்....."

"போதும். போதும். இப்ப என் பிராணன் போய் விடும் போலிருக்கிறது." அவள் முடிப்பதற்குள் குட்டிப் பையன் குறுக்கிட்டான். ரகுவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே....

"ரகு அங்கள்...நீங்க இந்த ஆண்ட்டிக்கு பயமோ? இவங்க என்ன உங்க கேர்ள்-ஃப்ரண்டா?" அவளுக்கு சிரிப்பு பிய்த்துக் கொண்டு வந்தது.

இந்தக் காலத்துப் பிள்ளைகள்! ரகுவின் முகத்தில் லேசான சிரிப்பு. "ஏய் ராஜா.. என்ன சொல்லி உன்னை நான் கூட்டிட்டு வந்தேன்? இப்படி கதைச்சா ரகு அங்களுக்கு கோபம் வரும் தெரியும்தானே?" வெருட்டினான்.

"சரி அங்கள். நான் பேசல்ல." சிறுவனின் முகம் வாடி விட்டது. அவளுக்குப் பரிதாபமாயிருந்தது. "இல்ல ராஜா. இங்க வாங்க. நானும் நீங்களும் அந்தக் கடைக்குப் போய் ஐஸ் கீறீம் வாங்கி ரகு அங்களுக்கு கொடுக்காம சாப்பிடுவோம்." விரல்களைப் பிடித்துக் கொண்டு எழுந்தாள்.

"ம்....எனக்கு வேணும். எனக்கு வேணும்" தலையில் அடித்துக் கொண்டான் ரகு.

அவள் வைத்துப் போன கவிதைப் புத்தகத்தை விரித்தான்.

'.......இதற்கு முன்னால்
எந்தன் கண்ணில்
இப்படி மின்னல் அடித்ததில்லை
இதற்கு முன்னே
பெண்ணே நெஞ்சம்
இரண்டு மடங்காய்த் துடித்ததில்லை......'

வைர வரிகள். வாசித்து சிலிர்த்தான்.

★★★

வீட்டு வாசற்படியை மிதிக்கும் போதே குட்டி ராஜாவின் வாயை அடக்கி வைத்தான். ஆண்ட்டி பற்றி எதுவுமே சொல்லக் கூடாதெனகண்டிப்பான உத்தரவு வேறு. இரவு டி.வியில் போகும் நாடகத்தை குடும்பத்தோடு இரசித்துக் கொண்டிருந்தான் ரகு. இடையில் விளம்பரங்கள்.

"ஹாய்... டெடி... இந்த ஐஸ்கிறீம் தான் ஆண்ட்டி எனக்கு வாங்கித் தந்தாங்க...." ராஜா உற்சாகமாய்க் கத்தினான். "எந்த ஆண்ட்டி ராஜா?" ராஜாவின் அப்பா- ரகுவின் அண்ணன் அமர்த்தலாய்க் கேட்க- ரகு திரும்பிப் பார்ப்பதையும் அலட்சியப் படுத்தி- தந்தையின் மடியில் அமர்ந்து முழுக்கதையையும் சொல்லவாரம்பித்தான் குட்டி ராஜா.

# இலக்கிய நயம்

## கல் இட்ட சாபம்

அருவியை வருடி குளிரள்ளி வரும் தென்றல் உடலை சுகப்படுத்த இந்திரன் கம்பீரமாக நடந்து சென்றான்.

மண்ணுலகம் எனதே, விண்ணுலகும் எனதே என்ற பெருமிதம் அவன் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியிலும் தெரிந்தது.

மண்ணுலகம் அழகா, விண்ணுலகம் அழகா? என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது.

எழுந்த கேள்விக்கு விடை காண முன்னர் அவன் எதிரே கண்ட காட்சி சித்தத்தில் மது ஊற்றியது.

அருவியில் குடம்வைத்து நீர் மொன்று கொண்டிருப்பது பெண்ணா, பேரழகின் பிறப்பிடமா? பின்னழகு கண்டே இந்திரனுக்கு சித்தத்தில் போதையேறியது.

சத்தியமாய் இந்திரன் தன்னை மறந்து போனான். நீர் மொன்று, குடம் தூக்கி இடுப்பில்வைத்து அந்தச் சித்திரப் பெண்ணாள் பத்திரமாய் பாத அடி எடுத்துவைத்தாள்.

களங்கமில்லாத வதனம். எதிரில் நின்றவனை கலங்கடிக்கும் விழிகள். செதுக்கப்பட்டதுபோல் செவ்விதழ்கள். பதமாக திரண்டிருக்கும் கனியிரண்டு கழுத்துக்கு கீழே. கையளவேயான இடை. குடமும் குலுங்காத, உடலும் குலுங்காத நடை. திரைமூடிய சோலை. தரையில் எங்கும் காணாத பாவை. கடைவிழிப் பார்வையே போதும். கடைவழிப் பயணம் வரை பார்த்திருக்கலாம், பள்ளியில் சேர்ந்திருக்கலாம், மனம் கூவும்.

இந்திரன் சபையில் ஆடாத பெண்ணில்லை. இடையசைத்து, மேலே உள்ள வண்ணக்குடம் ரெண்டும் அசைத்து போதையூட்டும் அழகிகளுக்கு இந்திரன் சபையில் பஞ்சமில்லை.

ஆனாலும், இதுவரை இவளைப் போல ஒரு அழகியைக் கண்டதில்லை. கண்டதனால் இத்தனை களிப்புக் கொண்டதுமில்லை என்று நினைத்தான் இந்திரன்.

கலைராணி, பட்டுவண்ணப் பூமேனி, வாழைத்தண்டெடுத்து வடித்தெடுத்த நயமேனி, கனவேணி மேல் ஏறி நான் கைப்பற்றத் துடிக்கும் எழில் மேனி! இவள் யார் ராணி? எந்தத் தோட்டத்து மலர்ராணி?'. இந்திரன் நெஞ்சம் வினாக்களின் களமானது.

மெல்லப் பின் தொடர்ந்தான். வண்ணப் பூங்கொத்து முன்னால் சென்றது. அதன் வாசம் அவன் முகத்திலடித்தது. இந்திரன் முறுவலித்தான்.

பர்ணசாலைக்குள் சென்று மறைந்தது தேவதை.

இந்திரன் காத்திருந்தான். வெள்ளி நிலா வெளியே வரவேயில்லை.

விசாரித்தான். 'பர்ணசாலைக்குள் குடியிருக்கும் கோல மயில் யார்?', என்று.

முற்றும் துறந்த முனிவரின் துணைவி. பெயர்: அகலிகை.

முற்றும் துறந்த முனிவருக்கு பற்றிக் கொள்ள ஒரு துணைவி எதற்கு?

உலக பாசம் துறந்த முனிவரின் பர்ணசாலைக்குள் பூவாசம் கொண்ட பெண்மயில் என்ன செய்கிறது?

முடவன் கையிலே கொம்புத்தேனா? நாவறுந்தவன் முன்பாக அறுசுவைப் படையலா?

முற்றும் துறந்த முனிவருக்கு கொத்தும் கிளி எதற்கு? கொவ்வைப் பழம் எதற்கு?

இந்திரன் ஒரு முடிவு செய்தான். அகலிகையை பல நாள் பின்தொடர்ந்தான்.

ஏறெடுத்தும் பார்க்கவில்லை அகலிகை. வானுலக வேந்தனுக்கு வானம் வரை வளர்ந்தது ஆசை.

பர்ணசாலைக்குள், தேன் சுரந்து முடியு முன்னரே தூக்கியெறியப்பட்ட மலராகக் கிடந்தாள் அகலிகை.



முனிவருக்கு புலனடக்கம் முக்கியம் ஐம்புலன்களை அடக்கியாளும் பயிற்சியை மேற்கொள்ளும் களமாக்கினர் அகலிகையை.

பேரழகி அருகில் இருந்தும் மனம் பேதலிக்காமல் இருப்பதுதான் புலன்களை ஆளும் கலை என்று விளக்கம் சொன்னார் முனிவர்.

மனதை அடக்கி கல்லானாள் அகலிகை. இடைக்கிடையே ஆசைத்தீ நெஞ்சில் எழும். நடுநிசியில் எழுந்து பச்சை தண்ணீரில் குளித்து தீ அடக்குவாள் அகலிகை. அப்போதும் உலராத ஈரம்போல மோகம் நெஞ்சுக்குள் ஒட்டியிருக்கும். தாபம் சிந்தைக்குள் எட்டிப்பார்க்கும்.

இன்றும் அதே நிலைதான். பெருமூச்சு நெடுமூச்சாய் வெளிப்பட்டது.

அப்போதுதான் பர்ணசாலைக்கதவு திறந்தது.

வந்தவர் முனிவர்.

அவரேதான், கௌதம முனிவர்.

என்றுமில்லாத மாற்றம் அவர் பார்வையில். உயர்ந்து தணியும் அவள் மார்புகளையே உற்று நோக்கிக்கொண்டு, ஒவ்வொரு அடியாக உள்ளே எடுத்து வைத்தார்.

அகலிகைக்கு உள்ளூர மகிழ்ச்சி. இன்று தான் கண் திறந்ததாக்கும். பெண் நினைவு பிறந்ததாக்கும் என்று நினைத்தாள்.

முனிவர் அருகே அமர்ந்தார். அவள் தோள்கள் இரண்டிலும் இருகரங்களாலும் அழுத்திப் பிடித்தார். தொட்ட இடம் நீர்விட்டது போல குளிர்ந்தது.

அகலிகை தலை குனிந்தாள். முனிவர் அவள் தாடையை தொட்டு முகத்தை நிமிர்த்தினார். அகலிகை கண்களை மூடிக் கொண்டாள். இதழ்கள் மட்டும் ஈரத்தோடு துடித்துக் கொண்டிருந்தன. முனிவர் மெல்ல, மெல்ல இதழ்களை நெருங்கினார். அகலிகையின் பெருமூச்சு எழுந்த வேகத்தில் முனிவரே ஆடிப்போனார்.

சித்திர உடலை தரிசிக்கத் துடித்தன முனிவரின் விழிகள். விழிகளின் எண்ணம் அறிந்து கைகள் இயங்க, சேலைச் சிறைக்குள் இருந்து ஒரு நந்தவனம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. மேகச் சிறையுடைத்து ஒரு நிலா மீட்கப் பட்டுக்கொண்டிருந்தது.

எழில் வீணைக்கு போர்வை எதற்கு? போர்வை விலக்கப்பட்டது. வீணை மீட்டப்பட்டது. வீணையில் இருந்து இன்ப வேதனை. முனிவருக்கு அதுவே இனிய ராகமாயிற்று.

அகலியையும் விழிகளை மூடியிருந்தாளே தவிர, மனக்கதவை திறந்துதான் வைத்திருந்தாள்.

எத்தனை வருடமாக பொத்திவைத்த தேன் குடம். எத்தனை நாட்களாக வண்டை எதிர் பார்த்திருந்த மலர் வனம்.

பார்த்தும் பற்றோடு பாராதிருந்த வண்டு இன்றுதானே மலரில் தாவியிருக்கிறது. மார்பில் மலரை எடுத்துச் சூடியிருக்கிறது.

அகலிகை மெய்மறந்து போனாள். மலர்களின் ராணி மனம் ஒன்றி தேனீ சுமந்தாள். அதுவே சுகமென மிதந்தாள்.

பர்ணசாலைக் கதவு படீரென்று திறந்தது. சிவபூசைக்குள் கரடியா? அகலிகை முனிவரின் தோளுக்கு மேலாக விழிகளைச் செலுத்தி வாயிலை நோக்கினாள்.



தருவது–ரசிகன்

'அய்யோ..' என்று கூவி அதிர்ந்தபடி தன் பூமேனி சுமந்த முனிவரை ஒரு புறம் தள்ளி, கிள்ளிப் போடப்பட்ட ஆடைகளை வாரிச் சுருட்டி எழுந்தாள்.

வந்தது முனிவர்- சாட்சாத் கௌதம முனிவர்.

விழிகளில் நெருப்பு. உதட்டினில் துடிப்பு. உடம்பெல்லாம் வெட வெடப்பு. முனிவரால் கொதிப்பை அடக்க முடியவில்லை.

அகலிகை திகைத்தாள். அகலிகை இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

முதலில் வந்து கூடிக்கலந்த முனிவர் வேஷம் கலைந்தது.

முனிவராய் வேடமிட்டு வந்தது இந்திரன். வானுலக வேந்தன் ஒரு வஞ்சியை வஞ்சித்து விட்டான்.

கௌதம முனிவர் விழிகளில் தணலோடு சாபமிட்டார்.

"அடியே அகலிகை நீ கல்லாகிப் போவாய்!"

மறுநிமிடமே கல்லானாள் அந்த பெண் மயிலாள்.

கல்லு சிரித்தது.

உருண்டு உருண்டு சிரித்தது.

"ஏனடி நகைக்கிறாய்?" முனிவர் கேட்டார்.

கல்லாக மாறிய அகலிகை அதற்கு பதில் சொன்னாள்;

"கண் இருந்தும் குருடாக இருந்த கணவனே! தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறு வேறுதான்! உணர்ச்சிகளும் அப்படித்தான் என்பதை நீ மறந்துபோனாய்! முற்றும் துறந்தாயே நீ, நீயே முற்றும் எனக்கு என்று வந்தவள் நானல்லவா. என்னை ஒரு வார்த்தை கேட்டாயோ? உலகுக்கு போதிக்க புறப்பட்டாயே, உலையாக கொதித்த என் நெஞ்சத்துக்கு ஒரு ஆறுதல்கூட சொல்லியிருப்பாயா நீ ஜடமாக நினைத்தாய் பெண்ணை! பெண்ணாக இருந்தாலும் உன்னோடு இருந்தவரை கல்லாகத்தான் இருந்தேன்! அதனால் இன்று கல்லானது ஒன்றும் புதிதல்ல அறிவாய்!"

இந்திரன் மெல்ல அகல முயன்றான். கல் அவன் குறுக்கே நகர்ந்து பேசிற்று.

"விரும்பிய பெண்ணை நேர் நின்று காதல் சொல்லி கைப்பிடிப்பவனே ஆண்மகன்! நீ காமுகன்! உன்னில் நம்பிக்கை இழந்து, பிறர் உருவில் வந்த பேடி நீ உங்களைப் போன்றோர் நடமாடும் பூமியில் கல்லாயிருப்பதே மேல்! நான் கல்லானேன். நீயிர் மயிரானீர்" என்றாள் கல்லான அகலிகை.

இருவரும் சிலையாகி நின்றனர்.

அது ஏன் மயிரானீர் என்றாள் அகலிகை.

**"மனிதர்கள் தம் உயர்வுக்கு உரிய நிலையில் இருந்து தாழும் போது. தலையிலிருந்து உதிர்ந்து விழும் முடியினைப் போலாகிவிடுகிறார்கள்"** திருவள்ளுவர்தான் சொல்லியிருக்கிறார்.

**"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்த கடை"**

குறள்-964. அதிகாரம்-97

## குறுக்கெழுத்துப் போட்டி இல–145

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | 3 | |
| | ■ | 4 | | | | ■ |
| | ■ | ■ | 5 | | | |
| 6 | | 7 | | | | |
| ■ | ■ | ■ | ■ | 8 | ■ | 9 |
| 10 | | | | | ■ | |
| ■ | 11 | | | ■ | 12 | |

### இடமிருந்து வலம்

01. படிப்பிலும்சரி, விளையாட்டிலும் சரி இது இருக்க வேண்டும்.
02. மழைக்காலங்களில் புற்றிலிருந்து வெளிவரும்.
04. 'பசி இருக்கும் போது ஒரு பிடி பிடிக்க வேண்டும்.
05. பெரிய மரங்களைச் சிறிய பலகைகளாக்க உதவும்.
06. இராசிகளில் ஒன்று.
10. குழந்தைகளின் பற்கள் இந்தத் தானியத்தைப் போல் இருக்கும்.
11. வெப்ப காலத்தில் தான் இந்நோய் தாக்கும்.
12. அறிவை வளர்க்க இது தேவை.

### மேலிருந்து கீழ்

01. இப்படியான உணவு கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் அவசியம் தேவை.
03. வேளைக்கு இது வந்து சேராவிட்டால் வேலைக்கு வரமாட்டார்கள்.
07. பல ஆபிரிக்க நாடுகளில் இதனால் பலர் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.
08. நீர் தேங்கி நிற்கும் இடத்தில் இது வந்து சேர்ந்து விடும்.
09. ஒரு நாட்டில் இது புகுந்தால் குடி மக்களுக்கும் சேதம்; குடும்பங்களுக்குள் இது வீசினாலும் குடும்பத்தினருக்கும் சேதம்தான்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 30.03.1996 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல–145
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-143ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 உ | ப் | பு | ■ | 2 வா | க் | 3 கு |
| த் | ■ | 4 தி | ர | வி | ய | ம் |
| 5 த | யி | ர் | ■ | 6 பு | ■ | ப |
| ர | ■ | ■ | 7 வ | ள் | ள | ல் |
| வு | ■ | 8 ச | ■ | ளி | ■ | ■ |
| ■ | 9 கூ | டு | ■ | 10 மா | து | ளை |
| 11 நா | த் | தி | க | ன் | ■ | 12 நா |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 143இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எஸ். புவனேஸ்வரி, தெஹிவளை.
2. செல்வி. எவ். சிபாயா, கொழும்பு-13.
3. கே. திரவியசிங்கம், வவுனியா.
4. அஹமட் ராஸீம், பதுளை.
5. திருமதி. ரஜினி தேவராஜ், திருகோணமலை.
6. செல்வி. எம். சம்சுல் பர்ஸானா, சாய்ந்தமருது-16.
7. கே. காண்டீபன், நுவரெலியா.
8. ஏ. யாசீர், வெல்லம்பிட்டிய.
9. செல்வி. பத்மஸ்ரீ அரியரத்தினம், நீர்கொழும்பு.
10. என். சிவராஜா, கொட்டகலை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்



**★ உலகக் கிண்ணப் போட்டியில் உங்களை வியக்க வைத்த அணிகள் இரண்டு?**

ஏ.சுந்தரேசன்–மருதானை.

*கையருகில் வெற்றிக்கனி வந்த போதெல்லாம் அதனை பந்தாக நினைத்து விரட்டியடித்த இந்திய அணி; மேற்கிந்திய அணியுடன் நடந்த போட்டியில் தோளைத் தழுவ வந்த தோல்வியை துரத்தியடித்த அவுஸ்திரேலிய அணி-இரண்டும்தான் வியப்பூட்டிவிட்டன.*

**★ அசாருதீனின் விவாகரத்துக்கு யார் காரணம்?**

எம்.கறீமா சனூன்–புத்தளம்.

*அசாருதீனேதான்! கறீமா, உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? அசாருதீன் விவாகரத்துச் செய்தியை முரசு வெளியிட்டவுடன் ஃபோனுக்கு மேல் ஃபோன். இரசிகைகள்தான் அதிகமாகக் கோபப்பட்டார்கள். உண்மை சில சமயங்களில் கசப்பாக இருக்கும்தானே!*

**★ மேற்கிந்திய அணித்தலைவர் ரிச்சாட்சன் சரியாக விளையாடத் தவறியதால்தானே தோல்வி ஏற்பட்டது?**

கே.வசந்தமலர்–கண்டி.

*ரிச்சாட்சனிடம் மிதமான போக்குத் தெரிந்தது உண்மைதான். அவுஸ்திரேலிய கப்டன் மார்க் டெய்லர் அனுபவசாலி. சுழற்பந்து என்றால் மேற்கிந்திய வீரர்களுக்கு கிலி பிடிக்கும் என்று தெரிந்து சுழற்பந்து வீச்சை பயன்படுத்தி வித்தை காட்டவைத்தது தான் பிரதான காரணம். பந்தின் ரகம், தரம் அறியாமல் வந்ததும் ஆவேசமாக அடிக்க அவசரப்பட்டதும் மற்றொரு காரணம். அம்புரோஸ் ரன்- அவுட்டில் சென்றிருக்காவிட்டால் சில சமயம் ஜெயித்திருக்கலாம்.*

**★ ரஜினிகாந்த் அரசியலில் ஈடுபடமாட்டேன் என்று அறிவித்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்?**

எஸ்.ஜெயந்த்- நீர்கொழும்பு.

*அப்பாடா! தப்பித்துக்கொண்டார் ரஜினி. அவரைவைத்து சவாரி செய்யக் காத்திருந்த அரசியல்வாதிகள் அனைவருமே முதலைகள். ரஜினியின் நல்ல பெயரையும் சேர்த்தே விழுங்கியிருப்பார்கள்.*

**★ உலகக் கிண்ணப் போட்டியில் சச்சின் டெண்டுல்கரின் ஆட்டம் எப்படி?**

வி.மனோகரன்- மாத்தளை.

*நடப்பது உலகக் கிண்ணப் போட்டி என்பதை இந்திய அணியில் நினைவு வைத்திருந்தவர் டெண்டுல்கர் மட்டும்தான்; என்று நினைக்கிறேன். 'இந்திய அணி தோற்கலாம்; டெண்டுல்கர் தோற்கமாட்டார்' என்று முரசு சொன்னது பலித்துவிட்டது. உலகக் கிண்ணம் 96 இல் அதிக ரன்களை குவித்த தனிவீரர் டெண்டுல்கர்தான்.*

**★ காதல் பார்வை, காமப் பார்வை இரண்டின் வேறுபாட்டை எப்படிக் கண்டுபிடிப்பது?**

எம்.எஸ்.எம்.லாபீர்- புல்மோட்டை–01.

*'கண்ணென்ன கண்ணென்ன பேசுது?' 'கண்ணெங்கே கண்ணெங்கே போகுது?' என்பதை வைத்து கண்டுபிடித்து விடலாம்.*

**★ தென்னிலங்கையில் ஜெனரல் ரத்வத்தை தானே ஹீரோ?**

வி.யோகன்- திருமலை.

*அது சூரியக்கதிர் நேரத்தில்! இன்றைய ஹீரோ யார் தெரியுமா? கப்டன் ரணதுங்கா. விமான நிலையத்தில் அவருக்ககு மாலை சூட்ட அமைச்சர்கள் கூட போட்டி போட்டதை தொலைக்காட்சியில் பார்த்தேனே! ஹீரோவேதான்!*

**★ அசாருதீனின் விவாகரத்து அவரது கிரிக்கெட் வாழ்க்கையைப் பாதிக்குமா?**

ஜெ.ரஞ்சனி, மு.கவிதா- நிவித்திகலை.

*அது தனிப்பட்ட விவகாரம். விளையாட்டு பொதுப்பட்ட விவகாரம். இரண்டுக்கும் ஏன் முடிச்சுப்போட வேண்டும்?*

**★ எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, ரஜினிகாந்த் மூவரையும் ஒப்பிடுக?**

அ.பரமேஸ்வரன், கொழும்பு–13.

*முன்னவரும், மூன்றாமவரும் தமது தனித்துவத்தால் உச்சம் தொட்டவர்கள். நடுவிலே இருப்பவருக்கு உச்சம் தொட எம்.ஜி.ஆரின் தோள் தேவைப்பட்டது.*

**★ இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் காதலித்தா திருமணம் செய்தார்?**

எம்.இக்பால்- நிக்கவெவ.

*திருமணம் செய்துவிட்டு காதலிக்கிறார்.*

**★ காதல் கவிதைகள், பாடல்கள் என்பவற்றை பெண்கள் அதிகமாக எழுதுவதில்லையே ஏன்?**

எஸ்.உமா காயத்திரி- கண்டி.

*தாளில் எழுதாமல் தங்களுக்குள் மட்டுமே எழுதிப்பார்ப்பதோடு பல பெண்கள் நிறுத்திக் கொள்கிறார்கள். அது தெரியாமல் பெண்களுக்கு கவிதையே எழுதவராது என்று நினைத்துவிடாதீர்.*

**★ நாம் நினைப்பது எல்லாம் நிறைவேறி விட்டால்......?**

தர்மலிங்கம் பத்மினி- கொழும்பு–15.

*வாழ்வில் ஒரு சுவை இருக்காது. எதிர் பார்ப்பும், அதனை நோக்கிய ஓட்டமும்தானே வாழ்வின் இயக்கம். நினைப்பதெல்லாம் நடந்தால் மனிதன் ஜடமாகிவிடுவான் பத்மினி!*

**★ ஆண்களால் சாதிக்கமுடியாதது எது? பெண்களால் சாதிக்க முடியாதது எது?**

பா.சஹீனா பேகம்- இறக்கக்கண்டி.

*தாய்மை! தாய்மைக்கு விதை போடுதல்!*

**★ தடங்கித் தடங்கி செய்தி வாசிப்பவர்கள் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்?**

எஸ்.எச். வஹாப்தீன்- ஹொரொவ்பொத்தானை.

*அரசியல்வாதிகள் முன் மடங்கி மடங்கி நின்று சிபாரிசு பெற்று வந்தவர்கள் என்று.*

**★ மணிரத்னம் இயக்கும் 'ஆனந்தம்' புலிகள் பற்றிய கதையாமே?**

எஸ்.வாசன்- வவுனியா.

*சுத்தப்பொய்! மணிரத்னம் தியாகியாக விரும்பமாட்டார்.*

**★ இலங்கைக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?**

செ.ம.மெலோசா, கொழும்பு.

*பந்து வீச்சாளர்களைப் பயமுறுத்தும் அரவிந்த டி சில்வா.*

**★ சிந்தியா! சமாதானம் நமக்கு எட்டக்கூடிய கனியா? எட்டாக் கனியா?**

றிஸ்வானா ஹமீட்- ஏத்தாலை கொலனி.

*எட்டும் தூரத்தில் உள்ள கனிதான். தொட்டுப் பறிக்கும் துணிச்சல்தான் இல்லாமலிருக்கிறது.*

**★ டியர் சிந்தியா! பாடசாலை விடுமுறைகள் பற்றி என்ன கூறுகிறீர்?**

எம்.ரட்ணகுமார்- பது/தெளிவத்தை.

*மடியிலே கனம்.*

# இராமாயணம் அங்கம் 25

இராமகாதை வால்மீகி மாமுனிவரால் முதன் முதலில் உருவாக்கப்பட்ட போதிலும் அக்காதையிலுள்ள தெய்வீகத்தன்மை இன்று அதனை உலகமகா காவியங்களுள் ஒன்றாக்கி விட்டது. ஆதியில் சமஸ்கிருத மொழியில் இருந்த இந்நூல் இன்று உலகனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அனைவரையும் ஈர்க்கும் சக்தி படைத்ததாக ஆகிவிட்டது.

## பண்புக்கோர் இலக்கணம் பரதன் என்பவன்!

இராமாயணத்தில் இராமருக்கே தனிச் சிறப்புத்தரப்பட்டுள்ளது; எனினும் இராமருக்கு அடுத்த படியாக மிக உயர்ந்த- உன்னத நிலையில் வைத்துப் போற்றப்படும் பாத்திரம் பரதன் என்பதை மறுக்க முடியாது. பரதனை தமிழ்நாட்டின் சிறந்த அரசியல் வாதியும் தமிழறிஞருமான திரு.ப. ஜீவானந்தம் அவர்கள், 'செம்மையின் ஆணி' என்று வர்ணிக்கிறார். இராமகாதையை எந்தெந்த மொழிகளில் எழுதினார்களோ அந்தந்த ஆசிரியர்களெல்லாம் பரதனைப் பண்பின் சிகரமாகப் போற்றத்தவறவில்லை.

தனது தாயாரினாலேயே தனக்காகப் பெற்றுத்தரப்பட்ட மிக உன்னதமான பதவியினை துச்சமெனத்தூக்கி எறிந்துவிட்டு எப்படியாவது அண்ணன் இராமரைத் தேடிப்பிடித்து அழைத்து வந்து அயோத்தியின் அரியணையிலேற்ற பரதன் கங்கணம் பூண்டான். தசரத மன்னரின் ஈமச்சடங்குகளுக்கு முன்னும் பின்னும், அயோத்தி மன்னனாக முடி சூடும்படி சகலரும் பரதனை வேண்டினர். வசிட்ட மாமுனிவரும் பலமுறை கேட்டார். அமைச்சர்களும் பிரதானிகளும் கூட வேண்டிக் கொண்டார்கள்.

"அரசனில்லாத ஒரு நாடு ஆக்கிரமிப்பாளர்களின் வேட்டைக்காடாகிவிடும்," என்றெல்லாம் பலரும் பரதனிடம் கூறினார்கள். ஆனால் அவன் "தசரத மாமன்னரின் தலைமகன் இருக்கும்போது, அவரின் தம்பியான நான் அரசகட்டிலேற அருகதையற்றவன்" என்று கூறிவிட்டான்.

நாட்டு நிலமையை சீர்தூக்கி, செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டும் என்பதற்காக வசிட்ட மாமுனிவர் அவையைக் கூட்டினார். அமைச்சர்கள், பிரதானிகள், குடிமக்கள் பிரதிநிதிகள் ஆகிய அனைவரையும் அவையில் ஒருங்குசேர முனிவர் ஏற்பாடு செய்தார். எல்லாரும் வந்து சேர்ந்ததும் அமைச்சர் சுமந்திரர் பரதனின் அரண்மனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

### பரதனின் துறவுக் கோலம்

அம்மாபெரும் மாளிகையின் ஓர் ஒதுக்குப் புறமூலையில் புற்பாயில் அமர்ந்து கண்களை மூடித் தியானத்திலாழ்ந்திருந்த பரதனின் காதுகளில் முரசறையும் சப்தமும் குழலொலியும் வேறுபல வாத்தியக்கருவிகளின் முழக்கங்களும். கேட்டன

கண்ணைத் திறந்து அருகில் நின்றிருந்த லலிதகுமாரனைப் பார்த்தான். 'இத்தகைய ஒலிகளுக்கான காரணம் என்ன?' என்று வினவுவதைக் குறிப்பாலறிந்த லலிதகுமாரன் வெளியே சென்று காரணத்தை அறிந்து கொண்டு அமைச்சர் சுமந்திரருடன் உள்ளே வந்தான். பரதன் ஓர் அரசகுமாரன் என்ற தகுதிகள் எதுவும் அற்ற நிலையில், ஒரு இளம் தவசிபோல் மரவுரி தரித்து தரையில் புற்பாயில் அமர்ந்திருப்பதைக் கண்டு சுமந்திரருக்கே அடக்கமுடியாத துயரம் மேலிட்டது.

"அவை கூடியிருக்கிறது. தங்களை அழைத்து வரும்படி குலகுரு கூறினார். அதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறோம்." என்றார் அமைச்சர்.

"அரசாளத் தகுதி உடையவர்தான் அரசவைக்கு வரவேண்டும். இந்த அடிமைக்கு அங்கு வேலையில்லை. அமைச்சர் பெருமானே! அண்ணன் இராமனை அழைத்து வந்து அரியணையில் அமர்த்துவதே என் ஒரே குறிக்கோள். என்னை ஈன்றவள் செய்த பெரும் பாபத்துக்கு நானே தான் பிராயச்சித்தம் தேடவேண்டும், அண்ணன் இருக்கும் இடம் தேடிப் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள். இராமச்சந்திரப் பிரபு எங்கிருக்கிறாரோ அங்கேயே அன்னாருக்குரிய பட்டாபிஷேகத்தை நடத்தி முடிப்போம். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். படைகளும் வரட்டும்; குடிமக்களும் வரட்டும்; எமது அன்னையரும் வரட்டும். ஆரண்யத்தில் அபிஷேகத்தை முடித்ததும் அங்கிருந்தே ஊர்வலமாக அண்ணன், அண்ணி மற்றும் இலக்குவனை அழைத்து வருவோம். ஆகவே காடுவெட்டுவோர், பாதை சமைப்போர்; மற்றும் வேதியர்கள், விழாவுக்கான இசைக் கலைஞர்கள், நர்த்தகிகள் அனைவரையும் உடன் திரட்டுங்கள்," என்று பரதன் கூறிய வார்த்தைகள் தேன்மாரி போல் சுமந்திரரின் காதுகளில் நிறைந்தது.

சுமந்திரர் மேலும் பணிவுடன்; "இளவரசே! அவை கூடியிருப்பதனால்- அனைவரும் தங்கள் வரவை எதிர்பார்த்திருப்பதனால்- தாங்கள் நேராகவே வந்து தங்கள் முடிவினை அரசவையில் தெரிவிப்பது தான் முறையாகும்," என்றார். அமைச்சரின் கூற்றில் உள்ள நியாயத்தை உணர்ந்த பரதன் அரசவைக்குப் புறப்பட்டான். அரண்மனையிலிருந்து பரதன் வெளிவந்ததும் சங்கு- குழல்கள் முழங்க முரசொலி கிளம்பியது. சினமுற்ற பரதன் கைகளை உயர்த்தி அவற்றை நிறுத்தும்படி உத்தரவிட்டான். கொடி, குடை, ஆலவட்டமோ, தேரோ எதுவுமின்றி, பாதணிகளுமின்றி கால் நடையாகவே நடக்கலானான்.

### போற்றுதலுக்குரிய பெருந்தகை

அயோத்திமா நகரமாந்தர், ஏற்கனவே பரதன் மீது கடும் கோபமுற்றவர்களாகக் காணப்பட்டிருந்தனர். கைகேயியின் சூழ்ச்சியில் பரதனுக்கும் பங்கிருக்கிறது என்றே நம்பியிருந்தனர். ஆனால் பரதனுடைய உண்மையான நோக்கம் அறிந்து அவன் மீது அளவு கடந்த அன்பு கொண்டனர். பரதன் போற்றுதலுக்குரிய பெருந்தகையாளன் என்பதனை அறிந்து தாங்கள் ஏற்கனவே அவன் மீது கொண்ட ஐயத்துக்காக மனம் வருந்தலானார்கள்.

அரசவைக்கு வந்த பரதனுடைய தோற்றத்தினைக் கண்ட அனைவரும் அவன்மீது பக்தி செலுத்தும் நிலை அடைந்தனர்.



அவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் போய் அமரமறுத்தான். அதனருகே சென்று வீழ்ந்து வணங்கினான். "தசரத மாமன்னரின் தலைமகனான இராமபிரானுக்குரிய இவ்வாசனத்தில் நான் ஒரு போதும் அமரமாட்டேன். அவ்வாசனத்தில் அண்ணலை ஏற்றி வைப்பதே எனது ஒரே இலட்சியம்!" என்று ஆவேசம் ததும்ப உரைத்துவிட்டு ஆரண்யம் சென்று இராமரை அழைத்து வரச்செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும் எடுத்துரைத்தான்.

பரதனின் கோரிக்கைக்கு எதுவித மறுப்பும் இருக்கவில்லை. இரண்டொரு தினங்களில் சகல ஆயத்தங்களும் பூர்த்தியாகிவிட்டன. அமைச்சர் சுமந்திரரே வழிகாட்டியாக முன் செல்ல ஏனையோர் பின் சென்றனர். கோசலாதேவி, சுமந்திராதேவி ஆகியோருடன் கைகேயியும் சென்றார். அவர்களும் வசிட்ட மாமுமனிவரும் இரதங்களில் சென்றனர். பரதனின் பயணத்துக்காக இரதம் தயாராகச் சென்றபோதும் அவன் கால் நடையாகவே சென்றான். சத்துருக்கனும் லலிதகுமாரனும் பரதனின் இருமருங்கும் நடந்து சென்றனர்.

### இராஜகுமாரன்

### பரதனும் குகனும்

முதல் நாளிரவு தமஸா நதிக்கரையில் தங்கி அடுத்த நாள் உதயத்தின்போது புறப்பட்டு கங்கை நதிக்கரையை அடைந்தனர். அப்பிராந்தியமான நிஷாத நாடு குகனுடைய ஆளுகைக்குட்பட்டது என்பதை அறிவோம். பெரும் பட்டாளம் அணி திரண்டு வருவதாக தனது காவலர்கள் மூலம் அறிந்த குகன், ஒற்றர்கள் மூலம்- அயோத்தி மன்னர்களுக்குரிய திருவாத்தி மரத்தினை சின்னமாகப் பொறித்த கொடிகளுடன் பெரும்படை வருவதையும் அறிந்தான். தனது தெய்வமான இராமருக்குத் தீங்கு விளைவிக்க பரதன் வருகிறானோ என்று முதலில் ஐயுற்றான். இதற்கிடையில் அமைச்சர் சுமந்திரர் குதிரையில் வேகமாக வந்து குகனிடம் உண்மையை உரைத்தார். இராமபிரானின் தம்பியையே சந்தேகிக்க நேர்ந்துவிட்டதை எண்ணி மனம் வருந்தினான் குகன்.

வகைவகையான பரிசுப் பொருட்களை எடுத்துக்கொண்டு பரதனிடம் சென்று வணங்கினான். அடுத்த நாட்காலையில் பெரும்படகுகளை எடுத்து வந்து பரதனையும் பரிவாரங்களையும் கங்கையின் தென்கரையில் கொண்டுவந்து சேர்த்தான்.

கங்கைக் கரையிலிருந்து சற்றுத் தூரத்துக்கப்பால் தான் பாரத்துவாச முனிவரின் ஆசிரமம் இருந்தது. ஆற்றங்கரையில் பெரும் சேனை படைகள் வந்து குவிந்திருப்பதைக் கண்ட முனிவரின் சீடர்கள் பாரத்துவாசரிடம் போய்க் கூறினார்கள். வந்திருப்பது யார் என்பதை அவர் மனோ வலிமையினால் உணர்ந்து கொண்டாலும், வந்திருக்கும் பரதனின் உள்நோக்கத்தினை அவரால் உணர முடியவில்லை. பொறுமையுடன் காத்திருந்தார்.

### முனிவருக்கு சந்தேகம்

சற்று நேரத்தில் பரதன், சத்துருக்கன் இருவரையும் அழைத்துக் கொண்டு அமைச்சர் சுமந்திரரே வந்தார், வந்தவர்களை வரவேற்று முனிவர்கள் உபசரித்தனர். பின்னர் பரதனைப் பார்த்து பாரத்துவாச முனிவர், "பரதா! அயோத்தியிலிருந்து அரச பரிபாலனம் செய்ய வேண்டிய நீ, ஆரண்யம் வரக் காரணம் என்ன? உன் அண்ணனால் உன் ஆட்சிக்கு ஏதாவது அபாயம் ஏற்படலாம்; அதனை நீக்குவதற்கான ஏதாவது யோசனையுடன் வந்திருக்கிறாயா?" என்று வெளிப்படையாகவே கேட்டுவிட்டார். இவ்வார்த்தை பரதனுக்கு வெந்த புண்ணிலே வேல் பாய்வது போலாயிற்று. தான் அத்தகைய எண்ணத்துடன் அங்கு வரவில்லை. என்பதை தெளிவு படுத்தினான். முனிவர் மகிழ்ந்து, அன்று, பரதனுடன் வந்த பல்லாயிரக்கணக்கான படையினருக்கும் ஏனையோருக்கும் தேவர்களின் உதவியுடன் உணவு படைத்தார். அத்தனை பேரும் அங்கேயே தங்கி அடுத்த நாள் காலையில் இராமர், சீதை, இலக்குவன் ஆகியோர் தங்கியிருக்கும் சித்திரக்கூட மலையடிவாரம் நோக்கிப் புறப்பட்டனர்.

### இலக்குவனின் சீற்றம்

அன்று பகல் பொழுதில்- தொலைவில் பலதரப்பட்ட ஓசைகள் கேட்டன. வன விலங்குகளும் பட்சியினங்களும் நிலை தடுமாறி இடம் பெயர்வதையும் பர்ணசாலையிலிருந்த மூவரும் கண்டனர். இராமரின் ஆணைப்படி உயர்ந்த மரம் ஒன்றின் மீதேறி நின்று பார்த்த இலக்குவன், வடக்கேயிருந்து பெரும்படை வருவதைக் கண்டு இராமரிடம் கூறினான். சற்று நேரத்துக்கெல்லாம் படையினர் திருவாத்தி மரம் சின்னமாக பொறித்த கொடியுடன் வருவதையும் கண்டு கடும் சினம் கொண்டவனாக மரத்திலிருந்து கீழே குதித்தான்.

"அண்ணலே! பரதன்தான் படை எடுத்து வருகிறான். அவனுடைய ஆட்சிக்கு நாம் குந்தகமாக இருப்போம் என்று கருதி எம்மை ஒழித்துக்கட்டவே படை எடுத்து வருகிறான். ஆகவே உடனடியாக வில்லினை எடுங்கள். ஒரு கை பார்த்துவிடுவோம்," என்று துடித்தான்.

தம்பி இலக்குவனின் பதட்டம் கண்டு இராமர் புன்னகை புரிந்தவண்ணம், "தம்பி! பரதனை நம் பகைவனாகக் கருதுவது பொருந்தாது. பொறுமையாக இருந்து பார்" என்று தம்பியை அழைத்து அருகே அமர வைத்துக்கொண்டார். **(தொடர்ந்து வரும்)**

### இராமாயணப் போட்டி: 23

**சரியானவிடை:- பிரயாகை**

1. **திருமதி. எஸ். சரசுவதி (ஆசிரியை).** கொ/மெல்போர்ட் த.வி. புசல்லாவை.
2. **எஸ். மதிவதனி.** வெவெச குறூப், மேல் பிரிவு, பதுளை.
3. **ஆ. இராமகிருஸ்ணன்.** 71ஏ, நுவரெலியா வீதி, பாரத்தக்க. உ.த.அ.
4. **செல்வி. வாசுகி சீவரத்திம்.** 15ஏ, கொலிவூட் பிலேஸ், கொழும்பு-06.
5. **க. யோகேஸ்வரன்.** பது/ஹப்புத்தளை, த.ம.க. ஹப்புத்தளை.

**போட்டி இல. 25** கேள்வி:- அயோத்தி மன்னர்களுக்குரிய சின்னம் யாது?

மார்ச்.30க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.25, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# காதிலை பூ கந்தசாமி

## நடிக—நடிகையர் கிரிக்கெட் போட்டி

## நக்மா பந்து வீச்சு! பிரபுதேவா கிளீன் போல்ட்



### ரஜினிதான் கப்ரன்,

நடிகர் ரஜினிகாந்த் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கலந்து கொண்டால் அவரே கப்ரன் என்றும் அறிவிக்கப்பட்டது. கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னர் ரஜினிகாந்த் அளித்த பேட்டி இது.

**கேள்வி:- *கிரிக்கெட் அணிக்கு நீங்கள் தலைமை தாங்குவீர்களா?***

**ரஜினி:-** நேற்று பஸ் நடத்துநர், இன்று நடிகன், நாளை....? (கைகள் இரண்டையும் மேல் நோக்கி காட்டி சிரிக்கிறார்.)

**கேள்வி:- *நீங்கள் தங்கள் அணியில் [illegible] போவதாக பிரபுதேவா சொல்கிறாரே?***

**ரஜினி:-** *நான் கிரிக்கெட் விளையாட வந்தால் தனி அணிதான் தொடங்குவேன்.*

**கேள்வி:- *எப்போது கிரிக்கெட் ஆட வருவீர்கள்?***

**ரஜினி:-** *நான் வருவேன். கண்டிப்பாக வருவேன். சரியான நேரத்திலே வருவேன்.*

### ரஜினியின் இறுதிப் பேட்டி.

நேற்றுமாலை தனது கிரிக்கெட் பிரவேசம் தொடர்பாக ரஜினி அளித்த பேட்டி இது;

**கேள்வி:- *கிரிக்கெட் போட்டிகள் நாளை ஆரம்பமாக உள்ளன. உங்கள் பிரவேசம் இருக்குமா?***

**ரஜினி:-** *வேண்டாம். என்னை விட்டுவிடுங்கள். கிரிக்கெட்டில் நல்லவர்கள் இருக்கணும். வல்லவர்கள் இருக்கணும் என்று நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னேன். இந்த கிரிக்கெட் எல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது. ஓ..... ராகவேந்திரா.*

**கேள்வி:- *உங்கள் ரசிகர்கள் யாருக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள்,***

**ரஜினி:-** *அவர்கள் தாங்கள் விரும்பிய அணிகளை ஆதரிக்கலாம். அது அவங்க அவங்க சொந்த விவகாரம்.*

**கேள்வி:- *அப்படியானால் நீங்கள் கிரிக்கெட் பிரவேசம் செய்யப்போவதில்லை?***

**ரஜினி:-** *நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி.*

### ரஜினி வருவார் நிச்சயம் வருவார்

*நடிகர் ரஜினிகாந்த் கிரிக்கெட் பிரவேசம் செய்வது உறுதி. அவரது ஆசீர்வாதம் நமக்குண்டு. நமக்கு மட்டுமே உண்டு. நக்மா அணியை அகில உலகில் இருந்து அதலபாதாளத்தில் தள்ளுவோம். வாழ்க ரஜினி புகழ். இவ்வாறு நடிகர்கள் கிரிக்கெட் அணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

### போட்டி வர்ணனை

சென்னையில் சேப்பாக்கம் மைதானத்தில் தமிழ் திரைப்பட நடிகர்-நடிகைகள் பங்கு கொண்ட கிரிக்கெட் போட்டி நடைபெற்றது தெரிந்ததே.

நடிகையர் அணிக்கும், நடிகர்கள் அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் நடிகையர் அணி அமோக வெற்றிபெற்றது.

நடிகையர் அணிக்கு நக்மா கப்ரனாக இருந்தார். நடிகர்கள் அணிக்கு பிரபுதேவா கப்ரன்.

பல்லாயிரம் ரசிக, ரசிகையர்களின் பலத்த விசிலடிகள் மத்தியில் ஆட்டம் படு படு சூடாகவும், மிக மிக ஜோராகவும் நடைபெற்றது.

நடிகையர்கள் அணி பந்துகளை வீசியவிதம் கண்டு ரசிகர்கள் உணர்ச்சிவசப்பட்டனர். ஆப்பிள் குண்டுகளை. மன்னிக்கவும்.. ஆப்பிள் துண்டுகளை வீசியெறிந்தனர்.

அதனால் ஆட்டம் 5 நிமிடம் பாதிக்கப்பட்டது. நடிகைகள் பயந்துபோய் கற்பழிப்புக் காட்சியில் வில்லன்முன்பாக நடுங்குவதுபோல காணப்பட்டார்கள்.

ரசிகர்கள் ஆப்பிள்துண்டுகளை வீசியெறிந்தது ஆட்டத்தை குழப்பும் நோக்கத்துடன் அல்ல, தங்கள் தலைசிறந்த அன்பைத் தெரிவிக்கவே என்று பின்னர் தெரியவந்தது.

நக்மா மூச்சுவாங்க ஓடிவந்து பந்தை வீசிய போது, ஏற்பட்ட ஆனந்த அதிர்ச்சியில் மைதானத்தை நோக்கி மதுப்புட்டிகள் பறந்தன.

வேண்டுமென்றே செய்யப்பட்ட சதி முயற்சியா? என்று நடுவர்கள் ஆராய்ந்தனர்.

நக்மாவின் பந்து வீச்சை கண்டு வெறிகொண்ட ரசிகர்கள் வீசிய அன்புப் பரிசே அதுவென்று அறியப்பட்டது.

அதனையடுத்து நக்மா மீண்டும் பந்து வீசினார். பிரபுதேவாவின் முகத்துக்கு நேராகச் சென்ற பந்து, படாமல் விலகிச் சென்றது. பிரபுதேவா முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

அடுத்த பந்தை வீசினார் நக்மா. பிரபுதேவா அவசரப்பட்டுவிட்டார். அதனால் கிளீன் போல்ட் டானார்.

நடிகைகளில் நக்மா, சங்கவி, குஷ்பு ஆகியோரின் பந்துகள் கடினமாக இருந்ததாக நடிகர்கள் அணி அபிப்பிராயம் தெரிவித்தது.

சில்க் சுமிதா, டிஸ்கோ சாந்தி ஆகியோர் புது விதமாக பந்துவீசினார்கள்.

***நீங்கள் இருவரும் வீசிய பந்து எந்த வகையைச் சேர்ந்தது? சுழற்பந்தா, வேகப்பந்தா, மித வேகப்பந்தா என்று இருவரிடமும் கேட்டோம்.***

*குலுக்கல் பந்து, அதாவது டான்ஸ் ஆடுவது போலவே உடலை குலுக்கிக்கொண்டுவந்து விக்கெட்டை நோக்கி பந்தை வீசுவதுதான் குலுக்கல் பந்து என்று விளக்கமளித்தனர் இருவரும்.*

கோவை சரளா சிரித்துக் கொண்டே வீசிய பந்தில் ஆட்டம் இழந்தார் கவுண்டமணி. அப்போது மறுதரப்பில் மட்டையோடு நின்ற செந்தில் தன்னை மறந்து கைதட்டி ஆரவாரம் செய்தார்.

கோபம் கொண்ட கவுண்டமணி செந்திலை தனது மட்டையால் அடித்துத் துரத்தினார். பார்வையாளர் பகுதியில் இருந்து பலத்த ஆரவாரம் கேட்டது.

நடிகர்கள் அணியில் பிரபுதேவா துடுப்பெடுத்தாடியபோது, 'ஜிலு ஜிலு பந்து, கொக்கி போட்டு இழுக்குதுபாரு, கலர் கலர் கலர் பந்து, விக்கெட்டு பறக்குது பாரு, அண்ணரின் துடுப்பும் ஜோரு, ஓங்கி அடித்தது ஸ்டைலு, சிக்ஸர் பறக்குது பாரு, கலக்குதுபார் அவர் ஸ்டைலு' என்ற பாடலை கடும் சத்தத்தோடு ஒலிபரப்பினார்கள்.

நடிகர் விஜய் துடுப்பெடுத்தாடியபோதும் பாடல் ஒலிபரப்பப்பட்டது. விஜய்க்கு பந்து வீசிய வர் சங்கவி. அதனால் பழக்கப்பட்ட பந்தை சந்திப்பதுபோல உற்சாகமாக விளாசித்தள்ளினார் விஜய்.

மீனா, ரோஜா ஆகியோர் மென்பந்துகளாக வீசினார்கள். பிரசாந்த், விக்னேஷ் ஆகியோர் அடித்தாடினார்கள்.

பிரபு துடுப்பெடுத்தாடியபோது நடிகையர் அணி கப்ரன் நக்மா பந்து வீச்சில் மாற்றம் செய்தார். குஷ்புவை அழைத்து பந்தை வீசச் சொன்னார்.

குஷ்புவின் ஒவ்வொரு பந்தும் பிரபுவை பயமுட்டியது போலத் தெரிந்தது. பிரபு தடுமாறிக் கொண்டிருந்தார். குஷ்புவின் முகம் சிவந்திருந்தது.

குஷ்புவின் முகம் சிவந்திருப்பது நாணத்தாலா, கோபத்தாலா? என்று பார்வையாளர்கள் மத்தியில் காரமிளகாய் சுவையுடன் விவாதம் நடந்தது. கோபத்தால்தான் என்று வாதிட்டவர்கள் குரல் தான் விண்ணை முட்டியது.

குஷ்புவை சமாளிக்க முடியாது என்று தெரிந்ததும் பிரபு பாதியிலேயே ஆட்டத்தை நிறுத்திவிட்டு திரும்பிச்சென்ற காட்சியை கமாரக்கள் குளோசப்பில் பதிவு செய்தன.

அத்தோடு-நடிகர்கள் அணியின் துடுப்பாட்டம் முடிவுக்கு வந்தது.

### வெற்றி பெற்றது எப்படி? நக்மா சொன்ன விளக்கம்

கிரிக்கெட் போட்டிகள் முடிவுற்றதும் நடிகைகளிடம் காதிலை பூ கந்தசாமி பேட்டி கண்டார்.

**கே:- *உங்கள் அணி வெற்றி பெறும் என்று நினைத்தீர்களா நக்மா?***

**நக்மா:-** *எங்கள் பந்துகளுக்கு நடிகர்கள் தாக்குப் பிடிக்கமாட்டார்கள் என்று மூன்று நாட்களுக்கு முன்னரே எனக்குத் தெரியும்.*

**கே:- *எதிர் அணியில் நன்றாக துடுப்பாடியவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்?***

**நக்மா:-** *பிரபுதேவாவிடம் வேகம் இருக்கிறது. ஆனால் ஆரம்ப வேகம் முடிவில் இல்லை. முதலிலேயே அவசரப்பட்டு மட்டையை வீசுவதால் பின்னர் களைத்துவிடுகிறார். அதனால் தான் முதலில் சிக்ஸர் அடித்தவரால் பின்னர் பவுண்டரிகூட அடிக்க முடியவில்லை.*

**கேள்வி:- *பிரபு எப்படி?***

**நக்மா:-** *அனுபவமுள்ளவர். சீனியர். ஒவ்வொரு அடியையும் ஓங்கி அடித்தாடுகிறார். ஆனாலும் குஷ்புவின் பந்துவீச்சில் திணறிப் போனது ஏன் என்றுதான் தெரியவில்லை. யோசித்துக் கொண்டிருக்கிறேன்.*

**கேள்வி:- *மனிஷா கொய்ராலா, ஷில்பா ஷெட்டி போன்றோர் கலந்துகொள்ள வந்திருந்தால் நீங்கள் கப்ரனாக இருந்திருக்க முடியாதாமே?***

**நக்மா:-** *எந்த கழுதை சொன்னது? எந்தக் குதிரை வந்தாலும் இந்தக் குதிரைதான் ஜெயிக்கும். மனிஷா, ஷில்பா, யார்? அவர்கள், அவர்கள் இலட்சணம் என்ன? தெரியாதா எனக்கு? (ஆங்கிலத்தில் கெட்டவார்த்தைகளால் திட்டுகிறார்)*

### தோல்வி கண்டது ஏன்? பிரபுதேவா கூறும் கருத்து.

நடிகையர் அணியிடம் நடிகர்கள் அணி தோல்வி கண்டது ஏன்? என்று நடிகர்கள் அணி கப்ரன் பிரபுதேவாவிடம் கேட்டோம். அப்போது அவர் தெரிவித்ததாவது;


நாங்கள் முதலிலேயே அவசரப்பட்டு விட்டோம் என்று நினைக்கிறேன்.

மெல்ல மெல்ல ஆரம்பித்து, நிதானமாக தொடர்ந்து, இறுதியில் வேகத்தை காட்டி ஆடியிருக்க வேண்டும் என்பது அனுபவத்தின் மூலம்தானே தெரிகிறது.

நக்மாவின் ஒவ்வொரு பந்தையும் நிதானமாக எதிர்கொண்டிருக்க வேண்டும். பந்தை கண்டதும் நமது அணியில் சிலர் பயந்து விட்டார்கள். வேறு சிலர் உணர்ச்சிவசப்பட்டுவிட்டார்கள். அதாவது எப்படியாவது தூள் கிளப்பவேண்டும். அசத்திப்படவேண்டும் என்று உணர்ச்சிவசப்பட்டுவிட்டார்கள். என்று தெரிவித்தார் பிரபுதேவா.

அப்போது குறுக்கிட்ட நிருபர் ஒருவர், "பந்துவீச்சிலும் உங்கள் அணி சிறப்பாகச் செய்யவில்லையே ஏன்?" என்று வினாக்கணை தொடுத்தார்.

"பந்தை கையாளும் அனுபவம் கைவரப் பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். இதெல்லாம் ஒரு அனுபவம்தானே. போகப்போக சரியாகிவிடும். அடுத்த தடவை போட்டி நடந்தால் நடிகையர் அணியைத் தோல்விகாண வைக்கிறோமோ இல்லையா பாருங்கள்" என்றார் பிரபுதேவா.



● யாவுமே சுத்தமான கற்பனை ●

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# உயிர் அள்ளும் வெள்ளம்



அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
332033

# ஆகவே அதனால்



மனிதனை மண்ணில் புதைத்து விட்டார்களோ, யார் அந்தக் கொடிய வர்கள்? என்று பதைத்துப் போயிருப்பீர்கள்.

கொடுமைதான். ஆனால் மனிதன் செய்த கொடுமையல்ல. இயற்கையின் கோரத் தாண்டவம்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் 1995 இல் கடும்புயல் அடித்தது. வெள்ளம் சீறுதலோடு பாய்ந்தது.

பாய்ந்த வெள்ளத்தில் உயிரோடு அள்ளிச் செல்லப்பட்டவர்களில் ஒருவர்தான் கமராவால் பதிவு செய்யப்பட்டார். இந்தக் காட்சியை படமெடுத்தவர் உடனடியாக மீட்புப் படைக்கு தகவல் சொன்னதால் காரியம் நடந்தது. வெள்ளத்தில் குதித்த மீட்புப்படையால் இந்த மனிதர் மீட்கப்பட்டார். மீட்கப்படாமல் எத்தனைபேர் மூச்சைவிட்டிருப்பார்களோ?!

ஈடன் கார்டன் மைதானத்தில் இந்திய கிரிக்கெட் அணி தோற்பது அரிது என்ற நம்பிக்கை பொய்த்துப் போனது. போட்டியை நேரில் காணச் சென்ற ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரசிகர்களில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானவர்களுக்கு வாழ்க்கையே வெறுத்துப்போய் விட்டது. அந்தளவுக்கு மோசமான தடுப்பாட்டத்தில் அலுப்பேற்றியது இந்திய அணி. என்றாலும் டெண்டுல்கர் ஏமாற்றவில்லை. அசாருதீன் ஏமாற்றிவிட்டார். காரணம் டெண்டுல்கர் பந்து தடுப்பில் அசாத்திய திறமையைக் காண்பித்ததுபோல தடுப்பாட்டத்தில் அசாரும், ஏனையோரும் பிரகாசித்திருந்தால் இந்தியா ஜெயித்திருக்கும். வெற்றியை விரல் நுனியில் தவறவிடுவது இந்திய அணியின் வாடிக்கையாகிவிட்டது.

இந்திய அணியின் பலவீனம் என்று முரசு தொடர்ந்து சுட்டிக்காட்டிய விடயம், தேவையான நேரத்தில் அணி சீறியெழாமல் இருப்பதுதான். ஈடன் கார்டனிலும் அதுதான் நடந்தது.

கிரிக்கெட் அணிகளிலேயே பிரபலமான நட்சத்திர ஆட்டக்காரர்கள் வரிசை உள்ள அணி இந்திய அணிதான். அசாருதீன், டெண்டுல்கர், வினோத் காம்ளி, சித்து, நயன் மொங்கியா, ஜடேஜா என்று சகலருமே நட்சத்திர அந்தஸ்து உள்ளவர்கள்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியிடம் காணப்பட்ட உத்வேகம் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் மிஸ்ஸிங்.

இறுதிவரை போராடுவதில் சளைக்காத இலங்கை அணியை எதிர்கொள்ளும் வற்றாத உற்சாகம் இந்திய அணியிடம் இல்லாமல் போனதுதான் தோல்விக்கு காரணம்.

போட்டி நடந்த அன்று இருந்த காலநிலைப்படி பின்னால் துடுப்பெடுத்தாடும் அணிக்கு பாதகம் என்பதையும் இந்திய அணி கணிப்பிடத் தவறிவிட்டது. அதனால் இலங்கையை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

காலநிலை, அதிர்ஷ்டம் என்பவற்றுக்கு அப்பால் வெல்ல வேண்டும் என்ற உத்வேகம்தான் மிக முக்கியம்.

# தங்கமடி தங்கம்



படம் 1

படம் 1 இல் இருப்பதுதான் நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டவுடன் தங்கத்தின் தோற்றம். பிறவுன், சிகப்பு மற்றும் மஞ்சள் வர்ணத்தில் தொலிப் பவைதான் தங்க அணுக்கள். பச்சை நிறத்தில் இருப்பது கார்பன் அணுக்கள். அவற்றிலே ஒட்டியிருக்கும் தங்க அணுக்களை இரசாயனச் சேர்வைகளால் சுத்திகரித்து பிரித்தெடுக்கப்பட்ட பின்னர்தான் 24 காரட் தனித் தங்கம் கிடைக்கிறது.

படம் 2 இல் காணப்படுவது தங்கத் தகடு. சுத்தியலால் அடித்து விரிக்கப்பட்டது. இயற்கையாக கிடைக்கும் மூலகங்களில் தங்கம்தான் மிக இலகுவாக வளைக்கப்படக் கூடியது. விரிக்கப்படக்கூடியது.



படம் 2

1 கிராம் எடையுள்ள தங்கத்தை சுமார் 2.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு இழுத்து தங்கக் கம்பியாக்கலாம். தாராளமாக ஒத்துழைக்கும். 1 அவுன்ஸ் தங்கத்தை 43 மைல்கள் வரை தட்டி இழுத்து நீளமாக்கலாம்.

உலகில் உள்ள மூலகங்களில் வளைக்கவும், விரிக்கவும் நீட்டவும் வசதியானது என்பதால் உலகசாதனைப் புத்தகத்திலும் தங்கம் தனியிடம் பெற்றுள்ளது.

# முறிந்த காதல்



இளமைத் தோற்றத்தோடு இருப்பது சாள்ஸும், டயானாவும் தான். இந்த ஜோடிப் பொருத்தத்தைக் கண்டு அன்று வியக்காத கண்களே கிடையாது.

கனவுக் காட்சிபோல அனைத்தும் இன்று முடிந்து போனது.

விவாகரத்து செய்வதில் இழுபறிப்பட்டாலும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போது ஒருவருக்கொருவர் முகத்தை திருப்பிக் கொள்கின்றனர்.

டயானாவுக்கு சாள்ஸ்மீது கடும் வெறுப்பு, ஆனால், சாள்ஸ் மூலமாக கிடைக்கும் சொத்தை இழக்க விருப்பமில்லை. உலகெங்கும் வியக்கப்பட்ட ஜோடி விவகாரமான ஜோடியாக மாறியிருக்கிறது.

டயானா மீது கெட்ட பெயர் ஏற்படுத்த சாள்ஸ் வட்டாரம் திட்டமிட்டு வேலை செய்கிறதாம்.

அரண்மனையில் இருந்தபோது காவலர்கள், உதவியாளர்கள் ஆகியோருடன் டயானா தொடர்பு வைத்திருந்ததாக ஒருவர் புத்தகம் எழுதியிருக்கிறார். புத்தகத்தை எழுதியவரும் டயானாவின் உதவியாளராக இருந்தவர்தான்.





அரண்மனைக்குள் தனது உடல் தெரியும் ஆடைகளை அணிந்தபடி டயானா சுற்றித்திரிவார். வாட்ட சாட்டமான ஆண்களைக் கண்டால் குறிவைத்து விடுவார் என்றெல்லாம் தாறுமாறாக எழுதியிருக்கிறார் டயானாவின் முன்னாள் உதவியாளர்.

டயானாவுக்கு எதிராக கூறப்படும் குற்றச்சாட்டுகளில் பல புனையப்பட்டவை. ஆனாலும் டயானாமீது உள்ள மோகத்தால் அவர் தொடர்பான வதந்திகளுக்கும் ஒரு 'கிக்' இருக்கத்தான் செய்கிறது.

டயானாவின் பின்னால் கமராவோடு பத்திரிகையாளர்கள் அலைவதும் அதனால்தான்.



[illegible] 28, [illegible] மார்ச் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.